www.onlineuthayan.com

பக்கங்கள்: 28

# உதயன்

சுடர் 27
கதிர் 118

வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 10 வெள்ளிக்கிழமை (23/03/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


## அமெரிக்கத் தீர்மானம்

# வெற்றி

### உலகத்தமிழர்கள் மகிழ்ச்சி

## ஆதரவு – 24, எதிர்ப்பு – 15, நடுநிலை – 8

- ஜெனிவாவில் இருந்து குகா -

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்சபையில் இலங்கை மீது அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் நேற்று வெற்றிபெற்றது. தீர்மானத்துக்கு ஆதரவாக 24 நாடுகளும் எதிராக 15 நாடுகளும் வாக்களித்தன. 8 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியிருந்தன.

மனித உரிமைகள் சபையின் நேற்றைய அமர்வு காலை 10 மணிக்கு ஆரம்பமாகிய போது அதன் 47 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளும் அங்கிருந்தனர். சபையின் தலைவர் லாரா டுபுவே லசேரி இலங்கை மீது அமெரிக்கா கொண்டு வந்ததீர்மானத்தைவாசித்தார். தொடர்ந்து உறுப்பு நாடுகள் அனைத்துக்கும் கருத்துத் தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

அமெரிக்காவின் பரம எதிரியான கியூபா விவாதத்தை ஆரம்பித்தது. இலங்கையில் போர்க்குற்றங்களும் மனித உரிமைகள் மீறல்களும் இடம்பெற்றன என்பதை அது ஏற்றுக் கொண்டாலும் அவை பற்றி விசாரிப்பதற்கு இலங்கைக்கு இன்னும் 04

### வாக்கெடுப்பு விவரம்

| ஆதரவு | எதிர்ப்பு |
|---|---|
| 01. ஆஸ்திரேலியா | 01. பங்களாதேஷ் |
| 02. பெல்ஜியம் | 02. சீனா |
| 03. பெனின் | 03. பாகிஸ்தான் |
| 04. கமரூன் | 04. கியூபா |
| 05. சிலி | 05. ஈக்குவடோர் |
| 06. கோஸ்டரிக்கா | 06. இந்தோனேசியா |
| 07. செக் குடியரசு | 07. குவைத் |
| 08. கௌதமாலா | 08. மாலைதீவு |
| 09. ஹங்கேரி | 09. மௌறிற்றானியா |
| 10. இந்தியா | 10. பிலிப்பைன்ஸ் |
| 11. இத்தாலி | 11. கட்டார் |
| 12. லிபியா | 12. ரஷ்யா |
| 13. மொரிடஸ் | 13. சவூதி அரேபியா |
| 14. மெக்சிக்கோ | 14. தாய்லாந்து |
| 15. நைஜீரியா | 15. கொங்கோ |
| 16. நோர்வே | **புறக்கணிப்பு** |
| 17. பெரு | 01.அங்கோலா |
| 18. போலந்து | 02.பொட்ஸ்வானா |
| 19. மோல்டோவா | 03.பேர்கினா பசோ |
| 20. ரோமானியா | 04.ஜிபூடி |
| 21. ஸ்பெயின் | 05.ஜோர்தான் |
| 22. சுவிற்ஸர்லாந்து | 06.கிர்கிஸ்தான் |
| 23. அமெரிக்கா | 07.மலேசியா |
| 24. உருகுவே | 08.செனகல் |

## தீர்மானத்தை ஏற்க இலங்கை மறுப்பு

### சபையில் தெரிவித்தார் சமரசிங்க

ஜெனிவா, மார்ச் 23

இலங்கை தொடர்பில் அமெரிக்கா முன்வைத்துள்ள தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என இலங்கையின் மனித உரிமைகள் விசேட பிரதிநிதி அமைச்சர் மஹிந்த சமரசிங்க நேற்று ஜெனிவா தீர்மானம் மீது உரையாற்றும்போது 04

## நியாயத்தை விளக்கியது அமெ.

ஜெனிவா, மார்ச் 23

சமத்துவம், கௌரவம், நீதி, சுயமரியாதை ஆகியவற்றோடு கூடிய நிரந்தர சமாதானத்தை இலங்கை மக்கள் எட்டுவதற்கு உதவும் நோக்கையே இந்தப்பிரேரணை கொண்டுள்ளது - என்று ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் எலின் சேம்பர்லெய்ன் டொனாகு தெரிவித்தார்.

ஜெனிவாவில் நேற்று வியா 04

## உரிமைகளை வென்றெடுக்க இது காத்திரமான முதற்படி

### கூட்டமைப்பு வரவேற்பு

கொழும்பு, மார்ச் 23

ஜெனிவா மனித உரிமை கூட்டத்தொடரில் அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்ட இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் என்பவற்றை ஊக்குவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றுள்ளது.

இந்தத் தீர்மானம் இனவேறுபாடின்றி இலங்கையர் அனைவருக்கும் நன்மையளிக்குமென நாம் நம்புகிறோம் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கைக்கு எதிராக அமெரிக்காவின் தீர்மானமும், மனித உரிமைகள் சபையின் தீர்மானமும், அரசு தற்போதைய நிலையிலிருந்து விலகி மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான காத்திரமான முடிவுகளை எடுப்பதற்கும் உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் உந்துசக்தியாக இருக்கும் என நம்புகின்றோம்.

மனித உரிமை கூட்டத் தொடரில் இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் என்பவற்றை ஊக்குவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான முதற்படியாகக் கூட்டமைப்பு கருதுகிறது.

அத்துடன் தமிழ் மக்கள் நேச நாடுகளுடன் நெருங்கிய தொடர்பை பேண வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அது எடுத்துக் காட்டுகிறது.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்யும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானத்துடன் நேரடியாகத் தொடர்புபட்டிருந்த நாடுகளுடன் கூட்டத்தொடருக்கு முன்னரும் கூட்டத்தொடரின் போதும் பல்வேறு தொடர்பாடல்களையும் கலந்துரையாடல்களையும் நடத்தியிருந்தது.

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுகின்ற கருமத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் பொறுப்புடனும் இராஜதந்திர தீர்க்கதரிசனத் 04




மங்கலகரமான திறப்பு விழா

"வடக்கின் வசந்தம்" அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எமது நிறுவனத்தினரால் நவீன முறையில் நிர்மாணிக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான, இல.128, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் இன்று 23.03.2012 ஆம் திகதி காலை 7.30 மணியளவில் பொது மக்கள் பாவனைக்குத் திறந்து வைக்கப்படவுள்ளதென்பதை வாகன ஓட்டுநர்கள் அனைவருக்கும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

தவிசாளரும், இயக்குநர்களும்.
லிவபூள் நெவிகேஷன் (வ/து) நிறுவனம்.


### கனேடிய எம்.பிக்கள் யாழ். வருகை

கொழும்புக்கு நேற்றுமுன்தினம் வருகை தந்த கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ். மாவட்டத்துக்கு இன்று மாலை வருகை தந்தரவுள்ளனர். கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயட்டின் பணிப்பின் பேரில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கிரிஸ் அலக்ஸ்சாண்டர், ரிக் டகஸ்ரா மற்றும் செனட்டர் வேன்லைட் ஆகியோரே இன்றைய தினம் யாழ். மாவட்டத்துக்கு வருகைதரவுள்ளனர். யாழ். மாவட்டத்துக்கு இன்று 4.45 மணியளவில் வருகை தரும் குழுவினர், யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

### ஊடகவியலாளர்களுக்கு பாகிஸ்தானில் பயிற்சி

தகவல் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் ஜாப்பா அபயவர்த்தனவின் ஆலோசனைக்கு ஏற்ப பாகிஸ்தானில் ஊடகவியலாளர்களுக்குப் பயிற்சி வழங்கும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளது. ஜனாதிபதியின் பாகிஸ்தான் பயணத்தின்போது இதற்கான பேச்சுக்கள் நடைபெற்றன.

### சொல்ஹெய்மின் பதவி பறிபோனது

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் சமரச முயற்சிகளில் ஈடுபட்ட நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். நோர்வேயில் சுற்றுச்சூழல் மற்றும் சர்வதேச உதவிகளுக்கான அமைச்சராக எரிக் சொல்ஹெய்ம் பதவி வகித்து வந்தார். கட்சித் தலைமையின் பதவி நீக்க முடிவால் எரிக் சொல்ஹெய்ம் கடும் அதிருப்தியில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

### இலங்கைக்கு வெற்றியாம்

ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டு வந்த இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை 15 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. இது இலங்கைக்கு கிடைத்த இராஜதந்திர வெற்றி என்று வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் நெருக்கடிகளையும் மீறி இலங்கைக்கு சார்பாக வாக்களித்த குறித்த 15 நாடுகளுக்கும், வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் இலங்கைக்கு ஆதரவு தெரிவித்த 8 நாடுகளுக் கும் தான் நன்றி தெரிவிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

### ஒப்புதல் வாக்கு மூலம் நிராகரிப்பு

விடுதலைப்புலிகளுடன் இணைந்து பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள விசுவமடுவாசி ஒருவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை யாழ். மேல் நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது. நேற்று குறித்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது சந்தேக நபரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பற்றி உண்மை விளம்பல் கட்டளை வழங்கப்பட்டது. அதன் பின்னர் வழக்குத் தொடுநர் சார்பில் சந்தேக நபரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஒரு சான்றாக ஏற்க முடியாது என்று நீதிமன்றம் நிராகரித்தது. இது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக வழக்கு 30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# இலங்கையின் நல்லிணக்க முயற்சிக்கு ஜெனிவாத் தீர்மானம் புத்துயிரளிக்கும்

### ஹிலாரி கிளின்டன் நம்பிக்கை

ஜெனிவா, மார்ச் 23

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் 27 வருட யுத்தத்திற்கு பின்னர் இலங்கை அரசினால் மேற்கொள்ளப்படும் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு புத்துயிரளிக்கும் என அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்தார்.


அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டன் இலங்கை தொடர்பில் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

27 வருட கால உள்நாட்டு யுத்தத்தைத் தொடர்ந்து நல்லிணக்கத்தை நோக்கிய பாதையில் இலங்கை அரசு தொடர்ந்து முன்னேற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் இன்றைய நடவடிக்கை ஊக்குவிக்கும். இலங்கை மட்டுமே உண்மையான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறுதல்கள் ஊடாக நீடித்த அமைதியை அடைய முடியும் என்கிற தெளிவான, உறுதியான சமிக்ஞையை சர்வதேச சமூகத்துடன் சேர்ந்து அமெரிக்கா வெளிப்படுத்துகிறது.

நீடித்த அமைதியை இலங்கை அடைவதற்கு உதவவும் சர்வதேச சமூகம் தயாராக இருக்கிறது. அடுத்த நடவடிக்கைகள் தெளிவானவை. நல்லிணக்க ஆணைக் குழுவின் காத்திரமான பரிந்துரைகளை இலங்கை நடைமுறைப்படுத்துகிறதா என்பதையும் பொறுப்புக் கூறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா என்பதையும் நாம் கவனிப்போம்.

இந்த இலக்கை இலங்கை அரசு அடைவதற்கு அதனுடன் இணைந்து பணியாற்ற அமெரிக்கா தன்னை அர்ப்பணிக்கும். அத்துடன் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுடனான கலந்துரையாடல்களை நாம் எதிர்பார்த்திருக்கின்றோம்.



விழுமியங்கள், மதிப்பு மற்றும் காத்திரமான உரையாடல்கள் என்பவற்றின் அடிப்படை இலங்கை அரசுடன் நாம் கொண்டு இருக்கும் உறவுகளை மேலும் பயனுள்ள வகையில் தொடர்வோம். அனைத்திலும் முக்கியமாக இலங்கை மக்கள் அனைவருடனானதுமான உறவுகளை பலப்படுத்தவும் வேண்டிநிற்கின்றோம் - என்றுள்ளது.

# ஜெனிவாத் தீர்மானம் மக்களுக்கு எதிரானதல்ல

### அது அரசுக்கே எதிரானது என்கிறார் மனோ

கொழும்பு, மார்ச் 23

ஐ.நா மனித உரிமைகள் சபையின் தீர்மானம் திட்டவட்டமாக இலங்கை அரசுக்கு எதிரானது ஆகும். அது இந்த நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரானது அல்ல. அதை இந்த நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் எதிரான தீர்மானமாகக் காட்டி தமது குரூரப் பேரினவாத முகத்தை மூடி மறைக்க இந்த அரசு முயல்கிறது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த உண்மை மூளையுள்ளவர்களுக்கு விளங்க வேண்டும். இதை விளங்கி கொள்ள முடியாதவர்கள், முட்டாள்களாகவோ அல்லது அரசுக்கு துதிபாடும் எடுபிடிகளாகவோ அல்லது இனவாதிகளாகவோ இருக்க வேண்டும்.

உங்கள் பொய்களை நம்ப நாம் இனியும் தயார் இல்லை என உலகம் கூறிவிட்டது. திருந்துவதா அல்லது மேலும் படுகுழியில் விழுந்து நாசமாவதா என்பதை அரசுதான் தீர்மானிக்க வேண்டும் - என்றுள்ளது.

(த)

# அமெரிக்கக் குழு கொழும்புக்கு

கொழும்பு, மார்ச் 23

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணை ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டின் ஜெனிவா அமர்வில் நேற்று நிறைவேறியுள்ள நிலையில், அமெரிக்காவின் உயர்மட்ட தூதுக்குழுவொன்று எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பு வரவுள்ளது.

கொழும்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட பல அரசியல் கட்சிகளின் பிரமுகர்களை இந்தக் குழு சந்திக்குமென அறியமுடிகின்றது.

# தீர்மானத்துக்கு எதிராக அரச எம்.பிக்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மார்ச் 23

இலங்கைக்கு எதிரான ஜெனி வாத் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்றக் கட்டடத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தனர். இத்தீர்மானத்தைக் கடுமையாக எதிர்த்துவரும் அமைச்சர்கள் விமல் வீரவன்ஸ மற்றும் சம்பிக்க ரணவக்க ஆகியோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.




நேற்று பிற்பகல் 12.15 மணியளவில் நாடாளுமன்ற அமர்வுதொடங்கும் முன்னர் ஒன்றுகூடிய சுமார் நூற்றுக்கு மேற்பட்ட அமைச்சர்களும், எம்.பிக்களும் ஜெனிவா தீர்மானத்திற்கு எதிரான கோஷங்களை எழுப்பியும் பதாகைகளை ஏந்தியும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

''ஐ.நா. மனித உரிமைப் பேரவையே இலங்கையை நிம்மதியாக இருக்கவிடு!'', ''அமெரிக்காவே, இலங்கை பெற்ற சமாதானத்தை அழிக்காதே!'', ''30 வருடங்களாகத் துன்பங்களை அனுபவித்த இலங்கைக்கு ஓய்வு தாருங்கள்'', ''ஜனாதிபதிக்கும், இலங்கைக்குமான ஜெனிவா சர்வதேச சதியை முறியடிப்போம்'' மற்றும் ''இலங்கையைப் பிரிக்காதே'' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை உறுப்பினர்கள் தாங்கியிருந்தனர்.

''எதிர்க்கட்சியே நாட்டைக் காட்டிக்கொடுக்காதே, இந்தப் போராட்டத்தில் எம்முடன் இணை'' உள்ளிட்ட பல கோஷங்களை தமிழிலும், சிங்களத்திலும் எழுப்பினர். சிங்கள நாடாளுமன்ற உறுப்பிணர்களும் தமிழ்மூல கோஷங்களை எழுப்பினர்.

இறுதியில் நாடாளுமன்ற வளாகத்திற்குள்ளேயே ஊர்வலமாகச் சென்று ஆர்ப்பாட்டத்தை நிறைவுசெய்தனர். இந்த ஆர்ப்பாட்டம் பிரதமர் டி.எம்.ஜயரட்னவின் தலைமையில் இடம்பெற்றது.(த)

# அமெரிக்க, இந்திய உறவை ஜெனிவா விவகாரம் பாதிக்காது

### இலங்கை அரசு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 23

இறுதிக்கட்ட சமரின்போது அமெரிக்கா பிரயோகித்த அழுத்தங்களுக்கு நாம் அடிபணிந்து செயற்படாததன் காரணமாகவே இன்று ஜெனிவாவரை சென்று அந்நாடு எமக்கு சவால் விடுக்கின்றது. ஜெனிவா மாநாட்டில் என்ன நடந்தாலும் நாம் எமது நிலைப்பாட்டைத் தளர்த்திக் கொள்ளப்போவதில்லை என்பதுடன், நாட்டின் கொள்கைகளையும் தாரைவார்க்கமாட்டோம் - என்று இலங்கை அரசு நேற்று திட்டவட்டமாக அறிவித்தது.

ஜெனிவா விவகாரத்தால் இலங்கைக்கும் அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளுக்குமிடையிலான உறவில் எத்தகைய பாதிப்பும் ஏற்படாது. எதிர்காலத்தில் நாம் இணைந்தே செயற்படுவோம் என்றும் அரசு தெரிவித்தது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன் போதே பதில் அமைச்சரவைப் பேச்சாளரும், பொருளாதார பிரதி அபிவிருத்தி அமைச்சருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஊடாகப் புலிகளை சரணடைவதற்கு அனுமதிக்குமாறு இறுதிக்கட்ட யுத்தத்தின்போது அமெரிக்கா எமக்கு அழுத்தம் பிரயோகித்தது. அதனை நாம் ஏற்கவில்லை; அனுமதியளிக்கவுமில்லை.

இலங்கை யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவராது என்றுதான் மேற்குலகம் கருதியது. ஆனால், நாம் முடித்துக் காட்டினோம். யுத்தகாலத்தில் வளைந்துகொடுக்காததன் காரணமாகவே எமக்கு எதிராக இன்று ஜெனிவா வரை சென்று கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு சவால் விடுக்கின்றது.

ஜெனிவா மாநாட்டில் தமக்கு எதிரான சவால்களை முறியடிப்பதற்கு தம்மால் முடிந்த அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளது. எனினும், ஜெனிவா மாநாட்டில் என்ன நடந்தாலும் எத்தகைய பிரதிபலன் வந்தாலும், நாம் எமது நிலைப்பாட்டைத் தளர்த்திக்கொள்ளமாட்டோம். அத்துடன், எமது நாட்டுக்கென்று சில கொள்கைகள் உள்ளன. அவற்றைத் தாரைவார்க்கவும் மாட்டோம்.

மேற்குலகம் முந்தியது ஏன்?

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் நிலைவரங்களைத் தெளிவுபடுத்துவதற்கு எமக்கு ஒக்டோபர் மாதமே சந்தர்ப்பம் வழங்கப்படும்.

அதுவரை காலஅவகாசம் இருந்திருந்தால் எம்மால் மேலும் பல காத்திரமான நடவடிக்கைளை நாட்டில் முன்னெடுத்திருக்க முடியும். மீள்குடியேற்றம், புனர்வாழ்வு ஆகிய நடவடிக்கைகளைப் பூரணப்படுத்தியிருக்கலாம். ஆனால், இதனைக் கருத்திற் கொள்ளாது அமெரிக்கா முந்தியது ஏன்?

**நாம் செய்ய வேண்டியவற்றைச் செய்வோம்**

ஜெனிவாவுக்கும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கும் சம்பந்தமில்லை. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் பிரேரணையை சமர்ப்பிப்பதற்கு முன்னரே நாம் நல்லிணக்க குழுவை நியமித்து அறிக்கை பெற்றுள்ளோம்.

அந்தக் குழு தனது அறிக்கையில் பரிந்துரை செய்துள்ள சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். அதற்கான கடப்பாடு எமக்குள்ளது. ஆனால், இந்த விடயத்தில் வெளிச் சக்திகளின் தலையீடு அவசியமில்லை என்றே நாம் கருதுகின்றோம் - என்றார்.

(த-சி)

# அரசு தீர்வுகாணத் தவறியதாலேயே சர்வதேசம் அதைக் கையிலெடுத்தது

### நாடாளுமன்றில் ஐ.தே.க.

கொழும்பு, மார்ச் 23

எமது நாட்டுப் பிரச்சினை நாடாளுமன்றத்தின் ஊடாகத் தீர்க்கப்படாதமையால் தான் அதை சர்வதேசம் இப்போது கையில் எடுத்து ஜெனிவாவரை கொண்டுசென்றுள்ளது என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எமது நாட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசியல் தீர்வை முன்வைப்பதற்கு எதிர்க்கட்சி முழு ஆதரவையும் தரும் என்று நாம் அரசிடம் கூறிவந்தோம்.

எமது கூற்றைக் கருத்தில் கொள்ளாது எதிர்க்கட்சிகளைப் பிளவுபடுத்தும் வேலையை அரசு செய்தது. இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் பிளவுபடுத்தப்போவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எமது நாட்டுப் பிரச்சினை நாடாளுமன்றத்தால் தீர்க்கப்படாதமையால் அதை சர்வதேசம் தனது கையில் எடுத்து ஜெனிவாவரை கொண்டுசென்றுள்ளது. இனி அந்தப் பிரச்சினையில் எம்மால் தலையிட முடியாது.

யுத்தம் இடம்பெற்றபோது யுத்தக்குற்றங்கள் இடம்பெற்றன என்று கூறப்படுகின்றது. இதற்குப் பதிலளிக்க முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவால் தான் முடியும். யுத்தத்தில் என்ன நடந்தது என்று அவருக்குத்தான் தெரியும். அவர் பதிலளிப்பதற்கு அரசு அவருக்குச் சந்தர்ப்பமளிக்கவில்லை. வழக்குக்கு மேல் வழக்குப் போட்டு அவரை சிறையில் அடைத்துவைத்துள்ளது.

அதுமாத்திரமின்றி 17 ஆம் திருத்தச்சட்டம் நீக்கப்பட்டமையும் ஒரு குற்றச்சாட்டாக ஜெனிவாத் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தை நீக்க வேண்டாம் என்று நாம் ஏற்கனவே அரசிடம் கூறியிருந்தோம்.

ஆட்கடத்தல் மற்றும் ஊடக அடக்குமுறை போன்றவற்றை நிறுத்துமாறு நாம் அரசிடம் அடிக்கடி கேட்டோம். அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதன்விளைவு தான் சர்வதேசம் எமது பிரச்சினையைக் கையில் எடுக்கக் காரணம் - என்றார்.

### குடாநாட்டில் வன்முறை அதிகரிப்பைக் கண்டித்து

# பெண்கள் மௌன ஊர்வலம்

*யாழ்ப்பாணம்,மார்ச் 23*

*சிறுவர்கள் மற்றும் பெண்களுக்காகச் செயற்பட்டு வரும் சகல தரப்பினரையும் சட்டம் ஒரு போதும் ஏமாற்றக் கூடாது.*

*யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலமாக பெண்கள் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளன.*

*பெண்கள் சிறுவர்களுக்கு எதிரான வன்முறையைக் கட்டுப்படுத்தி இல்லாதொழிக்கும் வகையில் பெண்கள் அமைப்பாகிய நாங்கள் எமது மௌனத்தைக் கலைத்து சமூகத்தின் நலனைக் கட்டியெழுப்ப திட சங்கற்பம் பூண இன்றைய நாளில் உறுதி கொள்கிறோம்.*

இவ்வாறு மனித உரிமைகள் இல்லமும் தேவை நாடும் மகளிர் அமைப்பும் கூட்டாகத் தெரிவித்துள்ளன.

இது தொடர்பான மனு ஒன்றையும் இவர்கள் நேற்று யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் கையளித்துள்ளனர்.

மனித உரிமைகள் இல்லமும், தேவை நாடும் மகளிர் அமைப்பும் யாழ்ப்பாணத்தில் பெண்கள் சிறுவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள், கொடுமைகள், பாலியல் வன்முறை, கொலைகள் போன்ற அராஜக செயல்களைக் கண்டித்து நேற்று மௌன ஊர்வலம் ஒன்றை நடத்தின.

நல்லூர் கந்தசாமி கோயில் முன்றிலில் இருந்து யாழ். செயலகம் வரை இடம் பெற்ற இந்த ஊர்வலத்தின் நிறைவில் யாழ்.அரச அதிபரிடம் மனு ஒன்று கையளிக்கப்பட்டது. இதுவரை இடம் பெற்ற வன்முறைகளைக் குறிப்பிட்டு இந்த மனு கையளிக்கப்பட்டுள்ளது.




நல்லூரில் இருந்து கோயில் வீதி, நக்காவீதி வழியாக யாழ். செயலகத்துக்குச் சென்ற மௌன ஊர்வலத்தில் கணிசமான பெண்கள் கலந்து கொண்டனர்.

'இச்சை கூடிய மனிதா ஏன் தளிர்களைத் தின்னுகிறாய்', 'பாதிக்கப்பட்ட பெண்களுக்காக உரிமைக் குரல் கொடுப்போம்', 'பெண்களே வீறுகொண்டு எழுவீர்', 'சாதனைகளைப் படைப்பதற்காக பயிரைத் தின்னும் வேலிகளை அடியோடு அழிப்போம்' என்ற கோஷங்கள் அடங்கிய பதாகைகளும் ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்டன.

யாழ்.செயலகத்தில் தேவை நாடும் மகளிர் அமைப்பைச் சேர்ந்த த.சுமதி, மனித உரிமைகள் இல்லத்தைச் சேர்ந்த க.தர்சினி ஆகியோர் அரச அதிபரிடம் மனுவைக் கையளித்தனர். (ம-7-16-13)

## யாழ். கலட்டியில் மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்.வண்ணார்பண்ணை கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான கஜா வல்லி-மகாவல்லி சமேத சுப்பிரமணிய சுவாமி நுதனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஸ்தூபி அபிஷேகம் தொடர்ந்து இடம்பெறும்.

இன்று காலை கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகி நாளை சனிக்கிழமை காலை 8மணி முதல், பிற்பகல் 3 மணிவரை எண்ணெய் காப்புச் சாத்துதல் இடம் பெறும்.

பிரதிஷ்டா பிரதமகுரு சிவஸ்ரீ துரையப்பா ஐயத் விவேகானந்தக் குருக்கள் தலைமையில், கும்பாபிஷேக நிகழ்வுகள் நடைபெறும். வல்வெட்டி வேவில் ஸ்ரீ வீரகத்தி விக்னேஸ்வர ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ வே. பாலச்சந்திரக் குருக்கள் ஆசியுரை வழங்குவார். (ஒ)

## இசைச் சங்கமம் நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 23

வடமாகாண பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் "இசைச் சங்கமம்" நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடை பெறவுள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி கலந்து கொள்வார்.

இசை ஆர்வலர்களுக்காக நடத்தப்படும் இந்த நிகழ்வில் கர்நாடகம், ஹிந்துஸ்தான், கிராமியஇசை, தமிழ் இசை என பல்வேறு இசைச் சங்கமங்கள் நிகழ்த்தப்படவுள்ளன. (ம-14)

## கடலட்டை கடத்தியோர் கைது

சட்டவிரோதமாக கடலட்டைகளைக் கடத்திய குருநகரைச் சேர்ந்த இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். இவர்கள் இருவரும் 100 கடலட்டைகளை வாகனமொன்றில் கடத்தியபோது கடற்படையினரிடம் மாட்டினர். யாழ்.நீதிமன்றில் இவர்கள் முற்படுத்தப்பட்டபோது அவர்களை 10 ஆயிரம் ரூபா ஆள்பிணையிலும், கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனத்தை 2 மில்லியன் ரூபா பிணையிலும் விடுவித்து நீதிவான் தீர்ப்பளித்தார்.(ங-4)

## நிகழ்வுகள்

**செயலமர்வு**

கட்டாயக்கல்வி மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பாக பெற்றோர்கள், பிள்ளைகளுக்கான செயலமர்வு இன்று உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் அன்ரன் பிரேமதாஸ் தலைமையில் நடைபெறும் இந்தச் செயலமர்வில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட பிராந்திய பணிப்பாளர் ரி.கனகராஜா, 'இலங்கையின் சட்ட அமைப்புகள் சிறுவர் உரிமைகள்' என்னும் தலைப்பிலும், யாழ்ப்பாணம் கல்வி அலுவலக முறைசாராக் கல்வி செயற்றிட் அலுவலர் ந.சண்முகராஜா "கட்டாயக் கல்விக்கான கட்டளையை அமுல்படுத்தும் குழுக்களது வேலைத்திட்டங்களும் பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களும்' என்னும் தலைப்பிலும் கருத்துரைகளை நிகழ்த்துவர். (ம-14)

**மழலையர் மகிழ்களம்**

கோண்டாவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் "மழலையர் மகிழ்களம்" முன்பள்ளி மாணவர்களின் நிகழ்வுகள் முற்பகல் 10 மணிக்கு பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

அபிவிருத்தி உதவியாளர் திருமதி மாதங்கி கோபிராஜ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சுகாதாரப் பழக்க வழக்கங்கள், கதையும் காட்சியும், மழலையரின் சுய ஆற்றலை வெளிப்படுத்தலும் பரிசில் வழங்கலும், கதை நேரம் போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ம-14)

**பொதுக்கூட்டம்**

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் அரச சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் முற்பகல் 10 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.(ம-100)

**விழிப்புணர்வு**

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் ஆனைக்கோட்டை கிராம உப அலுவலக பொது நூலகத்தின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு செயற்பாடு பிற்பகல் ஒரு மணிக்கு பொது நூலகத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் சுக வாழ்வில் யோகாசன செயற்பாட்டு விளக்கம் தொடர்பாக ஆனைக்கோட்டை சித்த ஆயுள் வேத வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி எஸ்.சரஸ்வதி கருத்துரை வழங்குவார். (ம-100)

**மகளிர் தினம்**

யாழ்.பிரதேச செயல கத்தின் ஏற்பாட்டில் யாழ். பிராந்திய சுகாதார சேவை கள் பணிமனை, டனிஸ் அகதிகள் பேரவை இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்வு காலை 9 மணிக்கு யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பிரதேச செய லாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். டனிஸ் அகதிகள் பேரவை தலைமை அதிகாரி எம்.பி. தினேசன், யாழ். சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எ.இ. ஞானசோதி, யாழ். பல்கலைக் கழக சட்ட விரிவுரையாளர் செல்வி கோசலை மனோகரன் ஆகியோர்- கலந்து கொள்வர். (ம-14)

## பயிரை மேய்ந்த வேலி; மாட்டினார் பொலிஸார்

### சுன்னாகத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

பாடசாலை மாணவி ஒருவரை மிரட்டி தன்னுடைய நண்பரைக் காதலிக்குமாறு தொல்லை கொடுத்த தமிழ் பொலிஸார் ஒருவர் பொது மக்களால் பிடிக்கப்பட்டு, ' உரிய மரியாதைகளுடன்' சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

வேலியே பயிரை மேய முற்பட்ட இந்தச் சம்பவம் குறித்து தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் உள்ள கல்லூரி ஒன்றில் பயின்று வரும் 14 வயது நிரம்பிய மாணவி ஒருவரை தன்னைக் காதலிக்குமாறு கூறி இளைஞர் ஒருவர் நீண்ட நாள்களாக தொல்லை கொடுத்து வந்தார். இதற்கு குறித்த மாணவி மறுக்கவே, தன்னைக் காதலிக்க விட்டால் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று குறித்த இளைஞன் தன்னுடைய நண்பர் குழுவுடன் வந்து மிரட்டி உள்ளார். அதன் பின்னர் குறித்த மாணவி செல்லும் இடமெல்லாம் தனது நண்பர்கள் பட்டாளத்துடன் பின்னால் செல்வது தொடர் கதையாகி விட்டது.

இந்த நிலையில் குறித்த மாணவி நேற்று பஸ் ஒன்றில் வந்த போது அவரை பின்தொடர்ந்தது இளைஞர் வழமை போல காதல் பிச்சை கேட்டு மிரட்டி உள்ளார். அவருக்கு பக்க பலமாக பஸ்ஸை பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிள்களில் அவரது நண்பர்களும் வந்துள்ளனர். அவர்களில் ஒருவர் தமிழ் பேசும் பொலிஸார்.

பஸ்ஸில் இருந்து இறங்கிய மாணவி வீட்டுக்குச் செல்ல முற்பட்ட போது இவர்களின் பின்தொடரும் படலம் முடியவில்லை. இதைக் கண்ணுற்ற பொது மக்கள் அவர்களைப் பிடிக்க முற்பட்ட போது ஏனைய இருவரும் தப்பித்துக்கொள்ள, பொலிஸ்காரர் மட்டும் மாட்டிக்கொண்டார். பின்னர் அவர் பொது மக்களால் நையப்புடைக்கப்பட்டபோது, " நான் பொலிஸ்" என்று கூறியுள்ளார். அதன் பின்னர் அவர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

நண்பருக்கு உதவ வந்த குறித்த பொலிஸ்காரர் மூளாயைச்சொந்த இடமாகக் கொண்டவர் எனவும், மண்டைதீவு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர் என்றும் கூறப்படுகிறது. (ங-86)

## சாகசத் தயார்படுத்தல்: 3 சிப்பாய்கள் காயம்

யாழ்ப்பாணம், மார்ச்23

பலாலி பாதுகாப்பு தலைமையகத்தின் ஏற்பாட்டில் இன்று தொடக்கம் 3 நாள்களுக்கு யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ள சாகச நிகழ்வுக்கான தயார்படுத்தல்களில் ஈடுபட்டிருந்த படையினரின் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் 2 பெண் இராணுவ பொலிஸ் சிப்பாய்கள் உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்கள் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாகத் தெரிய வருவதாவது:

பலாலி படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் இன்று தொடக்கம் மூன்று நாள்களுக்கு இடம்பெறவுள்ள சாகச நிகழ்வை முன்னிட்டு இராணுவத்தினர் நேற்று முன்தினம் துரையப்பா விளையாட்டு அரங்கில் தயார்ப்படுத்தல்களில் ஈடுபட்டனர்.

அப்போது மோட்டார் சைக்கிளில் ஆள்களை சுமந்து செல்லும் சாகசத்தின்போது மோட்டார் சைக்கிள் சறுக்கி விழுந்து விபத்துக்குள்ளானது.

இதன்போது இந்தச் சாகசத்தில் ஈடுபட்டிருந்த 2 பெண் இராணுவப் பொலிஸ் சிப்பாய்களும் ஒரு ஆண் பொலிஸ் சிப்பாயும் படுகாயமடைந்தனர்.

இவர்கள் மூவரும் சிகிச்சைக்காக உடனடியாக இராணுவ வாகனங்கள் மூலமாக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் இராணுவ படைத் தலைமையகத்தில் கடமை புரியும் பெண் சிப்பாய்களான ஹசான் சொய்சா (வயது - 22), எஸ்.கே. ஜெயசிங்க (வயது-20) ஆகியோரும் ஆண் இராணுவப் பொலிஸ் சிப்பாயான ஏச்.எம்.டி.பி. சந்திர நாயக்க (வயது - 20) என்பவருமே காயமடைந்தவர்களாவர்.

இவர்களில் எஸ்.கே. ஜெயசிங்க படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில்சேர்க்கப்பட்டுள்ளார். (ம-15)

# தீர்மானம் நிறைவேற்றம் குவிகிறது வரவேற்பு

## தமிழகத்தில் வெடிகொளுத்தி கொண்டாட்டம்

கொழும்பு, மார்ச் 23

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா சமர்ப்பித்த இலங்கை அரசுக்கு எதிரான பிரேரணை வெற்றி பெற்றதற்கு உலக நாடுகள் பலவும், ஈழத் தமிழர் ஆதரவு அமைப்புகளும், தமிழக அரசியல் கட்சிகளும் தமது மகிழ்வையும் வரவேற்பையும் வெளிப்படுத்தி உள்ளன.

இலங்கை அரசு பொறுப்புக் கூறும் தன்மையில் இருந்தும், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வழங்குவதில் இருந்தும் நழுவிச் செல்லாமல் இருப்பதற்கு இந்தத் தீர்மானம் உதவும் என்று கனடா அரசு தெரிவித்துள்ளது.

அதேபோன்று புலம் பெயர் நாடுகளில் உள்ள ஈழத் தமிழர் நலனில் அக்கறை கொண்ட அமைப்புகளும் தீர்மானம் நிறைவேறியதை வர்வேற்றுள்ளன.

இது வரையும் இலங்கைக்குள் மாத்திரம் அடைபட்டிருந்த ஈழத் தமிழர்களின் உரிமைப் பிரச்சினை இந்தத் தீர்மானம் மூலம் சர்வதேசமயப்படுத்தப்பட்டுள்ளதாகவும், தமிழர்களுக்கு அநீதி இனியும் விளைவிக்கப்பட்டால் சர்வதேசத்தின் ஆதரவு ஈழத்தமிழர்களுக்கு கிடைக்கும் என்பதுவும் இந்தத் தீர்மானம் நிறைவேறியதும் இலங்கை அரசுக்கு உணர்த்தப்பட்டுள்ளது என்று புலம் பெயர் ஈழத் தமிழ் ஆதரவு அமைப்புகள் கருத்து வெளியிட்டுள்ளன.

இலங்கை அரசின் கோர முகத்தையும், இறுதிப் போரில் தமிழ் மக்கள் மீது அந்த அரசு புரிந்த அட்டூழியங்களையும் அமெரிக்காவின் தீர்மானம் வெளிச்சம் போட்டு காட்டியுள்ளதாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இலங்கை இனவாத அரசுக்கு இது முதல் அடி தான். இன்னும் அது அடி வாங்கப்போகிறது என்று நாம் தமிழர் அமைப்பின் தலைவர் சீமான் மகிழ்ச்சி பொங்கத் தெரிவித்தார்.

இவர்களைத் தவிர தி.மு.க. தலைவர் கருணாநிதி, தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆகியோரும் தீர்மானம் நிறைவேறியதை வரவேற்று கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை,

ஜெனிவாத் தீர்மானம் நிறைவேறிய செய்தி வெளிவந்ததும் புலம்பெயர் நாடுகளிலும் தமிழகத்திலும் பட்டாசுகள் வெடித்து மகிழ்ச்சி ஆராவாரம் செய்யப்பட்டது. தமிழகத்தில் நேற்று மாலை அரசியல் கட்சிகள் தம்முடைய கட்சி பேதத்தை மறந்து, ஒன்றிணைந்து இனிப்புகள் வழங்கி தீர்மான வெற்றியைக் கொண்டாடியதாகவும் தெரியவருகிறது. (ங)

## 12 வருடங்களின் பின்னர் சொந்த இடத்துக்கு செல்கிறது

தென்மராட்சி, மார்ச் 23

எழுதுமட்டுவாழ் உப அஞ்சல் அலுவலகம் 12 வருடங்களின் பின்னர் இன்று சொந்த இடத்தில் இயங்க ஆரம்பிக்கவுள்ளது.

2000 மார்ச் 26 ஆம் திகதி இடம் பெற்ற யுத்தத்தால் மக்களுடன் இடம் பெயர்ந்த எழுதுமட்டுவாழ் உப அஞ்சல் அலுவலகம் நெல்லியடி, பருத்தித்துறை, கொடிகாமம் பகுதியில் இயங்கிவந்தது.

பளை அஞ்சல் அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த உப அஞ்சல் அலுவலகக் கட்டடம் முழுமையாக அழிவடைந்த நிலையில் காணப்பட்டது.

கடந்த வருட பிற்பகுதியில் எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்ததையடுத்து அங்குள்ள கட்டடமொன்றில் இன்று தொடக்கம் இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## இது தான் கிறிஸ்துவின் வழி.....

''நண்பனுக்காக உயிரைக் கொடுத்தல்.......

ஒரு கன்னத்தில் அறைபவனுக்கு மறுகன்னம் காட்டல்....

இவர்கள் அறியாமல் செய்கின்றார்கள் மன்னியும்.......

நீதிமான்களை அல்ல பாவிகளையே தேடி வந்தேன்.....

என் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல் நீங்களும் இருங்கள்..........''

இவைகள் தான் இயேசு கற்பித்த, போதித்த வாழ்ந்து காட்டின ஆயிரம் வழிமுறைகளில் சில...... ''பாவி சாகவேண்டும் என்பது என் விருப்பல்ல, அவன் மாறி வாழ வேண்டும் என்பதே என் விருப்பம்'' என இறைவன் சொல்வது எமக்கு தெளிவாக கேட்கின்றதா? எனச் சிந்திக்க வேண்டும்.




இறைவன் இரக்கமுள்ளவர். எல்லாவிதமான பாவங்களையும் மன்னிப்பவர், அதனாலேயே ''பாவ மன்னிப்பு'' எனும் மகிமை மிகு தேவ திரவியத்தை எமக்கு திருச்சபை மூலம் கொடுத்துள்ளார். ஆனால் பாவ மன்னிப்பு இருக்கின்றது எனும் எண்ணம் எம்மில் மன மாற்றத்தினைக் கொண்டுவருவதற்குப் பதிலாக......... தொடர்ச்சியான பாவம் செய்வதற்கான அனுமதி என எம் கிறிஸ்தவர்களில் பலர் நினைப்பதனால்தான், கிறிஸ்தவர்களாக இருந்துகொண்டே நாம் ''பயிர்களைத் தின்னும் வேலிகளாக'' மாறிக் கொண்டிருக்கின்றோம்.''

இயேசு ஆண்டவர் எமக்காக சிலுவையில் சிந்திய இரத்தம் விலை மதிப்பற்ற புனித இரத்தம், பாவங்களைப் போக்கும் வல்லமை நிறைந்த குருதி! எமக்காக அவர் தம்மையே தியாகம் செய்தார் என்பது உண்மை அவர் வாழ அவரின் சாயலாக விளங்கும் எம் அயலவருக்கு நாம் செய்வது என்ன?

அருட் திரு. ஜோசப் செல்வன் செ.தா
அருள் ஆச்சிரமம், யாழ்ப்பாணம்.

# இலங்கை – இந்தியக் கிரிக்கெட் ரத்துச் செய்யுமாறு கோரி மனு

## மதுரை நீதிமன்றில் தாக்கல்

மதுரை, மார்ச் 23

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளை ரத்துச் செய்யுமாறு கோரி மதுரை நீதிமன்றில் பொதுமக்கள் நலன் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இரு நாடுகளுக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டிகளை உடனடியாக ரத்துச் செய்யுமாறு மத்திய அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

இரு நாடுகளுக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டிகளை உடனடியாக ரத்துச் செய்யுமாறு மத்திய அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சிங்களவர்-தமிழர் இடையிலான முரண்பாடுகள் களையப்படும் வரையில் கிரிக்கெட் போட்டிகளை நடத்தக் கூடாது என அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வின் கிறிஸ்தோப்பர் என்ற சட்டத்தரணியே இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். இனப்பிரச்சினை காரணமாகவே இலங்கைக் கடற்படையினர், இந்திய மீனவர்களைக் கொலை செய்வது எல்லோரும் அறிந்த உண்மை என மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

உலகக் கிண்ணப் போட்டியில் வெற்றியீட்டிய அணி வீரர்களுக்குக் கோடிக் கணக்கில் பணம் வழங்கப்படுவதாகவும், மீனவர்கள் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழக்கும் சந்தர்ப்பங்களில் மூன்று லட்சத்துக்கும் குறைவான தொகையே நட்ட ஈடாக வழங்கப்படுவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (த)

# அமெரிக்கத் தீர்மானம்

01↘ அடுத்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரை கால்அவகாசம் வழங்கப்படவேண்டுமென அது வலியுறுத்தியது. தொடர்ந்து ஏனைய உறுப்பு நாடுகளும் தமது கருத்துக்களைத் தெரிவித்தன. இலங்கைக்கு ஆதரவான நாடுகள், இந்தப் பிரேரணை தேவையற்றது என அதனை தாங்கள் முழுமையாக எதிர்ப்பதாகவும் கூறின. எனினும் போர் முடிந்த பின் ஏற்கனவே மூன்று வருட காலம் இலங்கைக்கு அவகாசம் வழங்கப்பட்டு விட்டதால் மேலும் கால அவகாசம் வழங்குவது தேவையற்றது என அமெரிக்கா வாதிட்டது. இறுதியில் இலங்கை அரசின் சார்பில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க பதில் அளித்தார்.

அதன் பின்னர் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

நேற்றுமுன்தினம் வரை இலங்கைக்கு வெறும் 7 நாடுகள் மட்டுமே ஆதரவு தெரிவித்திருந்தன. ஆனால் சீனா திடீரென உள்ளே புகுந்து இலங்கைக்கு இராஜதந்திர ஆதரவைத் தெரிவித்து ஏனைய நாடுகளிடமும் பரப்புரையில் ஈடுபட்டது. சீனா கொடுத்த துணிவை அடுத்தே மீதி 8 நாடுகளும் இலங்கையை ஆதரிக்கத் துணிந்தன. எனினும் நேற்றுக்காலை தமக்கு 17 நாடுகளின் ஆதரவு கிடைக்கும் என இலங்கை தீவிர எதிர்பார்ப்பைக் கொண்டிருந்தது.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நாடாளுமன்றத்தில் உறுதியளித்தபடி இலங்கை மீதான தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு தெரிவித்து வாக்களித்தது. ஜெனிவா தீர்மானத்தில் சில சொற்கள் இந்தியாவின் அழுத்தம் காரணமாக மாற்றப்பட்டன. (உ)

# நியாயத்தை விளக்கியது அமெ.

01↘ ழக்கிழமை நிகழ்ந்த 19ஆவது அமர்வில் ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் எலின் சேம்பர்லெய்ன் டொனாகு இலங்கை மீதான பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இலங்கையின் நல்லிணக்கப்பாட்டையும், கடப்பாடுகளையும் ஊக்குவிக்கும் பொருட்டு அமெரிக்கா 1, 2 வரைவுத் திட்டத்தைப் பரிசீலனைக்காகவும், ஒப்புதலுக்காகவும் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறது. இந்த வரைவுத் திட்டத்துக்கு 40 உப அனுசரணையாளர்களின் பெரும் ஆதரவு உண்டு. சில திருத்தங்களுடன் வரைவுத் திட்ட நகல்கள் விநியோகிக் கப்பட்டுள்ளன.

இலங்கையின் நீண்ட கால, துயரமான போர் முடிவுற்று மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டன. இலங்கை மக்களுக்கு சமாதானத்தோடு கூடிய ஓர் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் நலன்விரும்பி நாடுகளைப் போன்று எனது அரசும் இணைந்து செயற்பட்டுவந்துள்ளது.

கடந்த மூன்றாண்டுகளாக எனது அரசு, இதன்பொருட்டு இலங்கை அரசின் உச்ச மட்ட அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டுவந்துள்ளது.

கடந்த மூன்று வருடங்களில் நிரந்தர தேசிய நல்லிணக்கப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கும், கடப்பாடுகளை நிறைவேற்றிக்கொள்வதற்கும் இலங்கைக்குக் கால அவகாசமிருந்தது. சண்டையின்போது இரு தரப்புகளாலும் நேர்ந்த பாதிப்புகளுக்கு கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னெடுப்புகள் மூலமாகப் பரிகாரம் காணுமாறு சமீபகாலமாக இலங்கை அரசை நாம் ஊக்குவித்து வந்துள்ளோம்.

நாங்கள் அந்த ஆணைக்குழுவின் அறிக்கையை ஆவலோடு எதிர்பார்த்தோம். அதேவேளை, இலங்கை தனது சுய செயற்பாட்டுத் திட்டத்தின்வாயிலாக ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமென தெரிந்து கொண்டோம். நாங்கள் இணைந்து செயல்பட்டோம். இதர நலன் விரும்பி நாடுகளைப்போன்று மனித உரிமைகள் தூதுவர் அலுவலக உதவிகளைப் பெறுமாறும் இலங்கையை ஊக்குவித்தோம்.

போரிலிருந்து விடுபட்டு, போருக்குப் பின்னர் எழுந்த சூழ்நிலைகளைச் சாதுரியமாகக் கையாண்ட நாடுகளும் சபையில் அங்கம் வகிக்கின்றன. அந்நாடுகளின் அனுபவங்களிலிருந்து நன்மைகளைப் பெறுவதற்கும், சபையோடு இணைந்து இருப்பதற்கும் நாம் இலங்கையை ஊக்குவித்துவந்துள்ளோம்.




தேசிய நல்லிணக்கப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கும், கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் ஆரோக்கியமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இல்லையேல், எட்டும் சமாதானம் நிலைத்துநிற்கும் என்பதற்கில்லை.

இலங்கை அரசின் நல்லிணக்கப்பாட்டுக்கான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த போதிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கடப்பாடுகளை நிறைவேற்ற மேலதிக நடவடிக்கைகள் தேவை. இவ்விவகாரம் ஆணைக்குழுவின் அறிக்கையிலும் இடம்பெறவில்லை.

எனவே, காலத்துக்கும், சமபாட்டுக்கும் பொருத்தமான இப்பிரேரணையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை பரிசீலனைக்கு உட்படுத்தி ஏற்றுக்கொள்ள வேண்டும். இது தனது சொந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கையை ஊக்குவிக்கின்றது. நிரந்தரமான நல்லிணக்கப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான, காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள அதை தூண்டுகின்றது.

இதற்கும் மேலாக மனித உரிமைகள் தூதுவர் அலுவலகத்தோடு இணைந்து செயல்படுவதற்கும், ஆக்கபூர்வமான ஆலோசனைகளைப் பெறுவதற்கும் இப்பிரேரணை இலங்கையை வலியுறுத்துகிறது - என்றார் அவர்.

# உரிமைகளை வென்றெடுப்பதற்கான காத்திரமான முதற்படி

01↘ துடனும் செயற்பட்டதென்பது இப்பொழுது எமது மக்களுக்குத் தெளிவாகியிருக்குமென்று நாம் நம்புகிறோம். தொடர்ந்தும் தமிழ் மக்களின் நலனில் மட்டும் அக்கறை கொண்டவர்களாகப் பொறுப்பாகவும் நிதானமாகவும் செயற்படுவோம் என எமது மக்களுக்கு உறுதி கூறுகிறோம்.

அரசியல் இலாபம் பெறும் நோக்குடனும்; மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்குடனும் செயற்படுகிறவர்களின் பிரசாரத்தை நம்பாமல் எமது ஜனநாயக சக்தியாகத் தொடந்தும் செயற்படுமாறு எமது மக்களை அன்போடு கேட்டுக் கொள்கிறோம் - என்றுள்ளது. (த)

# தீர்மானத்தை ஏற்கவே முடியாது

01↘ தெரிவித்தார். சில கட்சிகள், குழுக்களுடன் இணைந்து அரசியல் நோக்கத்துக்காக கொண்டுவரப்பட்ட ஒன்றாகவே பிரேரணையை இலங்கை நோக்குவதாக அவர் அங்கு குறிப்பிட்டார்.

இலங்கை ஏனைய நாடுகளுடன் இணைந்து தீர்மானத்தை எதிர்கொள்ளத் தயார் எனவும் அவர் கூறினார்.

கண்ணாடி வீட்டுக்குள் இருப்பவர்கள் கல் எறிய முயற்சிப்பதால் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டியுள்ளது எனவும் அவர் அங்கு கூறினார்.

மருத்துவர்கள், உங்களையும் குணமடையச் செய்ய வேண்டும் எனவும் மஹிந்த சமரசிங்க தனது உரையை நிறைவு செய்யும் வேளையில் தெரிவித்தார். (த)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எந்தக் கொம்பன் சொன்னாலும் எங்கள் காதில் ஏறுமா, என்ன?

இலங்கையில் வாழும் இனங்களுக்கிடையே நிரந்தர தேசிய நல்லிணக்கத்தை உருவாக்கி, அதனை மேலும் மேம்படுத்தவும், பொறுப்புக் கூற வகை செய்யவும் கோரி - வலியுறுத்தி - அமெரிக்கா ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பித்த பிரேரணை நேற்று நிறைவேறியது.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் மூலம், அந்த நாட்டு மக்களுக்கென நிலைத்த சமாதானத்தையும், அமைதியான எதிர்காலத்தையும் இலங்கை அரசாங்கம் உருவாக்க வேண்டும் என்று உலக நாடுகள் எதிர்பார்ப்பதாக பிரேரணையைச் சமர்ப்பித்த அமெரிக்காவின் பிரதிநிதி ஈலியன் ஷம்பர்லின் டொனாகே தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்தைக் கண்டிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் பிரேரணை சமர்ப்பிக்கப்படவில்லை என்றும்,-

இலங்கையில் வாழும் அதன் சகல பிரசைகளும், சமத்துவம், சுயமரியாதை, நீதி, சமூக மகத்துவம் ஆகிய வற்றை அனுபவிக்க ஏற்பாடு செய்யவல்ல நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதற்கு வகை செய்வதற்காகவே இந்தப் பிரேரணையைத் தமது நாடு முன்மொழிந்ததாகவும் -

சபையில் அதனைச் சமர்ப்பித்த அமெரிக்கப் பிரதிநிதி மேலும் தெரிவித்தார்.

*ஜெனிவா மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தையும் பொறுப்புக் கூறும் பண்பையும் முன்னிறுத்தியே கொண்டுவரப்பட்டது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

*பல நோவுகளை ஏற்படுத்திய போர் முடிவுக்கு வந்து மூன்று வருடங்கள் ஆகின்றன. எமது நாடும் ஏனைய பல நாடுகளும், இலங்கை மக்களுக்கு அமைதியான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு இலங்கை அரசாங்கத்தோடு இணைந்து பல வகையான முயற்சிகளை மேற்கொண்டோம்.

*நாட்டில் தேசிய நல்லெண்ணத்தை உருவாக்கவும், பொறுப்புக் கூறும் நடவடிக்கைகளைச் செயற்படுத்தவும் வகை செய்யவல்ல நடவடிக்கைகளையும் திட்டங்களையும் மேற்கொள்ளப் போதிய அவகாசம் இருந்தது. -

*எனினும் உள்நாட்டிலேயே அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு முன்வைத்துள்ள சிபார்சுகளைச் செயற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஊக்கம் அளித்துள்ளோம். தனது நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளின் அடிப்படையில் இலங்கை அரசு சொந்தச் செயற்திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும்; அதனைச் செயற்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம் - என்று ஜெனிவாவில் நேற்று நிறைவேற்றப்பட்ட அமெரிக்கத் தீர்மானத்தை முன்மொழிந்த ஈலியன் டொனாகே குறிப்பிட்டமை கவனிக்கத் தக்கது.

எனினும், தேசிய நல்லிணக்கத்தைக் கொண்டு வருவதற்கு இலங்கை அரசாங்கம், உருப்படியான திட்டம் எதனையும் வகுத்துச் செயற்படவில்லை என்பதனை தனது நெஞ்சில் குத்திக்காட்டுவது போன்று அமெரிக்கா சுட்டிக் காட்டுகிறது என்று இலங்கைத் தரப்பு குற்றம் சுமத்துகிறது.

இத்தனைக்கும் ஜெனிவா மாநாட்டில் அமெரிக்கா சமர்ப்பித்த பிரேரணையின் சாராம்சம் வருமாறு:

* கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ள காத்திரமான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசுக்குக் கோரிக்கை விடுக்கிறோம். தனக்குரிய சட்ட ரீதியிலான கடமைகளை நிறைவேற்ற உடன் நடவடிக்கை எடுக்குமாறும், சர்வதேச சட்ட மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறும், நம்பகமான சுயாதீன விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்களை ச் சட்டத்தின் முன் நிறுத்துமாறும் கோருகிறோம்.

* மனித உரிமைகள் பேரவையின் 20 ஆவது அமர்வுக்கு முன்னர் ஒருங்கிணைந்த நடவடிக்கைத் திட்ட அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு இலங்கை அரசைக் கோர வேண்டும். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறும், அதேவேளை, சர்வதேச சட்ட மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரணைக்கு உட்படுத்துமாறும் இலங்கை அரசைக் கோர வேண்டும்.

* மனித உரிமைகள் தூதுவர் அலுவலக அதிகாரிகள், சம்பந்தப்பட்ட விசேட பிரமுகர்கள் ஆகியோரை உற்சாகப்படுத்தி, நடைமுறைப்படுத்துவற்கான ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவி ஆகியவற்றை பெறுமாறு இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும்.

இவற்றுக்கு மத்தியில், ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கையை பிளவுறச் செய்வதற்கான சதிக்கான முன்னேற்பாடு. -

அது நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்க முயற்சிகளை மட்டுமன்றித் தேசத்தின் இறைமையைப் பாழடிக்கும் ஏற்பாடு .

இவ்வாறு அரசாங்கம் ஜெனிவாவில் தங்கியுள்ள பல உலக நாடுகளின் ராஜதந்திரிகளுக்கு விநியோகித்த ஆவணம் ஒன்றில் மிகக் கடுமையான கண்டனங்களுடன் விமர்சித்துள்ளது.

கடந்த காலத்தில் நடைபெற்ற தகராறுகள், பிரச்சினைகள் மற்றும் விவகாரங்கள் குறித்து இப்போது "பிரேத பரிசோதனை" செய்யும் அமெரிக்காவின் நடவடிக்கை எதிர்காலத்தில் ஏனைய நாடுகளின் பிரச்சினைகளில் அமெரிக்கா வேண்டாத வகையில் மூக்கை நுழைப்பதற்கான முன்னோடியான ஒரு செயல் என்றும் இலங்கை தனது ஆவணத்தில் குத்திக் காட்டியுள்ளது.

அமெரிக்காவின் இந்தத் தீர்மானம், பல வழிமுறைகள் ஊடாக தேசிய நல்லிணக்கத்தை நோக்கி நகரும் முயற்சிகளைத் தகர்த்து எறியும் ஏற்பாடே என்றும் அந்த அறிக்கையில் இலங்கை அரசு தரப்புச் சாடியுள்ளது.

மொத்தத்தில், தனது திட்டங்கள், செயற்பாடுகள் அனைத்தும் சரியானவை; நல்லிணக்கம் நாடியவை என்று சர்வதேசத்துக்குக் கூறுவதையும், அதனை அடியொற்றிச் செயற்படுவதையும் எந்தக் "கொம்பன்" சொன்னாலும் இலங்கை காதில் போட்டுக்கொள்ளாது என்பது மீண்டும் ஒரு தடவை வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டுள்ளது என்றால் தப்பன்று.

# சிறுவர் இல்ல துஷ்பிரயோகங்களுக்கு அங்கு பணியாற்றுவோரும் உடந்தை

## யாழ். அரச அதிபர் விசனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

சிறுவர் இல்லங்களில் இடம் பெறும் துஷ்பிரயோகங்களுக்கு அங்கு பணியாற்றுவோரும் உடந்தையாக உள்ளனர் என்று யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் விசனம் தெரிவிதுள்ளார்.

**சமாதானம் நிலை நாட்டப்பட்டதாகக் கூறப் படும் இந்த மூன்றாண்டுகளில் பெண்கள் சுதந்திரமாக வாழ முடியாத நிலை உருவாகி இருக் கின்றது. யாழ்ப்பாணத்தில் மட்டும் ஒரு வருடத்தில் 600 பெண்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப் படுகின்றார்கள்.**

நேற்று, பெண்கள் சிறுவர் மீதான வன்முறையைக் கண்டித்து தேவை நாடும் மகளிர் இல்லமும் மனித உரிமைகள் இல்லமும் இணைந்து நடத்திய அமைதிப் பேரணி யாழ். செயலகத்தை வந்தடைந்தது. இதன் பின்னர் யாழ், அரச அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர். இதன் போது கருத்துரை வழங்கும் போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:

பலவந்தமாக கொலை செய்யப்பட்டவரை தற்கொலை என வைத்தியசாலையில் சான்று வழங்குகிறார்கள். பொதுவாக பொலிஸ், நீதியாளர்கள், வைத்திய அதிகாரிகள் நேர்மையான முறையில் தமது கடமையை ஆற்ற வேண்டும்.

இன்று குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பெண்கள் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. 30 வருட போர்க் காலத்தில் கூட இப்படியான அளவுக்கு பிரச்சினைகளை காண்பது குறைவாக இருந்தது.

வன்னியில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அங்கு நான் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். அப்போதெல்லாம் இப்படியான பிரச்சினை பற்றி எதுவும் நான் கேள்விப் படவில்லை. ஆனால் சமாதானம் நிலை நாட்டப்பட்டதாகக் கூறப் படும் இந்த மூன்றாண்டுகளில் பெண்கள் சுதந்திரமாக வாழ முடியாத நிலை உருவாகி இருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் மட்டும் ஒரு வருடத்தில் 600 பெண்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப் படுகின்றார்கள்.

சிறுவர் இல்லத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் நடைபெற்று இருக்கின்றது. அங்கு பணியாற்று பவர்கள் அதற்கு உடந்தையாக இருந்திருக்கிறார்கள்.

சொல்லாலும், வார்த்தைகளாலும் பெணகள் கூட துஷ்பிர யோகங்களுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றோம்.

எனவே இவையெல்லாம் விரைவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள். இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக மௌனமான முறையிலே உங்களது எதிர்ப்பை வெளிக் காட்டியிருக்கின்றார்கள்.

பெண்கள் சுதந்திரமாக பாதுகாப்பாக நடமாடுவதற்கு எவரும் தடையாக இருக்கக் கூடாது. பெண் சமூகத்துக்காக எனது எண்ணங்களும் உதவியும் எப்போதும் இருக்கும்.- என்றார்.

(ம-7-16-13)

# விவசாயிகளின் ஓய்வூதியத்தை உரிய காலத்தில் வழங்க வேண்டும்

## விவசாய அமைச்சருக்கு மனு

யாழ்ப்பாணம், மார்ச் 23

விவசாயிகளின் ஓய்வூதியத்தை உரிய காலத்தில் வழங்கவேண்டும் என்ற கோரிக்கை உட்பட 5 கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்று விவசாய அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு விவசாயிகளின் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து விவசாய அமைச்சரிடம் இந்த மனுவை யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் க. முதலியார் வழங்கியுள்ளார்.

கடந்த வாரம் புங்குடுதீவில் புதிய கமநலசேவைகள் திணைக்கள திறப்பு விழா யாழ்.கமநல உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறைஞ்சன் தலைமையில் இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்ட யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் இந்த மகஜரை விவசாய அமைச்சரிடம் வழங்கினார்.

இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

* விவசாயிகளின் அடிப்படை ஓய்வூதியம் 1000 ரூபாவில் இருந்து 3000 ரூபாவாக அதிகரித்தல்.
* பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் மானியம் வழங்கல்.
* விவசாயிகளின் ஓய்வூதிய நிலுவை உரிய காலத்தில் வழங்கப்படவேண்டும்.
* விவசாயிகளின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில் திட்டம் அறிமுகப்படுத்தப்படவேண்டும்.
* தேசவள விவசாயிகள் நிறுவனத்துக்கு போக்குவரத்துக்கான வாகனங்கள் வழங்கப்பட வேண்டும். (ம)

# தவறணைகளில் சுகாதாரம் கவனத்தில் கொள்ளப்படுமா?

யாழ்ப்பாணம், மார்ச் 23

கள்ளுத் தவறணைகளில் இடம் பெறும் சுகாதாரச் சீர்கேடுகள் தொடர்பாக சுகாதாரப் பரிசோதகர்கள் கூடிய கவனம் எடுக்க வேண்டும் என்று யாழ். போதனா வைத்திய சாலையின் மருத்துவ வட்டாரங்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதிகளவான மதுப்பிரியர்கள் விலை, மற்றும் இடவசதிகளுக்கு ஏற்றால் போல் கிராமப் புறங்களில் உள்ள கள்ளுத் தவறணைகளையே நாடிச் செல்கின்றனர்.

இதன் காரணமாக மதுப்பிரியர்கள் கள்ளுத் தவறணைகளில் பயன்படுத்தும் கோப்பைகள் சுகாதாரமற்ற முறையில் காணப்படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதனைவிட தவறணைகளில் சேகரித்து வைக்கப்படும் கள் எவ்வாறு பாதுகாக்கப்பட்டு மறுநாள் பாவனைக்கு எடுக்கப்படுகிறது என்பது குறித்தும் அவதானம் தேவை என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மதுப்பிரியர்கள் கள்ளுத் தவறணைகளில் பாவனைக்கு உட்படுத்தும் பொருள்கள் தொடர்பாக பூரண சுகாதாரத்தைப் பெறுவதற்கு சுகாதாரப் பரிசோதகர்கள் இவற்றை அவதானிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

(ம-14)

# வெப்ப நோய்கள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 23

யாழ்.குடாநாட்டில் நிலவும் தற்போதைய கடும் வரட்சி அதிக வெப்பம் போன்றவற்றால் வெப்ப நோய்க்குஆளாவோரின்எண்ணிக்கை தினமும் அதிகரித்துச் செல்வதாக யாழ். போதனா வைத்தியசாலையின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த வெப்ப நோய்க்கு ஆளாகி வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில்தினமும்பெரும்எண்ணிக்கையானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காய்ச்சல், தடிமல், தலைவலி, தொண்டைநோ, கண்நோய் போன்ற நோயின் தாக்கமே தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது.

பகல் வேலையில் நிலவும் கடும் வெப்பமும் வறட்சியுமே மக்களை வாட்டி வதைக்கின்றன. (ம-17)

# காடு அழிப்பை நிறுத்துங்கள்

## இனியும் வேண்டாம் இந்த அநியாயம்

பூநகரி,மார்ச் 23

பூநகரி முக்கொம்பன் பகுதியில் பெருமளவில் காடழிப்புகள் இடம்பெற்று வருகின்றன என்று சமூக ஆர்வலர்கள் கண்டித்தும் இந்த அழிப்பு நடவடிக்கை தொடர்கிறது.

விறகுத் தேவைகளுக்காக பெருமளவு காட்டு மரங்கள் தறிக்கப்பட்டுவரும் நிலையில் முதிரை, பாலை போன்ற பெரிய மரங்களை வெட்டி விற்பனை செய்யும் நடவடிக்கைகளிலும் பலர் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, தமது குடியிருப்புக் காணிகளை விஸ்தரிக்கும் நோக்குடன் பலர் காடழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த பூநகரி பொலிஸார் தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதில்லை என மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

**விறகுத் தேவைகளுக்காக பெருமளவு காட்டு மரங்கள் தறிக்கப்பட்டுவரும் நிலையில் விற்பனை செய்யும் நட வடிக்கைகளிலும்பலர் ஈடுபட்டுள்ளனர்.**



சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் தொடர்புடையவர்களும் எமது வளங்கள் அழிக்கப்படுவது குறித்து கண்டும் காணாதது போன்று நடந்து கொள்கின்றனர் என்று முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

அக்கராயன், பூநகரி, யாழ்ப்பாணம் செல்லும் பஸ்களில் முக்கொம்பன் பகுதியிலிருந்து பெருமளவு பச்சை விறகு எடுத்துச் செல்லப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை இனியும் இந்த அநியாயத்தைச் செய்யாதீர்கள் என்று அவர்கள் அறிவுறுத்தினர், (எ-18)

# அறுவடை வேளையில் யானைகளால் தொல்லை

அக்கராயன்,மார்ச் 23

துணுக்காய் அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டிய குளம் கிராமங்களில் யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

மேற்படி பகுதி வயல்களில் நெல் அறுவடை நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் நெற்களை பாதுகாப்பதில் விவசாயிகள் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதியில் இரவில் வரும் யானைகள் நெல் மூடைகளைக் காவிச் செல்வதாகவும், அங்குள்ள தென்னைகள், வாழைகளை அழித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டியகுளம் ஆகிய குளங்களின் பின் பகுதியில் இரவு வேளைகளில் யானைகளின் நடமாட்டத்தால் குடிமக்கள் அச்சத்துடன் விழித்திருக்க வேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பிரதேசங்களின் மக்கள் கிராம அலுவலர்கள் மூலம் பிரதேச செயலர் மற்றும் பொலிஸ் அதி காரிகளுக்கு தகவல் தெரிவித்துள்ளர். (எ-18)

# வசதிகளற்ற நிலையில் யூனியன்குளம் பாடசாலை

அக்கராயன்,மார்ச் 23

அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் கிளிநொச்சி யூனியன்குளம் அ.த.க.பாடசாலை இயங்கி வருகிறது.

ஆசிரியர் விடுதி, விளையாட்டு முற்றம், நூலகம், கிணறு போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமல் இயங்கி வருகிறது.

இதே வேளை 2004 முதல் தொண்டர் ஆசிரியராகப் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு நியமனம்வழங்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தற்போது பாடசாலைக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, தரம் 6 மாணவர்கள் கோணாவில் அ.த.க.பாடசாலைக்குச் செல்ல வேண்டிய நிலையில் போக்குவரத்துச் சிரமங்களையும் எதிர்கொண்டுள்ளனர்.

**ஆசிரியர் விடுதி, விளையாட்டு முற்றம், நூலகம், கிணறு போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமல் இயங்கி வருகிறது.**

கோணாவில் கிழக்கு, யூனியன்குளம் , அக்கராயன் பிள்ளையார் கோயிலூடாக அக்கராயன் மருத்துவமனை வரை பஸ் சேவையை நடத்துமாறு இந்தக் கிராம மக்கள் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-18)

# மாணவருக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 23

துணுக்காய்க் கல்வி வலயத்துக்கு உட்பட்ட உயர்தர மற்றும் சாதாரண தரப் பரீட்சையில் தோற்றியுள்ள மாணவர்களுக்கான பாடத் தெரிவு மற்றும் தொழில் வழிகாட்டலுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இரண்டு தினங்களில் மூன்றுபாடசாலைகளில் இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை மல் லாவி மகாவித்தியாலயம் பாலிநகர் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 5 ஆம் திகதி மாங்குளம் மகாவித்தியாலயத்தில் மேற்குறித்த நேரத்தில் இந்தக் கருத்தரங்கு இடம் பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களைக் கலந்துகொள்ளுமாறு துணுக்காய் கல்வி வலயம் அறிவித்துள்ளது.

சாதாரண தரப் பரீட்சை எழுதிய மாணவர்கள் உயர்தரப் பரீட்சையில் எவ்வாறான பாடத்தெரிவை மேற்கொள்ளலாம் என்ற ஆலோசனைகளும் இந்தக் கருத்தரங்கில் வழங்கப்படவுள்ளது. (எ-03)



*இந்த நாட்டில் மலிந்துள்ளவை கலாசார சீரழிவே எனும் தலைப்பில் கிளிநொச்சி சைவச்சிறார் இல்ல நிறுவன மாணவிகளின் கவியரங்கு இடம் பெறுவதனைப் படத்தில் காணலாம்.*

# கிராம அலுவலர்கள் வவுனியாவில் கௌரவிப்பு

வவுனியா,மார்ச் 23

வவுனியா ''ஸ்ரீலங்கா ஐக்கிய கிராம அலுவலர்கள் சங்கம்'' அண்மையில் ஓய்வு பெற்ற கிராம அலுவலர்களைக் கௌரவித்தது. இந்த நிகழ்வு சங்கத்தின் தலைவர் சி.சிவானந்தன் தலைமையில் இடம்பெற்றது.

சங்கத்தின் முன்னைய தலைவரும் நெடுங்கேணி வெடிவெய்தகல் கிராம அலுவலர் து.தேவராசா, ஈச்சன்குளம் கிராம அலுவலர் வெ.அரியரத்தினம், மூன்று முறிப்பு கிராம அலுவலர் ந.தர்மகுலசிங்கம், வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவு கிராம அலுவலர் எஸ்.ஞானபால ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். இவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா அன்பளிப்பும் வழங்கப்பட்டது.

இதேவேளை ஸ்ரீலங்கா ஐக்கிய கிராம அலுவலர்கள் சங்க வவுனியா மாவட்டத்துக்கான புதிய நிர்வாகத் தெரிவு ஓய்வு பெற்ற கிராம அலுவலர் து.தேவராசா தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.

புதிய தலைவராக மருதன் குளம் கிராம அலுவ லர் சி.சிவானந்தனும், செயலாளராக கல் குண்டா மடு கிராம அலுவலர் உபாலி எக்கநாயக்காவும், கூமாங்குள அலுவலர் திருமதி து.புஸ்பராசாவும் பொருளாளராக ஒலுமடு கிராம அலுவலர் எஸ்.சிவகாந்தனும் தெரிவுசெய்யப்பட்டனர். (எ-402)

# மன்னார் அரச பஸ் நிலையத்தில் சமூகச் சீர்கேடுகள் அதிகரிப்பு

மன்னார்,மார்ச்23

மன்னார் அரச பஸ் நிலையத்தில் அமைந்துள்ள பயணிகள் தரிப்பிடத்தினுள் இரவு நேரங்களில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். சம்பந்தப்பட்ட தரப்பினர் இது குறித்து நடவடிக்கை எடுக்காதது தொடர்பிலும் மக்கள் அதிருப்தி கொண்டுள்ளனர்.

பஸ் நிலையத்தில் இரண்டு பயணிகள் தரிப்பிடங்கள் காணப்படுகின்றன.

அதில் ஒன்று முற்றிலும் திறந்த நிலையில் உள்ளது. மற்றையது சுற்றிவர மறைக்கப்பட்ட நிலையில் உள்ளது.

அதில் சுற்றிவர அடைக்கப்பட்டு மறைக்கப்பட்ட நிலையில் உள்ள பயணிகள் தரிப்பிடத்திலேயே குறித்த செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. போதைப் பொருள் பாவனை, மது பானங்கள் அருந்துதல் போன்ற செயற்பாடுகள் தொடர்ந்தும் நாளாந்தம் இரவு நேரங்களில் இடம் பெற்று வருகின்றன.

மது பாவனையாளர்கள் மதுபானப் போத்தல்களை அந்த தரிப்பிடத்தினுள்ளேயே உடைத்து விடுவதோடு, குறித்த தரிப்பிடத்தையும் அசிங்கப்படுத்துகின்றனர்.

இதனால் மறுநாள் காலை தரிப்பிடத்தினுள் செல்லும் பயணிகள், பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகளின் கவனத்துக்கு பல தடவைகள் கொண்டு வரப்பட்டுள்ள போதும் எவரும் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (எ-12)

# கலந்துரையாடல்

வவுனியா,மார்ச் 23

வவுனியா திருப்பழனி முருகன் ஆலய திருவிழா சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 3.30 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் அ.சிவபாலசுந்தரன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

பிரதேசத்தின் வளர்ச்சி மற்றும் ஆலயத்தின் பிரபல்யம் குறித்து ஆராய்வதற்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்தக் கலந்துரையாடலில் அடியார்களைக் கலந்து கொள்ளுமாறு வவுனியா பிரதேச செயலர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (எ-402)

# பூநகரியில் சிறந்த மைதானத்தை அமைத்துத் தருமாறு கோரிக்கை

பூநகரி,மார்ச் 23

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் சிறந்த மைதானம் இல்லாத நிலை காணப்படுகிறது. பாடசாலைகளில் உள்ள மைதானங்கள் நல்ல நிலையில் இல்லாததால் தற்போது விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற்றவுள்ள வீரர்கள் போட்டிகளில் பயிற்சிகளில் ஈடுபட முடியாமல் தவிக்கின்றனர்.

பூநகரி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இந்தப் பிரச்சினை பற்றி சுட்டிக் காட்டப்பட்டுள்ள போதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

புநகரி கல்விக் கோட்டத்தில் 23 பாடசாலைகள் இருந்தும் சிறந்த முறையில் ஒரு பாடசாலையிலும் மைதானம் இல்லாமல் உள்ளது.

எனவே பூநகரியில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு சிறந்த மைதானம் ஒன்றினை அமைத்துத் தரும்படி சம்பந்தப்பட்ட தரப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-18)

# ஏ.ரீ.எம் சீரின்மையால் வங்கி வாடிக்கையாளர் பாதிப்பு

மன்னார்,மார்ச்23

இலங்கை வங்கியின் மன்னார் கிளையில் அமைக்கப்பட்டுள்ள தன்னியக்க இயந்திரம் அடிக்கடி செயலிழந்து காணப்படுவதால் தமது அவசரத்தேவைகளுக்கு பணத்தை மீளப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக வாடிக்கையாளர்கள் விசனம் தெரி விக்கின்றனர்.

குறித்த வங்கியில் பல ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்கள் உள்ள நிலையில் குறித்த தன்னியக்க இயந்திரம் ஒழுங்கான முறையில் கண்காணிக்கப்படுவதில்லை என வாடிக்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் இப்பிரச்சினை அதிகம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிற்பகல் 2 மணிக்குப் பிறகு இலங்கை வங்கியில் தன்னியக்க இயந்திரத்தின் சேவையூடாக பணத்தைப் பெறுவதில் தாம் தொடர்ந்தும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

எனவே இந்த விடயத்தில் வங்கி நிர்வாகம் செயற்பட்டு உடன் நடவடிக்கை எடுக்குமாறு வாடிக்கையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (எ-12)

# பொலிஸ் தினம்

மன்னார்,மார்ச் 23

மன்னாரில் 148 ஆவது பொலிஸ் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. புதன்கிழமை மன்னார் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துஸார தளுவத்தை தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினரர்களாக மன்னார் பிரதேச செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல், உதவிச் செயலர் பரமதாஸ், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர், எம்.எம் சியாம் மற்றும்,மத குருமார்,பொலிஸாரின் உறவினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-12)

# பஸ் சேவைகள் குறைப்பால் நெடுந்தீவு பயணிகள் அவலம்

## பல மணிநேரம் காத்திருப்பதாக விசனம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

குறிகாட்டுவானில் இருந்து மாலை 5 மணிக்கு நெடுந்தீவுக்குப் போய்ச் சேரும் படகுப் பயணிகள் அங்கிருந்து தமது இடங்களுக்குச் செல்வதற்காக சுமார் இரண்டு மணி நேரம் வரை பஸ்ஸுக்காகக் காத்திருக்கவேண்டியுள்ளதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணக் கூலியில் இருந்து பஸ்ஸுக்கான எரிபொருளை வாங்கிச் சேவையை நடத்துங்கள் என்று இலங்கை போக்குவரத்துச் சபை அறிவித்துள்ள நிலையில் மக்கள் இந்த நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குறிகாட்டுவானில் இருந்து மாலை 4 மணிக்குப் புறப் படும் படகு மாலை 5 மணிக்கு நெடுந்தீவு துறைமுகத்தில் நிறுத்தப்படும். மாடைில 5 மணிக்கு குறிகாட்டுவானில் இருந்து வரும் படகு மாலை 6 மணிக்கு நெடுந்தீவுக்கு வந்து சேரும்.

> இங்கு சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்களுக்கு எரிபொருளை வழங்க நெடுந்தீவு பல நோ.கூ.சங்கம் தயாராகவே உள்ளது.
> எனினும் அதற்கு முன்பாக சங்கத்துக்குச் செலுத்த வேண்டிய ஐந்து லட்சம் ரூபாவைச் செலுத்தவேண்டும்.

இந்த நிலையில் 5 மணிக்கு நெடுந்தீவு செல்பவர்களை ஏற்றி இறகுவதற்கான பஸ் சேவை எரிபொருள் பிரச்சினை காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இச் சேவையானது மாலை 6 மணிக்கு வந்து சேரும் பயணிகளையும் இலக்கு வைத்தே நடத்தப்படுகின்றது.

இதனால் நோயாளர்கள் மற்றும் சிறு குழந்தைகளுடன் வரும் பயணிகள் தமது வீடுகளுக்கு இரவு 7 மணிக்குப் பின்னரே செல்ல முடிகிறது. அது மட்டுமன்றி மாலை 5 மணிக்கு நெடுந்தீவுக் கரைக்கு வந்து சேரும் மக்கள் நீண்ட நேரம் காத்திருந்து தமது பயணத்தைத் தொடரவேண்டியுள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

மக்களின் நலனைக் கருத்தில் கொண்டாவது இச் சேவையை நடத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட பயணிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இங்கு சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்களுக்கு எரிபொருளை வழங்க நெடுந்தீவு பல நோ.கூ.சங்கம் தயாராகவே உள்ளது.

எனினும் அதற்கு முன்பாக சங்கத்துக்குச் செலுத்த வேண்டிய ஐந்து லட்சம் ரூபாவைச் செலுத்தவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-7)



சுன்னாகம் ஓட்டோ சங்கத்தில் ஓட்டோ உரிமையாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு சங்கத் தலைவர் சி.பிரதீபன் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் நா.சுந்தரலிங்கம், பொருளாளர் அ.சுஜாகரன், பிரதேச சபை உறுப்பினர் மு.நவலோகராஜா, யாழ்.மாவட்ட ஓட்டோ சங்கத் தலைவர் பொல்.ஜெயகாந்தன் மற்றும் பொருளாளர் பொன்னையா, செல்வராசா ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். ஒருவருக்கு அடையாள அட்டை வழங்கப்படுகிறது.

# கலைஞர்கள் கௌரவிப்பு

சாவகச்சேரி, மார்ச் 23

உலக கலைஞர்கள் தினம் நேற்று முன்தினம் சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வின் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து கலைஞர்கள் பொன்னாடை போர்த்தியும் நினைவுப் பரிசில்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

சாவகச்சேரி நகராட்சி மன்றப் பொது நூலகங்களும், தென்மராட்சி பிரதேச செயலக கலாசாரப் பிரிவினரும் இணைந்து சாவகச்சேரி பொது நூலக மண்டபத்தில் கலைஞர்கள் தினத்தைக் கொண்டாடினர்.

நிகழ்வில் சிறப்புக் கலைஞர் கி.கலாமோகன், ஓவியர் பொ. இராஜகுலசிங்கம், அண்ணாவியர் வீ. காசிநாதன், சிறுகதை எழுத்தாளர் செல்வி இ. நவரத்தினம், சங்கீத வித்துவான் பொன். ஜீ. வாமதேவன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

நகர சபைத் தலைவர் இ. தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நகர சபைச் செயலாளர் சு. புத்திசிகாமணி, பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள், சபை உப தலைவர் ஆகியோர் உரையாற்றினர். (ம-9)

# மண் அகழ்வைத் தடுத்தபோது தாக்க முனைந்த விஷமிகள்

## சாவகச்சேரிப் பொலிஸில் முறைப்பாடு

சாவகச்சேரி,மார்ச் 23

சட்ட விரோதமாக மணல் ஏற்றுவதைத் தடுக்கச் சென்ற ஊர்ப் பிரமுகரின் தொலைபேசியைப் பறித்து உடைத்ததுடன் அவரை மணல் ஏற்றும் ஆயுதத்தால் தாக்க முற்பட்டனர் என்று சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் எழுதுமட்டுவாழ் தெற்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட ஒட்டுவெளி வயல் பகுதியில் இடம்பெற்றது.

விராலி தோட்டம் என்னும் இடத்துக்கு வாகனத்தில் வந்த மூவர் சட்ட விரோதமாக மணல் ஏற்ற முற்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் அப்பகுதியால் வந்த குறித்த நபர் இப்பகுதியில் மணல் ஏற்ற வேண்டாம் என்று தெரிவித்ததுடன் இந்த விடயம் தொடர்பாகத் தொலைபேசி மூலம் அப்பகுதி மக்களுக்கும் அறிவிக்க முற்பட்டுள்ளார்.

இந்த நிலையில் குறிப்பிட்ட நபர் வைத்திருந்த கைத்தொலைபேசியைப் பறித்து எறிந்ததுடன் கையில் வைத்திருந்த சவளினால் தாக்க முற்பட்டனர் என்றும் பொலிஸில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறிப்பிட்ட நபர் அங்கிருந்து சென்று ஊர் மக்களுக்குத் தெரிவித்தார் என்றும் ஊர் மக்கள் அங்கு செல்வதற்கு முன்னர் அவர்கள் அங்கிருந்து சென்றுவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-9)

# கடலாமை பிடிப்பதை நிறுத்த நடவடிக்கை தேவை

யாழ்ப்பாணம், மார்ச் 23

கடலாமை பிடிக்கப்படுவதை தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கையை கிராமிய அபிவிருத்தி சங்கங்கள் எடுக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அருகிவரும் கடல் உயிரினமான கடலாமையை கடற்றொழிலாளர்கள் பிடிப்பது அதிகரித்துக் காணப்படுகிறது.

மண்டைதீவு, அல்லைப்பிட்டி உள்ளிட்ட தீவுப் பகுதிகளில் கடலாமை பிடிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு கடலாமை பிடித்த நபர்கள் பலருக்கு எதிராக பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இந்த நிலையில் கடலாமை பிடிப்பது சட்டரீதியாக தடை செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

# விரைவில் கேபிள்

யாழ்ப்பாணம்,மார்ச் 23

அச்சுவேலி பகுதிக்கு விரைவில் ரெலிகொம் கேபிள் தொலைபேசி இணைப்பை வழங்கவுள்ளது.

இந்த இணைப்பை வழங்குவதற்கு முன்னர் இந்தப் பகுதியில் 'இம்சா' தொலைத்தொடர்பு பரிவர்த்தனை ஒன்றை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பரிவர்த்தனை ஊடாக முதலில் இந்தப் பகுதிக்கு இருநூறு இணைப்புக்களும் வழங்கப்படவுள்ளன. இதற்கென விரைவில் நிரந்தர கேபிள் இணைப்பு வசதிகளும் அமைக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-17)



யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருக்கு, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 'சேவையில் நாயகி' எனும் உயர் விருதை வழங்கி மதிப்பளித்துள்ளது. கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி எஸ்.கே. யோகநாதன், வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜா ஆகியோர் இந்த விருதை வழங்கினர். (ம-16)

# குற்றச் செய்திகள்

யாழ்ப்பாணம், மார்ச் 23

சட்டவிரோதமாக 20 போத்தல் கோடா வைத்திருந்தவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்று 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது. கோடாவும் பறிமுதல் செய்யப்பட்டது.

புங்குடுதீவைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கோடா வைத்திருந்தபோது ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் செவ்வாய்க்கிழமை முன்னிலைப்படுத்தப்பட்டார்.

சந்தேகநபர் தம்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு இந்த அபராதத் தொகை விதிக்கப்பட்டது.

அபராதம் செலுத்தத் தவறின் 5 மாத கால சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

(ம-4)

***

யாழ்ப்பாணம்,மார்ச் 23

மதுபோதையில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்தமை உட்பட பல குற்றம் புரிந்த 7 பேருக்கு யாழ். நீதிமன்றம் 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

இவர்கள் யாழ். பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

அனைவரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து இந்த அபராதம் விதிக்கப்பட்டது. மது போதையில் போக்குவரத்துக்கு இடையூறு, கடை விளம்பரப் பலகையை வீதியில் வைத்திருந்தமை, வீதியில் குப்பை வீசியமை ஆகிய குற்றச்சாட்டுக்களுக்கே அபராதம் விதிக்கப்பட்டது. யாழ். றக்கா வீதி, ஈச்சமோட்டை மற்றும் கஸ்தூரியார் வீதி ஆகிய இடங்களில் இந்தக் குற்றங்கள் இடம்பெற்றிருந்தன (ம-4)

***

யாழ்ப்பாணம்,மார்ச் 23

மதுபோதையில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்தவர் அபராதம் செலுத்தத் தவறியதால் யாழ். நீதிமன்றம் ஒரு வருட சிறைத் தண்டணை விதித்துள்ளது.

யாழ். நகரப் பகுதியில் மது போதையில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த மண்டைதீவைச் சேர்ந்த ஒருவரையே யாழ்.பொலிஸார் கைது செய்து யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் முன்னிலைப்படுத்தினர்.

விசாரணையின்போது சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதனையடுத்து அவருக்கு 4 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார் நீதிவான். அதனைச் செலுத்தத் தவறின் ஒருமாத கால சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டார். அதன்படி குற்றவாளியான அவர் அபராதம் செலுத்தத் தவறியதால் தற்போது சிறைத் தண்டனை அனுபவிக்கிறார். (ம-4)

***

யாழ்ப்பாணம்,மார்ச் 23

கையடக்கத் தொலைபேசியில் ஆபாசப்படம் வைத்திருந்தவருக்கு யாழ்.நீதிமன்றம் ஐயாயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

யாழ்.பெரியகோயில் குருசோ வீதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே கைத்தொலைபேசியில் ஆபாசப் படங்களை வைத்திருந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். மன்றில் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு ஐயாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. ஆபாசப் படங்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்த மெமரி காட்டும் நீதிமன்ற உத்தரவுக்கமைய அழிக்கப்பட்டது. (ம-4)

# இனவாத அரசுக்கு இலங்கை உதாரணம்

## ஜெனிவா அமர்வில் கரன் பார்கர் அம்மையார்

ஜெனிவா,மார்ச் 23

உலக அரங்கில் இனவாத அரசுக்கான வரைவிலக்கணமாக இலங்கையை முன்னுதாரணமாகக் கொள்ளலாம் என சர்வதேசக் கல்வி அபிவிருத்தி அமைப்பின் பிரதிநிதி கரன் பார்கர் அம்மையார் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இனவாதம் இனத்துவேசம் தொடர்பில் இடம்பெற்ற விவாத அமர்வில் கரன் பார்கர் அம்மையார் உரையாற்றியிருந்தார்.

உலகில் எங்கு இனநெருக்கடி இருக்கின்றதோ அங்கு இன அழிப்பு ஏற்படுத்துவதற்கான வழி நிலையுள்ளது என்ற ஐ.நாவின் முன்னாள் செயலாளர் நாயகம் கோபி அனானின் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு தனது உரையை வழங்கிய கரன் பார்கர் அம்மையார் இனவாத மேலாதிக்க நிலையில், இனவழிப்பு ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டினார்.




ஜெனிவா ஐ.நா. உரிமைகள் சாசனத்தில், இனவாத அரசுக்கான வரைவிலக்கணம் இல்லை என்பதனைச் சுட்டிக்காட்டிய கரன் பார்கர் அம்மையார், இன்றைய உலகில் இலங்கையை ஒரு இனவாத அரசுக்குரிய முன்னுதாரணமாகக் கொள்ளலாம் என்று வலியுறுத்தினார்.

இலங்கை அரசினால் தமிழ்த் தேசிய இனத்தின் மீது கட்டவிழ்த்து வரும் இன அழிப்பை அடுக்கிப் பேசிய கரன் பார்கர் அம்மையார் 1948ஆம் ஆண்டு முதல் இலங்கை அரசானது, தமிழர்களின் அரசியல், சமூக பொருளாதார, கலாசார உரிமைகளைப் பறித்தெடுத்து வருகின்றமை குறித்தும் கோடிட்டுக்காட்டினார்.

தமிழர்கள் மீது பயங்கரவாத முலாம்பூசி சர்வதேச மனிதச் சட்டங்களில் இருந்து தப்பித்துக் கொள்ளும் இலங்கை அரசு தமிழர்கள் மீது இனவாதத்தைக் கட்டவிழ்த்து வருவதாகக் குறித்துரைத்த கரன் பார்கர் அம்மையார் தமிழர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப்பவர் மீதும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இலங்கை பயங்கரவாத முத்திரையைக் குத்தி வருவதைச் சுட்டிக்காட்டி, தன்மீதும் இத்தகைய முத்திரையை, இலங்கை அரசு குத்தியுள்ளதாக இடித்துரைத்தார்.

இந்த இனவாத அரசுக்குரிய வரைவிலக்கணத்தை ஐ.நா. விரைந்து வரைய வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார். (த)

# விருந்து கொடுத்து மடக்க முயன்ற அமைச்சர் பீரிஸ்

ஜெனிவா,மார்ச் 23

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் கடந்த திங்கட்கிழமை இரவு இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இராப்போசன விருந்து ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். பீரிஸ் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுக்கு ஏற்பாடு செய்த இராப்போசன விருந்தை பெரும்பாலான நாடுகள் புறக்கணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்தை உறுதியாக எதிர்க்கும் நிலையில் உள்ள நாடுகளின் எண்ணிக்கை 7 ஆகக் குறைந்துள்ளமை இந்த விருந்தில் தெரியவந்தது.

அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்ட போதும், 7 நாடுகளின் தூதுவர்கள் மட்டும் அதில் பங்கேற்றதாகவும் ஜெனிவாத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

## கண்ணீர் அஞ்சலி

### தில்லையம்பலம் லோகநாதன் B.A.



யாழ். வைத்தீஸ்வரா கல்லூரியின் பழைய மாணவனும், முன்னாள் செயலாளர், தலைவர், தற்பொழுது கனடா கிளையின் போஷகருமாகிய லோகநாதன் அவர்களின் திடீர் மரணத்தை கேள்வியுற்று அதிர்ச்சியடைந்துள்ளோம். அன்னாரின் இழப்பால் அல்லலுறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பழைய மாணவர் மன்றம்,
வைத்தீஸ்வரா கல்லூரி.

# ஆசிரியர்கள் இடமாற்றம் இல்லையேல் பகிஷ்கரிப்பு

கொழும்பு,மார்ச் 23

ஆசிரியர்களுக்கான வருடாந்த இடமாற்றங்கள் உரிய காலத்திலிருந்து மூன்று மாதங்கள் தாமதமாகியுள்ளன. இந்த ஆசிரிய இடமாற்றங்கள் உடனடியாகச் செயற்படுத்தப்படாது போகுமாயின் அரச பாடசாலை ஆசிரியர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக ஆசிரிய சங்கங்கள் தெரிவித்தன.

**3,000 மேற்பட்ட அரச பாடசாலை ஆசிரியர்களுக்கு உரிய காலத்தில் இடமாற்றம் வழங்க அரசு தவறியுள்ளது.**

3,000 மேற்பட்ட அரச பாடசாலை ஆசிரியர்களுக்கு உரிய காலத்தில் இடமாற்றம் வழங்க அரசு தவறியுள்ளமையினால் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் நேற்று வியாழக்கிழமை கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் 2007ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் படி புதிய வருடத்திற்காக பாடசாலை தொடங்க முன் ஜனவரி மாதத்தில் ஆசிரிய இடமாற்றங்கள் நடக்க வேண்டும். பின்னர் இத்திகதி மார்ச் 3 என மாற்றப்பட்டது.

எனினும் இந்த திகதியில் கூட இடமாற்றங்கள் இடம்பெறவில்லை. நாட்டிலுள்ள பல பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை காணப்படுவதால் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்குவது உடனடி தேவையாகும் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொது செயலாளர் மஹிந்த ஜெயசிங்க தெரிவித்தார். (த)

## வடக்கு மாணவருக்கு ஜப்பான் உதவி

இலங்கை அரசினால் வடக்கு மாகாணப் பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்டுவரும் சத்துணவுத் திட்டத்துக்கு ஜப்பான் அரசு 180 மில்லியன் ரூபா பெறுமதியான உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

முதற்கட்டமாக ஜப்பானின் பூமியதிர்ச்சி ஏற்படும் பகுதிகளில் தகரங்களில் அடைக்கப்பட்ட மீன்கள் வழங்கப்படும் என்று ஜப்பானிய தூதரகம் தெரிவித்தது. (த)

## மரண அறிவித்தல்

### முருகேசு ராசையா

*(நீர்ப்பாசன திணைக்கள முன்னாள் பட வரைஞர்- DOA)*



இல. 20, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு ராசையா (நீர்ப்பாசன திணைக்கள முன்னாள் பட வரைஞர் - DOA) 20.03.2012 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - வள்ளியம்மை தம்பதியின் அன்பு மகனும், கமலநாயகியின் அன்புக் கணவரும், கோபி (ஜேர்மனி), முரளி (லண்டன்) ஆகியோரின் அன்பு தந்தை யும் ரமணி, சாணிக்காவின் மாமனும், அபிரா, நிவேதா, ஆசினி ஆகியோரின் பாட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.03.2012) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இல. 09, விகாரை வீதி, இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 09, விகாரை வீதி,
திருகோணமலை.

தகவல்:
குடும்பத்தினர்.

# பிரபாகரனைக் காப்பாற்றுமாறு எஸ்.எம்.எஸ். அனுப்பினார் பிளேக்

## வீரவன்ஸ குற்றச்சாட்டு



கொழும்பு,மார்ச்,23

அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் நோர்வே போன்ற நாடுகள் போரைத் தடுப்பதற்கு பல்வேறு வழிகளில் முயற்சி செய்தன. இந்தநிலையில், முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் ஓ பிளேக், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு எஸ்.எம்.எஸ் அனுப்பிப் பிரபாகரனை மீட்க முயற்சி செய்தார் என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் இலங்கைக்குப் பயணம் செய்து, ஜனாதிபதிக்கு அழுத்தங்களைப் பிரயோகித்தனர். எனினும், இந்த எந்தவொரு அழுத்தத்துக்கும் ஜனாதிபதி அடிபணியவில்லை.

நந்திக்கடல் போர் பற்றி மக்கள் அறிந்திருந்த போதும், சமகாலத்தில் கொழும்பில் இடம்பெற்ற சர்வதேச இராஜதந்திர போர் பற்றிப் பலருக்குத் தெரியாது. சரியான தீர்மானங்களை எடுக்காத காரணத்தினால் இதற்கு முன்னர் ஆட்சி செய்த தலைவர்களினால் போரை வெற்றிகொள்ள முடியவில்லை என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (த)

# இலங்கைக்கு கனடாவின் கடுமையான செய்தி

றொரன்ரோ,மார்ச்23

இலங்கை சென்றுள்ள கனேடியக்குழு கொழும்பில் கனடாவின் கடுமையான செய்தியைத் தெரிவிக்கவேண்டுமென றொரன்ரோஸ்ரார் பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் அதிகம் உள்ள கனடாவுக்கு அந்தத் தார்மீகக் கடமை உள்ளது எனவும் அது தெரிவித்துள்ளது. இலங்கை அளித்த பல வாக்குறுதிகளுக்காகத் தமிழ் மக்கள் இன்னும் காத்துக் கொண்டிருக்கிறார்கள், அதைக் கனடா மறந்துவிடவில்லை என்ற செய்தியைக் கனேடியக் குழு ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு இறுக்கமாகத் தெரிவிக்க வேண்டும் எனவும் 'றொரன்ரோஸ்ரார், மேலும் தெரிவித்துள்ளது. (த)


## வீடு விற்பனைக்கு

கே.கே.எஸ். வீதி, சுன்னாகத்தில் ஜெற் மோட்டோர்ஸ் அருகில் 2 ½ பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடும், வீடு கட்டக்கூடிய 2 பரப்பு வெறுங் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: தொ.பே. 0778690797


### தில்லையம்பலம் லோகநாதன் (B.A)

*(ஆசிரியர், அஸ்ரன் பதிப்பக உரிமையாளர், வெள்ளவத்தை)*



சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு உருத் திரா மாவத்தையை வதிவிடமாகவும் தற் போது கனடா றொறன்ரோவில் வசித்த வருமாகிய தில்லையம்பலம் லோகநாதன் நேற்று (22.03.2012) வியாழக்கிழமை இலங்கை நேரப்படி 11.10 மணியளவில் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் சிவன்பண்ணை வீதி, காலஞ்சென்றவர்களான திரு. திருமதி தில்லையம்பலம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான நுணாவில் மேற்கு திரு. திருமதி மாணிக்கம் தம்பதியரின் அருமை மருமகனும் கெங்காவதியின் ஆருயிர் கணவரும் பிரசன்னா, பிரசாந், பிரகாஷ், லோகதர்ஸன், சாருஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நளினகாந்தி, பிரேமிக்கா ஆகியோரின் அருமை மாமனும், யாதவி, அபிலாஷ் சிந்தூரி, ஸ்ரவன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடா றொறன்ரோவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

| | | |
|---|---|---|
| பெருங்குளம் சந்தி, | றொறன்ரோ கனடா | ச.சத்துருசங்காரம் |
| சங்கத்தானை வீதி, | தொ.பே.: 0014168434223, | (செவ்வந்தி) |
| சாவகச்சேரி. | 0016477295953. | சாவகச்சேரி. |

# மாலியில் ஆட்சிக் கவிழ்ப்பு

## அரசைக் கைப்பற்றியதாக கிளர்ச்சியாளர்கள் அறிவிப்பு



சுமார் 200,000 மக்கள் இருப்பிடங்களைவிட்டு வெளியேறியுள்ளனர்.

ஆபிரிக்க நாடான மாலியில் இராணுத்திலிருந்து பிரிந்து சென்ற கிளர்ச்சியாளர்களுக்கும் இராணுவத்துக்கும் இடையில் இடம்பெற்ற கடும் மோதலில் அந்த நாட்டு அரசை நேற்று கைப்பற்றியுள்ளதாக கிளர்ச்சிப் படை அறிவித்துள்ளது.

மாலியின் நாட்டின் வட பகுதியில் வலுப்பெற்றிருந்த அரசை அடக்குவதற்கு இப் புரட்சிநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் பமா கோவிலுள்ள ஜனாதிபதி மாளிகையை நேற்று கைப்பற்றிய கிளர்ச்சியாளர்களால் அமைச்சர்கள் பலர் கைது செய்யபட்டுள்ளனர். வெளிவிவகார அமைச்சர் செளமேய்லோ பௌபேயே மைகா மற்றும் உள்துறை அமைச்சர் கபெளஹோனா கோனே ஆகியோரும் கைது செய்யப்பட்டவர்களில் அடங்குவர்.

இதேவேளை, 1960 ஆம் ஆண்டு சுதந்திரம்பெற்ற மாலியின் வடபகுதியில் துவரெக் இனக் கிளர்ச்சியாளர்கள் சுதந்திரம் கோரி கிளர்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த ஜனவரி மாதம் அவர்களின் தாக்குதல் தீவிரமடைந்தது. இத்தாக்குதல் காரணமாக சுமார் 200,000 மக்கள் இருப்பிடங்களைவிட்டு வெளியேறியுள்ளன. இந்த மோதலை அரசு உரிய முறையில் கையாள வில்லை என நாட்டின் ஏனைய பகுதிகளில் அரசுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டப்பட்டுள்ளது.

மாலி மற்றும் அதன் அயல் நாடுகளான, அல்ஜீரியா, புர்கினா பெஸோ, லிபயா, நைகர் ஆகிய நாடுகளின் சுமார் 15 லட்சம் மக்களைக் கொண்ட துவாரெக் சமூகத்தினர் வசிக்கின்றனர். (ந)

# அமெரிக்காவுக்கு எச்சரிக்கை

## விமர்சனம் செய்தால் போர் அழைப்பு எனக் கருதப்படும் என்கிறது வட கொரியா

சியோல், மார்ச் 23

எங்களின் அணு ஆயுதங் கள் பற்றி விமர்சனம் செய்தால், கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என வட கொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென் கொரியத் தலைநகர் சியோலில் சர்வதேச நாடுகள் பங்கேற்கும் சர்வதேச அணு சக்திப் பாதுகாப்பு மாநாடு எதிர்வரும் 26, 27ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது.

இந்த மாநாட்டில் அணு ஆயுதப் பரவல் குறித்தும், பயங்கரவாதிகளிடம் இருந்து அணு ஆயுதங்களைப் பாதுகாப்பது குறித்தும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வலியுறுத்துவார். குறிப்பாக ஈரான் மற்றும் வடகொரிய நாடுகள் அணு ஆயுதங்களை மேம்படுத்துவதைத் தடை செய்வதற்கான முயற்சிகளை அவர் மேற்கொள்வார் .

அதற்காக ரஷ்ய ஜனாதிபதி திமித்ரி மெத்வதேவ், சீன ஜனாதிபதி ஹூ ஜிண்டாவோ ஆகியோரைச் சந்தித்துப் பேச ஒபாமா திட்டமிட்டுள்ளார்.

இந்த நிலையில் சியோல் மாநாடு குறித்து வட கொரியா வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளது.

(ந)

# வேலைக்காரியை கொடுமைப்படுத்திய இந்தியத் தூதரக அதிகாரிக்கு தண்டனை

## ரூ.7.5 கோடி நஷ்டஈடாக வழங்குமாறு தீர்ப்பு



நியூயோர்க், மார்ச் 23

வேலைக்காரப் பெண்ணைத் துன்புறுத்திய வழக்கில் இந்திய துணை தூதரகத்தில் செய்தி மற்றும் கலாசார ஆலோசகராக ப் பணியாற்றிய நீனா மல்ஹோத்ரா 7.5 கோடி நஷ்ட ஈடாக வழங்க வேண்டும் என நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள இந்திய துணை தூதரகத்தில் பணியாற்றிய இவர் கடந்த 2006 முதல் 2009 வரையான காலப்பகுதியில் இந்தியாவைச் சேர்ந்த சாந்தி குருங் என்ற பெண் வேலைக்காரப் பெண்ணைத் துன்புறுத்தியுள்ளார்.

இதுகுறித்து, கடந்த 2010 ஜூலையில் அமெரிக்க நீதிமன்றத்தில் சாந்தி குருங் வழக்குத் தொடுத்தார். நீனா தம்பதி, தன்னை கொத்தடிமை போல நடத்தினர் என்று மனுவில் கூறியிருந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பிராங்க் மாஸ், வீட்டு வேலைக்காரியை துன்புறுத்தியது ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்டவருக்கு நீனா தம்பதி 7.5 கோடி நஷ்ட ஈடாக வழங்க உத்தரவிட வேண்டும் என பரிந்துரை செய்திருந்தார்.

இதற்கிடையே, தங்கள் மீதான வழக்குக்குத் தடை விதிக்க வேண்டும் என டெல்லி உயர்நீதிமன்றத்தில் நீனா மனுத் தாக்கல் செய்தார். இந்திய அரசு சார்பில் வெளிநாடுகளில் பணிபுரிகிறவர்கள் மீது சம்பந்தப்பட்ட நாடுகள் வழக்குத் தொடுப்பது சட்டத்துக்குப் புறம்பானது என்று நீனா வாதாடினார். இதை ஏற்றுக் கொண்ட உயர்நீதிமன்றம் கடந்த சில தினங்களுக்கு முன்பு நீனா மீதான வழக்கை விசாரிக்க அமெரிக்க நீதிமன்றத்துக்குத் தடை விதித்தது.

இந்தநிலையில், நீதிபதி மாஸ் பரிந்துரையை ஏற்று அமெரிக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. சாந்தி குருங் குற்றச்சாட்டுக்கு நீனா தரப் பில் விளக்கம் அளிக்க 14 நாள்கள் கால அவகாசம் கொடுக்கப்பட்டது. ஆனால், அவர் எவ்வித மறுப்பும் தெரிவிக்கவில்லை. எனவே, சாந்திக்கு 7.5 கோடி நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என நீதிபதி விக்ரர் மரேரோ தீர்ப்புக் கூறியுள்ளார்.

# டைட்டானிக் தபால் தலை கனடாவில் வெளியீடு




தபால் தலைகள் எதிர்வரும் ஏப்ரல் 5ஆம் திகதி வெளியிடப்படும்.

டைட்டானிக் கப்பல் மூழ்கி நூற்றாண்டுகள் நிறைவு தினத்தை முன்னிட்டு கனடாவில் புதிய தபால் தலைகள் வெளியிடப்படுகின்றன.

கடந்த 1912ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் திகதி வடக்கு அட்லாண்டிக் பெருங் கடலில் பனிப்பாறை ஒன்றில் மோதி டைட்டானிக் சொகுசுக் கப்பல் மூழ்கியது.இந்த விபத்தில் கப்பலில் பயணம் செய்த 1500பேர் உயிரிழந்தனர்.

அதன் நினைவு நாள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் அனுஷ்டிக்கப்பட உள்ள நிலையில் இதற்காக டைட்டானிக் கப்பல் பொறிக்கப்பட்ட 5 தபால் தலைகள் கனடாவில் உருவாக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் ஏப்ரல் 5ஆம் திகதி அவை வெளி யிடப்படும்.

இவற்றை டெனிஸ் பேஜ், ஒலிவர் ஹில் ஆகியோர் வடிவமைத்துள்ளனர்.

கேப் ரேஜ் என்ற கடல் முனையும் செளதாம்ப்டன் மற்றும் ஹால்மேக்சுக்கு இடையில் டைட்டானிக் கப்பல் நிற்பதுமான காட்சி ஒரு தபால்தலையில் காணப்படுகிறது.

இந்தக் கேப் ரேஜில் உள்ள வானொலி நிலையத்துக்குத் தான் டைட்டானிக் விபத்து குறித்த தகவல் முதலில் தகவல் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.


## பாக். நட்பை விரும்புகிறது அமெ.

வொஷிங்டன், மார்ச் 23

பாகிஸ்தானுடன் ஆக்கபூர்வமான முறையில் நட்பை பலப்படுத்த விரும்புவதாக அமெரிக்க வெளியுற வத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் கூறியுள்ளார்.

வொஷிங்டனில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசியபோதே அவர் இதனை தெரிவித்தார். பாகிஸ்தானில் முகாமிட்டுள்ள அமெரிக்க தலைமையிலான நேட்டோ படைகள் தாக்கியதில் பாகிஸ்தான் இராணுவத்தினர் உயிரிழந்தனர். இதனால் இரு நாடுகளுக்கு இடையிலான உறவில் சிக்கல் ஏற்பட்டது. (ந)

## கீதைக்கு தடை வழக்கு நிராகரிப்பு




மொஸ்கோ, மார்ச் 23

பகவத் கீதைக்குத் தடை விதிக்கக் கோரி ரஷ்யாவில் தொடரப்பட்ட வழக்கு நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்துக்களின் புனித நூலான பகவத் கீதையின் ரஷ்ய மொழிபெயர்ப்பை, அந்த நாட்டில் உள்ள கிஸ்கான் என்ற அமைப்பு கடந்த ஆண்டு வெளியிட்டது.

அந்த புத்தகத்தில் தீவிரவாதத்தைத் தூண்டும் கருத்துக்கள் இடம்பெற்று இருப்பதாகவும், இந்தப் புத்தகத்துக்குத் தடை விதிக்கக் கோரியும் சைபீரியாவின் டோம்ஸ்க் நகர நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கு இந்தியாவில் மட்டுமின்றி உலகில் வாழும் இந்துக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதுடன் பகவத் கீதைக்குத் தடை விதிக்கக் கூடாது எனவும் கோரிக்கை விடப்பட்டது.

இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று அளிக்கப்பட்டது. அதன்படி பகவத் கீதைக்குத் தடை விதிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை, நீதிபதிகள் நிராகரித்து தீர்ப்பளித்தனர். (ந)

# பிரிட்டிஸ் மகாராணியின் ஒய்வு: ஊஹூம்




''பிரிட்டனுக்கு இன்னும் பல ஆண்டுகள் சேவை புரிவேன்'' என்று வைரவிழாவைக் கொண்டாடும் எலிசபெத் மகா ராணி கூறியுள்ளார்.

இவர் பதவியேற்று 60 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இதனையொட்டி பிரமாண்ட விழா ஒன்று நடத்தப்பட்டது. இதன் போது பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் இரு அவையினரும் கூடி ராணிக்கு வாழ்த்துகளைக் கூறினர். இந் நிகழ்ச்சில் ஓவியம் தீட்டப்பட்ட கண்ணாடிச் சாளரம் ஒன்று வைர விழாவின் நினைவாகத் திறந்து வைக்கப்பட்டது.

அரங்கத்தில் நடந்த விழாவில் ராணிக்கு அவரது கணவரும் அரச அலங்காரங்களுடன் கலந்து கொண்டார். நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளையும் எலிசபெத் இப்போது ஆறாவது முறையாகச் சந்திக்கிறார்.இந்த நிகழ்ச்சியில் மகாராணி எலிசபெத் மேலும் தெரிவித்ததாவது:-

நம் நாட்டின் முந்தைய வரலாறு துணிவு, நம்பிக்கை, சகிப்புத்தன்மை போன்றவற்றை உருவாக்கியுள்ளன. இந்த நாட்டுக்கும், மக்களுக்கும் பெரும் சேவை ஆற்றுவதற்கு என் குடும்பம் முழு ஒத்துழைப்பு அளித்தது. எனக்கு முன்பு விக்டோரியா மகாராணியாரும் அறுபதாண்டுகள் அரச பதவியில் இருந்திருக்கிறார். இந்தப் பதவிக்காலத்தில் 12 பிரதமர்களுக்கு வழி காட்டும் கடமையும் இருந்தது என்றார்.

அத்துடன் பிரிட்டிஷ் இராணுவத்தின் தியாகத்துக்கும் வீரத்துக்கும், தியாகத்துக்கும் பாராட்டுகளையும் தெரிவித்தார்.




*கடந்த மாதம் 24 ஆம் திகதி கறுப்பு இன இளைஞர் ஒருவர் வெள்ளை இன பாதுகாப்பு படையதிகாரியால் சுட்டுக்கொல்லப்பட்டார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நியூயோர்க் நகரில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நடத்தினர். பத்துலட்சம் பேருக்கு மேற்பட்டவர்களால் கையெழுத்திடப்பட்ட பிரேரணை ஒன்றும் அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.*

# பப்புவா நியூகினியாவில் நிலநடுக்கம்

## பெரும் உயிர்ச் சேதம் குறித்து அச்சம்

இந்தோனேஷியா அருகே உள்ள பப்புவா நியூகினியாவில் நேற்று காலை 8.15 மணியளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. தலைநகரம் கொரோகாவில் இருந்து 63 கிலோ மீற்றர் தென்கிழக்குப் பகுதியில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது.6.7 ரிச்டர் அளவுக்கு இந்த நிலநடுக்கம் பதிவாகியிருந்தது. இந்த பேரிடரில் பெரும் உயிர், உடைமைகள் ஏற்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

பூமிக்கு அடியில் 105 கிலோ மீற்றர் ஆழத்தில் இதன் மையம் கொண்ட இந்த நில நடுக்கத்தால் வீடுகள் பயங்கரமாக குலுங்கின. மக்கள் அலறியடித்து வீட்டை விட்டு ஓடினார்கள்.

நிலநடுக்க பகுதி மலைப் பிரதேசமாகும். அங்கு தகவல் தொடர்பு வசதிகள் இல்லை. எனவே சேதம் பற்றிய விவரம் வெளியே தெரியவில்லை என்று கூறப்படுகிறது.

நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதியில் 1 லட்சத்து 47 ஆயிரம் பேர் வசிக்கின்றனர். 1998ஆம் ஆண்டு பப்புவா நியூகினியா நாட்டில் நிலநடுக்கம் ஏற்பட்டு 2 ஆயிரத்து 183 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமெ. மீண்டும் எச்சரிக்கை

**ஈரானிடமிருந்து எரிபொருள் இறக்குமதி செய்யும் நாடுகள் அதனை நிறுத்தாவிட்டால் அந்த நாடுகள் மீது தடைவிதிக்கப்படும்**

இந்தியா, சீனா உட்பட மேலும் 12 நாடுகள் ஈரானிடம் இருந்து தொடர்ந்து எண்ணெய் இறக்குமதி செய்து வருகின்றன. ஜூன் மாதம் 28ஆம் திகதிக்குள் இறக்குமதியைக் கணிசமான அளவுக்கு குறைக்க வேண்டும். அதைச் செய்யத் தவறும் நாடுகள் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும்.




வொஷிங்டன்,மார்ச் 23

ஈரானிடம் இருந்து எரி பொருளை இறக்குமதி செய்யும் நாடுகள் அதை நிறுத்தா விட்டால் அந்த நாடுகள் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது. அமெரிக்காவின் இந்த எச்சரிக்கைக்குச் சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஈரானின் அணு சக்தித் திட்டங்கள் அமைதிப் பணிகளுக்கானவை என அந்த நாடு கூறி வந்தாலும், அதை அமெரிக்காவும், மேற்குலக நாடுகளும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அதனால் அந்த நாட்டின் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. சர்வதேச அரங்கில் மேலும் தனிமைப்படுத்த விரும்பும் அமெரிக்கா அந்த நாட்டிடம் இருந்து எரிபொருள் இறக்குமதி செய்யும் நாடுகள், ஜூன் மாதம் 28ஆம் திகதிக்குள் இறக்குமதியைக் கணிசமான அளவுக்கு குறைக்க வேண்டும். அதைச் செய்யத் தவறும் நாடுகள் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கப்படும் என எச்சரிக்கை விடுத்திருந்தது.

அந்த எச்சரிக்கையை உறுதி செய்யும் விதத்தில் நேற்றுமுன்தினம், அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் 11 நாடுகள் அடங்கிய பட்டியலை வெளியிட்டார். அந்தப் பட்டியலில் பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மன், ஸ்பெயின், இத்தாலி, கிரீஸ், செக் குடியரசு, பெல்ஜியம், நெதர்லாந்து, போலந்து ஆகிய ஐரோப்பிய நாடுகளும், ஒரேயொரு ஆசிய நாடான ஜப்பானும் இடம் பெற்றுள்ளன.

இந்த நாடுகள் ஈரானிடம் இருந்து எண்ணெய் இறக்குமதியை கணிசமான அளவில் குறைத்துள்ளதாகத் தெரிவித்த செயலர் ஹிலாரி அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆணையச் சட்டம் 2012இன் படி இந்த நாடுகளின் மீது அமெரிக்கா எவ்வித பொருளாதாரத் தடையையும் விதிக்காது ஏனைய நாடுகள் இந்த நாடுகளைத் தங்கள் வழிகாட்டிகளாகக் கருதி இவற்றின் வழி நடக்க வேண்டும் என அறிவுரை கூறியுள்ளார்.

ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் முற்றிலுமாக எரிபொருள் இறக்குமதியை படிப்படியாகக் குறைத்து வரும் நிலையில் இந்தியா, சீனா உட்பட மேலும் 12 நாடுகள் ஈரானிடம் இருந்து தொடர்ந்து எரிபொருள் இறக்குமதி செய்து வருகின்றன.

இவை தங்கள் இறக்குமதியை குறைக்கத் தயாராக இருந்தால் அவற்றுடன் பேச அமெரிக்கா தயார் என ஹிலாரி மேலும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. (ந)

## பாகிஸ்தானுக்கு உலக வங்கி கடன்


வொஷிங்டன்,மார்ச் 23

பாகிஸ்தானின் இரு திட்டங்களுக்கு உலக வங்கி 1 பில்லியன் டொலர் கடனுதவி வழங்கியுள்ளது. இவ்வாறு தெரிவித்தார் பாகிஸ்தானுக்கான உலக வங்கியின் இயக்குநர் ரெய்ச் சிட் பென்மெஸ்யூட்.

பாகிஸ்தானின் எரிசக்தி பாதுகாப்பு மற்றும் நீர்மின்சார உற்பத்தி ஆகிய திட்டங்களுக்காக உலக வங்கியிடம் கடனுதவி கோரப்பட்டது. அதன்படி பாகிஸ்தானின் நீர்ப்பாசனத்துறை, மற்றும் மின்துறையின் மேம்பாட்டுக்கு 1 பில்லியன் டொலர் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இத்தகைய கடனுதவி மூலம் பாகிஸ்தானின் விவசாயம், மற்றும் தொழில்துறைக்கு தேவையான மின்சாரம் கிடைக்க வழிவகை ஏற்படும். தற்போதைய சூழ்நிலையில் பாகிஸ்தானின் பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவை பெரும் சவாலை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இவற்றை எதிர்கொள்ள நீர்நிலைகள் மற்றும் எரி சக்தியை மேம்படுத்துவதே சரியானதாக இருக்கும் எனப் பாகிஸ்தானின் நீர் மற்றும் நிலவள நிபுணர்கள் கூறுகின்றனர்.(ந)

## இந்தோனேஷிய தூதரகம் அருகே பரிஸில் 'பொதி' குண்டு வெடிப்பு



பரிஸ்,மார்ச் 23

பிரான்ஸின் தலைநகர் பரிஸில் இந்தோனேஷியத் தூதரகம் அருகே சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. இந்தச் வெடிப்புச் சம்பவத்தில் அந்தப் பகுதியில் உள்ள கட்டடங்கள் கடும் சேதம் அடைந்தன.

இந்தப் பயங்கரக் குண்டு வெடித்ததில் இரண்டு கார்கள் தீப்பற்றி எரிந்தன. உயிர்ச் சேதமோ காயமோ எவருக்கும் ஏற்படவில்லை. இந்தோனேஷியத் தூதரகத்தின் ஜன்னல் அருகே இருந்த பொதியில் வயர்கள் இருந்ததாகவும், அதிலிருந்த பொதி செய்யப்பட்ட வெடிகுண்டு வெடித்திருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்துக்கு எந்த ஓர் அமைப்போ அல்லது தனி நபரோ இது வரை பொறுப்பேற்கவில்லை. இதற்கு முன்பு கடந்த 2000 ஆம் ஆண்டில் இந்தோனேஷியத் தூதரகம் அருகே இதேபோன்ற குண்டு வெடிப்பு நிகழ்ந்தது குறிப்பிடத்தக்கது. (ந)

உ
சிவமயம்

**திருமண அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான கர வருஷம் பங்குனி மாதம் 10 ஆம் திகதி [23.03.2012] வெள்ளிக்கிழமை காலை 09.28 மணி முதல் 10.35 மணிவரையுள்ள இடப லக்கினம் கூடிய சுபமுகூர்த்தத்தில்

திரு.திருமதி
பத்மநாதன்
தம்பதிகளின்
ஏக புதல்வன் திருநிறை
செல்வன்
**ஜீவரஞ்சன்**
அவர்களுக்கும்



திரு.திருமதி
சிவகுருநாதன்
தம்பதிகளின்
ஏக புதல்வி திருநிறை
செல்வி
**துவாரகா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*Hall Address: Palace of Asia 285 Commerce - Dr a Fort Washington Pa 19034 USA*

வரவேற்புபசாரம்: 24.03.2012 [சனிக்கிழமை] பிற்பகல் 06.00 மணியளவில் இடம்பெறும்.
(Palace of Asia Hotel)

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்
(இரு வீட்டார் அழைப்பு)

திரு.திருமதி பத்மநாதன் குடும்பத்தினர்
4, Cherry St
Downigtown, Pa19335
USA.

திரு.திருமதி சிவகுருநாதன் குடும்பத்தினர்
925, Lawrence Rd, 110
Havertown, Pa19083
USA.

(15911)(2-6-7)

**மணமகள் தேவை**

யாழ். இந்து உயர் கௌரவ குடும்பம், சிறந்த குடும்ப பின்னணியைக் கொண்ட சொந்தமாக பிரசித்தி பெற்ற சிறு நிறுவன உரிமையாளர் வயது 51 விவாகரத்து பெற்றவர். இளமையான தோற்றம் கொண்ட 8 இல் செவ்வாய் நட்பு பெற்றது. இவருக்கு அதே உயர் கௌரவ குடும்பத்தில் வாழ்க்கைத் துணை (மண மகள்) தேவை. குறிப்பு: தொலை பேசி மற்றும் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

மே/பா உதயன்
விளம்பர இல:4341
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

எமது நலன்புரிச் சங்கத்தின் தலைவரும்,
கிளி மாவட்டச் செயலக மேலதிக அரசாங்க அதிபருமாகிய,

**செல்லமுத்து ஸ்ரீநிவாஸன்**



அவர்கள் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்திற்கு பதவி உயர்வு பெற்றுள்ளார். இவருக்கு எமது நலன்புரிச் சங்கத்தின் பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி.

உ
சிவமயம்

**மாங்கல்யதாரண வாழ்த்து**

அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணியர், கரம்பன் முருகன் அருளோடு இன்று உத்திரட்டாதி நட்சத்திரமும், பூர்வபக்க பிரதமை திதியும், சித்த யோகமும் கூடிய காலை 9.30 மணிமுதல் 10.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் பாண்டிச்சேரி கந்தன் திருமண மண்டபத்தில் இல்லறத்தில் இணையும்

அல்லையம்பதி
சிவஸ்ரீ ராம் கெங்காதரக்குருக்கள்
நந்தினிதேவி தம்பதிகளின்
ஜேஷ்ட புதல்வன்
**ஸ்ரீகர சர்மா**

கரம்பன்
சிவஸ்ரீ கேசவசர்மா
நாகேஸ்வரி தம்பதிகளின்
ஜேஷ்ட புதல்வி
**சாரங்கி**

இவர்களை அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணியர், கரம்பன் முருகன் அருளோடு சகல சௌபாக்கியங்களும் பெற்று இன்றுபோல என்றும் வாழ மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

குடும்பத்தினர்,
...தாபீடம், அல்லையம்பதி.

(C)9888(9,10)

# ஸ்பெக்ட்ரத்தை மிஞ்சியது கனிம - சுரங்க ஊழல்

## இழப்பு 26,79 050 கோடி ரூ.

டில்லி,மார்ச்.23

இந்தியாவில் உள்ள நிலக்கரி, கனிமம் மற்றும் சுரங்கங்கள் முறையாக ஏலம் விடப்படாததால் மத்திய அரசுக்கு 26 லட்சத்து 79 ஆயிரத்து 50 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக மத்திய தலைமை தணிக்கைக் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளி யாகியது.



இந்த விவகாரம் நேற்று நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கிளப்பின. இதற்கு பதில் அளித்த மத்திய கனிம வளத்துறை அமைச்சர் ஸ்ரீ பிரகாஷ் ஜெய்ஸ்வால்,

நான் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் 2 ஆம் கட்ட அமைச்சரவையில் தான் பொறுப்பேற்றேன் என்றும் இது தொடர்பான அறிக்கை விவரம் இன்னும் எனக்குக் கிடைக்கவில்லை. படித்துப் பார்த்த பின்பே உண்மை நிலையை என்னால் சொல்ல முடியும் என்று அவையில் தெரிவித்தார்.

இவரது பேச்சில் திருப்தி அடையாத எதிர்க்கட்சியினர் தொடர்ந்து கூச்சலிட்டனர். இதற்கு பிரதமர் விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் இது தொடர்பான விவாதத்தை நாடாளுமன்றத்தில் நடத்த வேண்டும் என்றும் குரல் எழுப்பினர். இதனால் நாடாளுமன்ற இரு அவைகளும் நேற்று ஒத்திவைக்கப்பட்டன.

2004 - 2009 வரையிலான கால கட்டத்தில் சுமார் 150 கனிம - சுரங்க பிளாக்குகள் தனியாருக்கு ஒப்படைக் கப்பட்டுள்ளன. இவை யாவும் முறையாக ஏலம் விடப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக அரசுக்கு 26 லட்சத்து 79 ஆயிரத்து 50 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதில் பிரபல டாட் ஸ்டீல் லிமிட்டெட் உட்பட பல்வேறு தனியார் நிறுவனங்கள் கொள்ளை லாபம் அடைந்துள்ளன.

இதற்குப் பதில் அளித்துள்ள காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான ஷகீல் அகம்மது தெரிவித்ததாவது:

இந்த விடயத்தை நான் பத்திரிகையில் பார்த்துத் தான் தெரிந்து கொண்டேன். இது ஊழல் அல்ல இழப்பு என்றார். இது பழைய அறிக்கை என்று சில அமைச் சர்கள் சொல்லிச் சமாளிக்கின்றனர். நேற்று வெளியாகியிருக்கும் இழப்பு ஸ்பெக்ட்ரம் முறைகேட்டின் ( 1லட்சத்து 76 ஆயிரம் கோடி ) மதிப்பை விட 6 மடங்குகள் அதிகம் ஆகும் - என்றார் அவர்.(வ)

## டில்லியில் சிக்கிய தீவிரவாதி

புதுடில்லி, மார்ச் 23

பாபர் கல்சா என்ற பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய தீவிரவாதி ஒருவனை டில்லிப் பொலிஸார் கைதுசெய்தனர்.

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட அமைப்புகளுள் பஞ்சாபில் செயற்படும் சர்வதேச பாபர் கல்சா என்ற பயங்கரவாத அமைப்பும் ஒன்று.

இந்த நிலையில் நேற்று முன்தினம் புதுடில்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் மர்ம ஆசாமி ஒருவரிடம் சந்தேகத்தின் பேரில் பொலிஸார் நடத்திய விசாரணையில், அவரின் பெயர் நரேந்தர் சிங் என்பதும், பாபர் கல்சா அமைப்பைச் சேர்ந்தவர் என்றும் தெரியவந்தது.

இவர் ஜேர்மனிக்குச் சென்று முக்கிய தீவிரவாதிகளைச் சந்திக்கத் திட்டமிட்டிருந்ததும் தெரியவந்தது.'

இதையடுத்து அவரைக் கைது செய்த பொலிஸார், குறுந்தகடுகள், புகைப் படங்கள் மற்றும் முன்னாள் தீவிரவாதி ஜெர்னல்சிங் பிந்தரன் வாலே எழுதிய புத்தகங்கள் ஆகிய வற்றை அவரிடமிருந்து பறிமுதல் செய்தனர்.

(வ)

## 2ஜி வழக்கில் ராஜாவுக்கு விரைவில் அழைப்பாணை

### நாடாளுமன்றக் கூட்டுக் குழு முடிவு



டில்லி,மார்ச்23

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் தொடர்பாக இந்திய நாடாளுமன்றக் கூட்டுக் குழு விசாரணை நடைபெற்று வருகிறது. ஸ்பெக்ட்ரம் ஊழலில் தொடர்புடையவர்கள் இந்த குழு முன் முன்னிலையாகி விளக்கம் அளித்து வருகின்றனர். இந்தவிவகாரத்தில் தொலைத் தொடர்புத்துறை முன்னாள் அமைச்சர் ராஜாவுக்கு அழைப்பாணை அனுப்ப, நாடாளுமன்ற கூட்டுக்குழு நேற்று முடிவு செய்துள்ளது.

கடந்த 2006-2007ஆம் ஆண்டுகளில், தொலைத் தொடர்புச் செயலராக இருந்த டி.எஸ்.மாத்தூரிடம், கூட்டுக் குழுத்தலைவர் பி.சி. சாக்கோ நேற்று விசாரணை நடத்தினார்.

''தொலைத் தொடர்புத் துறை மற்றும் அதன் அதிகாரிகளின் ஆலோசனைப் படிதான், பல விடயங்களில் முன்னாள் அமைச்சர் ராஜா செயற்பட்டார். சில விடயங்களில் ராஜாவின் முடிவை எதிர்த்தேன். ஆனால், இந்த எதிர்ப்பை நான் பதிவு செய்யவில்லை'' என்று விசாரணையின்போது மாத்தூர் தெரிவித்தார்.

இதனையடுத்து பேசிய சாக்கோ,

தொலைத் தொடர்புத் துறையின் மற்றொரு முன்னாள் செயலர் சித்தார்த்த பெகுராவிடம் விசாரணை நடத்த, அடுத்த மாதம் 11 ஆம் திகதி அழைப்பாணை அளிக்க உள்ளோம். தற்போது திகார் சிறையில் பெகுரா உள்ளார். அவரை எங்கள் முன் முன்னிலைப்படுத்துமாறு, சிறை அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்ப உள்ளோம். இதே போல, முன்னாள் அமைச்சர் ராஜாவிடமும் விசாரணை நடத்த அழைப்பாணை அனுப்ப உள்ளோம். எனினும், அவருக்கு அழைப்பாணை அளிக்கப்படும் திகதி முடிவு செய்யப்படவில்லை - என்றார். (வ)



சங்கரன் கோயில் இடைத்தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட்ட முத்துச்செல்வி தமிழக முதல்வர் ஜெயலலிதா முன்னிலையில் சட்டப்பேரவை உறுப்பினராக நேற்றுப் பதவியேற்றார்.

## சாப்பிட்டதற்கு பணம் தர மறுத்த பீஹார் மாணவர்கள்

### கேட்டவர் தாக்கப்பட்டார்; துப்பாக்கிகளுடன் இருவர் கைது

சமையல் செய்து கொடுத்தவர் அதற்கான பணத்தைக் கேட்டதற்காக அவரை அடித்து உதைத்துத் துப்பாக்கியைக் காட்டி மிரட்டியதாக 2 பீஹார் மாணவர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். மேலும் 6 மாணவர்களிடம் விசாரணை இடம் பெற்று வருகிறது.

அண்மையில் தான் சென்னை வேளச்சேரியில் வங்கிக் கொள்ளையில் ஈடுபட்ட வட மாநிலக் கொள்ளையர்கள் 5 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த நிலையில் சில வட மாநில மாணவர்கள் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி ஒருவரை அடித்து உதைத்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாலவாக்கத்தைச் சேர்ந்தவர் சுஜீத். இவர் நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம் பகுதிகளில் வாடகை வீடுகளில் தங்கிப் படித்து வரும் வட மாநில மாணவர்களுக்கு சமையல் செய்து கொடுத்து வருகிறார். இதற்காக கட்டணம் வாங்குவார்.

ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள ஒரு வீட்டில் தங்கி சத்யபாமா பொறியியல் கல்லூரியில் கல்வி கற்கும் 8 மாணவர்களுக்கும் சுஜீத்தான் சமையல் செய்து வந்தார். ஆனால் அதற்குரிய கட்டணத்தை அவர்கள் செலுத்தாமல் இருந்து வந்துள்ளனர். இதையடுத்து தனது சகோதரர் ரஞ்சித்திடம் இது குறித்துக் தெரிவித்தார் சுஜீத்.

இதையடுத்து ரஞ்சித், அந்த மாணவர்களிடம் போய் ஏன் பணம் கொடுக்காமல் இருக்கிறீர்கள் என்று கேட்டுள்ளார். இதனால் கோபமடைந்த அந்த மாணவர்கள், ரஞ்சித்தை சரமாரியாக அடித்து உதைத்து ஒரு அறையில் போட்டனர். பின்னர் துப்பாக்கியைக் காட்டி மிரட்டியுள்ளனர்.

படுகாயமடைந்த ரஞ்சித்தை ஒரு மோட்டார் சைக்கிளில் ஏற்றி வீதியோரமாகப் போட்டு விட்டுப் போய் விட்டனர்.

இதையடுத்து பொலிஸார் சம்பந்தப்பட்ட வீட்டுக்கு விரைந்தனர். அங்கிருந்த எட்டு மாணவர்களையும் பொலிஸ் நிலையம் கொண்டு விசாரித்து இருவரைக் கைதுசெய்தனர்.

அவர்களிடமிருந்து 2 கைத்துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களைப் பொலிஸார் பறிமுதல்செய்துள்ளனர்.

## 2500 வருடங்கள் பழமையான தாழி கண்டுபிடிப்பு

கோவை, மார்ச்.23

கோவை காளப்பட்டிக்கு அருகில் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் பயன்படுத்திய, முதுமக்கள் தாழி கண்டுபிடிக்கப்பட்டது. காளப்பட்டி பிரதேச சபைக் குட்பட்டது, கைக்கோள் பாளையம் கிராமம். இந்தப் பகுதியில் உள்ள, கருப்பெருமாள் குட்டை நீர்நிலையில், 2500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்களின், குடியிருப்புப் பகுதிகள் மற்றும் பெருங்கற்கால, ஈமச்சின்ன பகுதிகளும் கண்டறியப்பட்டன.

இந்தப் பகுதியில், மாணவர்களுடன் ஆய்வு மேற்கொள்ளும், பி.எஸ்.ஜி. கல்லூரி இணைப் பேராசிரியர் ரவி தெரிவித்ததாவது:

காளப்பட்டி அருகே, மாரப்ப முதலியாரின் தோட்டத்தில், முதுமக்கள் தாழி, மட்கலங்கள் கண்டறியப்பட்டன. இதனுடன், மேலும் சில மட்கலச் சில்களும், சேகரிக்கப்பட்டன. இதில், கொங்கு நாட்டின் வண்ணப் பூச்சு,வரிக்கோடுகளும் இருந்தன.

தோட்டத்தில், கல்லறைகள் கொண்டு, கல்திட்டைகள் அமைந்த, ஈமச்சின்னங்கள் உள்ளன. வாழ்வியல் பகுதிகளில், இரும்பை உருக்கிப் பயன்படுத்தியதற்கான, இரும்புக் கசடுகள் கண்டறியப்பட்டன. இந்தப்பகுதியில் கிடைத்த, முதுமக்கள் தாழி, 65 சென்ரி மீற்றர் உயரமும், 29 சென்ரி மீற்றர் குறுக்களவும், 58 சென்ரி மீற்றர், நடு வட்டமும், ஒன்றரை சென்ரி மீற்றர், தடிமனும் கொண்ட, உறுதியான சிவப்பு வண்ணம் பூசப்பட்ட, சுடுமண் தாழியாக உள்ளது. (வ)

## நடிகை மனோரமா ஆஸ்பத்திரியில்



சென்னை,மார்ச்.23

பழம்பெரும் நடிகை மனோரமா மயிலாப்பூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் குளியலறையில் வழுக்கி விழுந்ததால் தலையில் அடிபட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர், அறுவைச் சிகிச்சைக்குபின் வீடு திரும்பி இருந்தார். ஆனால் தொடர்ந்து தலைவலியால் அவதிப்பட்டு வந்தார். மயிலாப்பூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் தலைவலிக்காக அனுமதிக்கப்பட்ட அவருக்கு சிறுநீரகத்தில் கல் உள்ளதாகக் கண்டறியப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகின்றது. எ(வ)

## குஜராத் சட்டப் பேரவையிலும் ஆபாசப் படங்களால் அமளி

குஜராத் சட்டப்பேரவை கூட்டத் தொடரின்போது மடிக்கணினியில் ஆபாசப் படம் பார்த்துக் கொண்டிருந்த இரு பாரதீய ஜனதாக் கட்சி உறுப்பினர்கள் சிக்கியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற சட்டப்பேரவையில் இந்த விவகாரம் பெரும் அமளியை ஏற்படுத்தியதால் அவை, சுமார் ஒரு மணித்தியாலம் ஒத்திவைக்கப்பட்டது.

சங்கர் சௌத்ரி மற்றும் ஜீதா பார்வாட் ஆகிய இரு உறுப்பினர்கள் நேற்று முன்தினம் தமது மடிக்கணினியில் ஆபாசப் படங்களை பார்த்துக் கொண்டிருந்தது காட்சிகள் ஊடகங்களின் கமராக்களில் பதிவாகியுள்ளன.

இதுதொடர்பாகச் செய்தியாளர் ஒருவர் பேரவைத் தலைவரிடம் முறைப்பாடு செய்தார்.

இந்தச் சம்பவத்தால் அவையில் நேற்று முன்தினம் பெரும் அமளி ஏற்பட்டது. 2 பேரையும் அவையில் இருந்து நீக்க வேண்டும் என்று காங்கிரஸ் உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு முன்பு, கர்நாடகாவில் ஆபாசப்படம் பார்த்ததாக 3 அமைச்சர்கள் பிடிபட்ட நிலையில் தற்போது குஜராத்திலும் இதே விவகாரத்தில் உறுப்பினர்கள் சிக்கியுள்ளது நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (வ)

## பீஹாரில் மாவோயிஸ்ட்டுகள் வாகனங்களுக்குத் தீ

பீஹார் மாநிலம் பங்கா மாவட்டம் சுல்தான்கஞ்ச் தியோகர் வீதியில் நான்கு வாகனங்களை மாவோயிஸ்ட்டுகள் நேற்று முன்தினம் வழி மறித்து அவற்றுக்குத் தீ வைத்துள்ளனர். இந்தச் சம்பவம் அந்த மாநிலத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வாகனங்களை வழி மறித்த மாவோயிஸ்ட்டுக்கள், அவற்றில் பயணித்தவர்களை இறக்குமாறு கூறி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

மேலும், மக்களை மிரட்டுவதற்காக அவர்கள் வானத்தை நோக்கியும் சுட்டுள்ளனர். இது குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# திணறும் அப்பிள் நிறுவனம்




அப்பிள் நிறுவனத்தின் சாதனங்கள் வெளிவரும் போதெல்லாம் முதல் நாளே கடைகளில் பெருமளவு கூட்டம் அலை மோதும். அன்றே வாங்கியாக வேண்டும் என்பது போல மக்கள் வெறியுடன் கடை முன் கூடி வாங்க முயற்சிப்பார்கள்.

இதனால் தற்போதெல்லாம் அப்பிள் தன் இணையத்தளம் மூலமும் விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. விற்பனை மையங்களில் சென்று வாங்க முடியாமல் திரும்பும் ஏமாற்றத்தைத் தவிர்க்க, மக்கள் இணையத்தளத்தில் புதிய ஐ-பேடிற்குப் பதிந்து வைத்துள்ளனர். ஆனால் பதிந்தவர்களின் எண்ணிக்கை எதிர்பார்த்ததற்கு மேலாக இருப்பதால், அவர்களுக்கு கடந்த16 ஆம் திகதி வழங்க முடியாத நிலைக்கு அப்பிள் தள்ளப்பட்டுள்ளது. இதனால் ஒரு நபர் இரண்டு ஐ-பேட் மட்டுமே பதிவு செய்ய முடியும் என்ற கட்டுப்பாட்டை விதித்துள்ளது.

பதிந்தவர்கள் மூன்று நாள்கள் வரை காத்திருக்க வேண்டியதிருக்கும் என்ற தகவலும் தரப்பட்டுள்ளது. இதனால் விற்பனை மையங்களில் கூட்டம் அதிகமாகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மையங்களில் கூட்டம் கூடுகிறது என்ற தகவல் உண்மையா என்ற ஐயம் சிலருக்கு எழலாம். கடந்த முறை ஜனவரி மாதத்தில் சீனாவின் தலைநகர் பெய்ஜிங்கில் ஐபோன் 4 எஸ் விற்பனை செய்திடும் அப்பிள் மையம், அறிவித்தபடி விற்பனையை மேற்கொள்ள முடியாது என்று அறிவித்த போது, கூடி இருந்தவர்கள் முட்டைகளையும், கற்களையும் கடை மீது எறிந்து சேதப்படுத்தினார்கள்.

2012 ஆம் ஆண்டில் 7 கோடி புதிய ஐ-பேட் விற்பனை செய்யப்படும் என்று ஆய்வு மையங்கள் எதிர்பார்த்துள்ளன. இது அப்பிள் நிறுவனத்தின் விற்பனை 71வீதத்தால் உயர வழி வகுக்கும்.

# வீடியோ எடுக்கும் மூக்குக் கண்ணாடி



முற்காலங்களில் கண்பார்வையில் குறைபாடு உடையர்கள் தான் அதை ஈடு செய்வதற்காக மூக்குக்கண்ணாடிகளை அணிந்தார்கள். காலப்போக்கில் நாகரிகம் என்று கூறிக்கொண்டு அழகுக்காகவும் அணிந் தார்கள். ஆனால் தொழில்நுட்பவியலாளர்கள் ஒருபடி மேலே சென்று இந்த மூக்குக் கண்ணாடிகளையும் மின் சாதனமாக மாற்றிவிட்டார்கள். இதன் அடிப்படையில் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கண்ணாடியை அணிந்தவாறு பார்க்கும் காட்சிகள், பொருள்கள் என்பனவற்றை அதில் பொருத்தப்பட்டுள்ள உயர் திறன் கொண்ட வீடியோ கமரா மூலம் 1080 பிக்ஸல்களில் பதிவு செய்ய முடியும்.

மேலும், அதில் பொருத்தப்பட்டுள்ள 8 மெகாபிக்சல் கொண்ட கமரா மூலம் புகைப் படங்களை எடுக்கக்கூடியதாக காணப்படுவதுடன் 44.1 kHz அதிர்வெண்ணுடன் இயங்கக்கூடிய மைக்ரோபோனும் காணப்படுகின்றது. இதன்மூலம் 720 பிக்சல் அல்லது 1080 பிக்சலில் பதிவு செய்யப்படும் வீடியோவானது செக்கன்டுக்கு 30 பிரேம்கள் என்ற வேகத்தில் பதிவாகுவதுடன் 720 பிக்சலில் பதிவு செய்யும் போது செக்கனுக்கு 60 பிரேம்கள் என்று மாற்றக்கூடிய வசதியும் காணப்படுகின்றது.

# 18 வித பணி செய்யும் ரோபோக்கள்



தொழில்நுட்ப உலகில் புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் ரோபோக்கள் மென்மேலும் வளர்ச்சியடைந்து வருகின்றன. அதன் அடிப்படையில் 18 விதமான வரவேற்பு வேலைகளை புரியவல்ல ரோபோ ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இரண்டு வருடங்களாக மேற் கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் மிகவும் நேர்த்தி யாக உருவாக்கப்படும் இந்த நவீன ரோபோக்கள் கைப்பேசி அழைப்புக்களுக்கு விடையளித்தல், உங்களுடைய பொருள்களைக் காவிச் செல்லுதல் உட்பட 18 விதமான வேலைகளை செய்யவல்லன.

# மின் காசோலை

நாம் இன்று பயன்படுத்திவரும் காசோலைகள் விரைவில் வழக்கொழிந்து விடப் போகின்றன. அவற்றின் இடத்தை 'ஈ- செக்' (E-cheque) எனப்படும் மின் காசோலை பிடிக்கப் போகிறது.

ஓர் இங்கிலாந்து ஆய்வுக் குழு, இந்த மின் காசோலையை உருவாக் கியிருக்கிறது. இதில், வழக்கமான காசோலை முறையின் அனைத்து வசதிகளும் இருக்கின்றன. ஆனால் வங்கிகளுக்கு ஆகும் செயல்முறை மற்றும் அனுப்புதல் செலவுகள் குறையும் என்கின்றனர்.

இந்த 'ஹை-டெக் செக்', பல தலைமுறைகளாகப் பயன் படுத்தப்பட்டு வரும் வழக்கமான செக் போலவே உள்ளது. ஆனால் இதில் எழுதுவதற்கு ஒருவருக்கு டிஜிட்டல் பேனா தேவை. அந்தப் பேனாவில் உள்ள நுண்ணிய கமரா, பல லட்சம் புள்ளிகளாலான எந்தக் கையெழுத்தையும் பதிவு செய்து விடுகிறது.

அந்தப் பதிவை, வயர்லெஸ் தொடர்பு மூலம் டிஜிட்டல் பேனா நேரடியாக வங்கிக்கு அனுப்புகிறது. இந்த மின் காசோலையும், டிஜிட்டல் பேனாவும் வாடிக்கையாளருக்கு மட்டுமே உரிய பாதுகாப்பான முறையில் செயற்படும் என்பதால் ஏமாற்று வேலைகளுக்கு இங்கு இடமில்லை என்கிறார்கள் பிரிட்டன் ஆய்வாளர்கள்.



# சக்கர நாற்காலிக்கு பதிலாக மாற்று சாதனம்



சக்கர நாற்காலிகளைப் பயன்படுத்துபவர்களுக்கு என Tek Robotic Mobilization Device என்ற சாதனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சக்கர நாற்காலிகளைப் போன்று அமர்ந்த நிலையில் அல்லாமல் நின்று பயணிக்கக்கூடிய வசதியைத் தருகின்றது இந்தச்சாதனம்.

# ஒரே நேரத்தில் பல மென்பொருள்கள்

கணினியில் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டு இயங்குதளம் செயலிழந்து போகும்போது, மீண்டும் அனைத்து மென்பொருள்களையும் நிறுவ வேண் டிய நிலை ஏற்படும்.

இயங்குதளத்தை மீண்டும் நிறுவு வது கூட மிக சுலபம், ஆனால் அனைத்து மென்பொருள்களையும் மீண்டும் நிறு வுவது என்பது கடினமான ஒன்று.

இந்த வேலையை சுலபமாக்க ஒரு மென்பொருள் உள்ளது. மொத்தமாக எந்தெந்த மென்பொருள்களை நிறுவ வேண்டுமோ அவற்றைத் தேர்ந்தெடுத்து கொண்டு, ஒரே நேரத்தில் கணினியில் நிறுவி விடலாம்.

நீங்கள் இயங்குதளத்தை புதிதாக நிறுவிய பின்னர் இந்த Ninite தளத்திற்கு செல்லுங்கள். அங்கு நாம் அடிக்கடி உபயோகிக்கும் பெரும் பாலான மென்பொருள்கள் பட்டியலிடப் பட்டு இருக்கும். உங்களுக்குத் தேவை யான மென் பொருள்களை தேர்ந்தெடுத்துக் கொண்டு, கீழே உள்ள Get Installer என்ற பட்டனை கிளிக் செய்து, உங் களுக்குத் தேவையான மென்பொருள் களை தரவிறக்கிக் கொள்ளுங்கள்.

தற்போது அந்த மென்பொருளை இயக்கினால் நீங்கள் தேர்ந்தெடுத்த அனைத்து மென்பொருள்களும் தானாக தரவிறக்கப்பட்டு, உங்களது கணினி யில் நிறுவப்பட்டு விடும் இணையத்தள முகவரி ninite.com


# இனி ப்ளூ டூத் கவனிக்கும்



கமரா, படம் பார்ப்பது, கேம் ஆடுவது என பொழுது போக்காக மட்டுமின்றி, மருத்துவ ரீதியாகவும் ஸ்மார்ட் போன்கள் அதிகம் பயன்படுகின்றன. இதன் மருத்துவப் பயன்பாட்டை அதிகரிப்பது தொடர்பாக நியூசிலாந்தின் மனுகாவ் தொழில்நுட்ப கழகத்தின் எலக்ட் ரிகல் இன்ஜினியரிங் துறை ஆராய்ச்சியாளர்கள் ஹெலன் ஷூ, டிம் ராபர்ட்ஸ் ஆய்வு நடத்தி வருகின்றனர். அவர்கள் கூறியதாவது:

ரத்த அழுத்தம், ரத்தத்தில் குளுக்கோஸின் அளவு ஆகியவற்றை தற்போது ஸ்மார்ட் போன்கள் மூலமாகவே தெரிந்துகொள்ள முடிகிறது. எக்ஸ்ரே, இசிஜிகூட வந்துவிட்டன. இந்தநிலை யில், ப்ளூடூத், வைஃபி வசதி, ஸ்மார்ட் போன் ஆகியவற்றை ஒருங்கிணைத்து மைக்ரோ கன்ட்ரோலர் அடிப்படையிலான வயர்லெஸ் சிஸ்டம் ஒன்றை உருவாக்கி இருக்கி றோம். இதய துடிப்பு, ரத்த அழுத்தம், உடல் வெப்பநிலை, ரத்தத்தில் குளுக்கோசின் அளவு ஆகியவற்றை ஸ்மார்ட் போன் தொடர்ச்சியாக கண்காணிக்கும். உடன் இணைக் கப்பட்டிருக்கும் ப்ளூடூத் மூலம் இதுபற்றிய தகவல் வைஃபி அல்லது இன்டர்நெட் இணைப்பு மூலமாக உங்களது மருத்துவரின் ஸ்மார்ட் போனுக்கு உடனுக்குடன் அனுப்பப்படும். இருந்த இடத்தில் இருந்தே அவர் கண்காணிக்க முடியும். இதனால், அவசரகால சிகிச்சைகளை உடனுக்குடன் செய்வது சாத்தியமாகும். இவ்வாறு ஆராய்ச்சியாளர்கள் கூறினர்.

# அனைவருக்கும் சமமான ஒலி



பொதுவாக தொலைக்காட்சிப் பெட்டிகளின் முன்னால் இருப்பவர்களுக்கு அதிலிருந்து வெளிவரும் ஒலியானது கேட்கும் விதம் வேறுபடும்.

இதற்குக் காரணம் தொலைக்காட்சியில் இரு ஸ்பீக்கர்கள் மட்டுமே அதிகளவில் காணப்படும், இதனால் வெவ்வேறு திசைகளில் இருப்பவர்களுக்கு ஒலியின் விளைவு வேறுபடுகின்றது. ஆனால் தற்போது அதி சிறந்த தொழில்நுட்பத்தின் உதவியுடன் ஒரு அறையில் இருந்து தொலைக்காட்சியைப் பார்க்கும் அனைவருக்கும் சமமான ஒலியின் விளைவை ஏற்படுத்தக்கூடிய ஒலி பிறப்பாக்கி கண்டறியப்பட்டுள்ளது.

ஏறத்தாழ ஆறு அடிகள் நீளமான இந்த இயந்திரத்தில் 92 ஸ்பீக்கர் ட்ரைவர் காணப்படுகின்றது. இவற்றில் 30 குறைவான ஒலி விளைவிற்கும் 32 அதி உயர் ஒலி விளைவிற்கும் மீதி மத்திய ஒலி விளைவிக்கும் பொறுப்பானவையாகும்.

## நேர்ச் சிந்தனை

(2)

உங்கள் எண்ணம் 'நேர்மறையாக' இருக்கட்டும் என்பதை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது, நீங்கள் தாழ்வு மனப்பான்மையை விலக்க விரும்புகிறீர்கள். அப்போது உங்கள் எண்ணம் 'தாழ்வு மனப்பான்மையை விலக்க வேண்டும்' என்று இருக்கக் கூடாது. அதற்கு மாறாக நான் 'தன்னம்பிக்கை பெற வேண்டும்' என்பதைக் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

மற்றுமோர் உதாரணம்; உங்கள் விருப்பம் பயத்தைப் போக்குவதாக இருக்கலாம். ஆனால் உங்கள் எண்ணம் பயத்தைப் போக்க வேண்டும் என்பதாக இருக்கக் கூடாது. அதற்கு மாறாக 'நான் தைரியத்தைப் பெற வேண்டும்' என்பதாக இருக்க வேண்டும். நீங்கள் வறுமையை ஒழிக்க ஆசைப்பட்டால் 'வறு மையை ஒழிப்பேன்!' என்று கூறவோ, சிந்திக்கவோ செய் யாதீர்கள். மாறாக அதிகமாகப் பணம் சம்பாதிப்பேன் என்று சிந்தியுங்கள்.

நீங்கள் தீவிரவாதத்தை ஒழிக்க விரும்பினால், 'தீவிர வாதத்தை ஒழிப்பேன் என்று கூறவோ, நினைக்கவோ செய்யாதீர்கள். மாறாக அன்பைப் போதியுங்கள்!'

உங்களைவிட்டு நீங்கள் விலக்க வேண்டிய குணாதியங்களைப் பற்றி நினைக்காதீர்கள். அந்த எண்ணமே, அந்தத் தீய குணாதிசயத்தை வளர்த்துவிடும். எனவே, நீங்கள் வளர்க்க வேண்டிய நல்ல குணாதிசயத்தைப் பற்றி மட்டுமே சிந்தியுங்கள். காரணம், நீங்கள் ' தாழ்வு மனப்பான்மையைப் போக்க வேண்டும்' என்று எண்ணுகிறீர்கள். அந்த வாக்கியத்திலுள்ள 'தாழ்வு மனப்பான்மை' என்ற சொல் ஆதிக்கம் பெற்று, பிரபஞ்சத்திலுள்ள பேராற்றலைப் பெற்று தாழ்வு மனப் பான்மை குணத்தையே பெற்றுத் தந்துவிடுகிறது. மாறாக 'தன்னம்பிக்கையை பெற வேண்டும் என்று எண்ணும் போது, பிரபஞ்சப் பேராற்றல் உங்களது 'தன்னம்பிக்கையை வளர்க்கத் துணை வருகிறது.

மந்திர சுலோகங்களைக் கவனித்துப் பாருங்கள். அவற்றில் எதிர்மறையான வார்த்தைகள் இடம்பெற்றிருக்க மாட்டா. 'புத்தி, தைரியம், வீரம், ஜெயம் என்று நேர்மறையான வார்த்தைகளே இடம் பெற்றிருப்பதை நீங்கள் கவனிக்க முடியும்.

'மழை வேண்டும்' என்ற நோக்கத்துக்காக கூறப்படும் மந்திரத்தில் 'மழை பெய்ய வேண்டும்' என்ற சொற்களே இருக்கும். மாறாக 'வரட்சி நீங்க வேண்டும்' என்ற வார்த்தைகள் இருக்கா; இருக்கவும் கூடாது.

சுயமரியாதையும் நேர்மறைச் சிந்தனையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. சுயமரியாதை கொண்டவர்களுக்கு நேர்மறைச் சிந்தனை இருக்கும்; அதுபோல் நேர்மறைச் சிந்தனை கொண்டவர்களுக்குச் சுயமரியாதை இருக்கும்.

இதுநாள் வரை உங்கள் அழகு, சூழ்நிலை, ஏழ்மை, கல்வியின்மை போன்றவற்றைக் குறித்து நீங்கள் எதிர்மறையாகச் சிந்தித்ததை அறவே கைவிடுங்கள். இனி அம்மாதிரியான எண்ணங்கள் உங்களுக்குள் தலைதூக்க விடாமல் மிகக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்.

'பெரிய படிப்புப் படிக்காமல் போய்விட்டேனே!', 'ஏழைக் குடும்பத்தில் பிறந்து விட்டேனே!' என்பது போன்ற கடந்த காலத்தை நினைத்து வருந்திக் கொண்டிருக்காதீர்கள். நாளை முதல் உங்கள் வாழ்வின் வசந்தம் வீசப் போவதாக நம்புங்கள்; ஆழமாக நம்புங்கள்.

இப்போது நீங்கள் பெற்றுள்ள அனைத்துக்கும் இயற்கைக்கோ அல்லது கடவுளுக்கோ நன்றி செலுத்துங்கள்.

உங்களிடம் இருக்கும் நல்ல குணங்களைச் சிந்தித்துப் பாருங்கள்.

உங்களிடம் இருக்கும் திறமைகளை எண்ணிப் பாருங்கள்.

நீங்கள் அடைந்துள்ள வசதிகளை எண்ணிப் பாருங்கள்.

உங்கள் ஆரோக்கியத்தை எண்ணிப் பாருங்கள். உங்களை நீங்களே தட்டிக் கொடுத்துக் கொள்ளுங்கள்.

தினமும் குளித்து, நன்றாகத் துவைத்த ஆடைகளை உடுத்திப் பளிச்சென்று நீங்கள் செல்லும்போது உங்களை அறியாமல் உங்களுக்கே தன்னம்பிக்கை தலைதூக்கும். இதுவரை அப்படிச் சென்று பழக்கமில்லாதவர்களாக இருந்தாலும் பரவாயில்லை. இனிமேலாவது நேர்த்தியாக உடுத்திச் செல்லுங்கள். எந்த அரங்கத்துக்குள் சென்றாலும் முன் வரிசையில் (அது வி.ஐ.பி. இருக்கைகளாக இல்லாத பட்சத்தில்) உட் கார்ந்து கொள்ளுங்கள். பள்ளி மாணவர்களாக இருந்தால், முன் வரிசையில் அமருங்கள். எந்தக் காரணத்துக்காகவும் உங்களை நீங்களே தாழ்த்திக் கொள்ளாதீர்கள். ஆங்கிலம் பேச வரவில்லை என்றோ, படிப்புக் குறைவு என்றோ உங்களை நீங்களே தாழ்த்திக் கொள்ளாதீர்கள்.

ஒரு பெரிய நிறுவனத்துக்குள் நுழைந்தால் வரவேற்பாளரிடம் சென்று பேசுங்கள். உங்களைத் தாழ்த்திக் கொண்டு தோட்டக்காரனிடமோ, காவலாளியிடமோ விசாரிக்காதீர்கள்.

ஒரு நோய்க்கான மருந்தை உட்கொள்வதைவிட நாம் நோயிலிருந்து விடுபடுவோம், பிழைத்துக் கொள்வோம் என்ற நேர்மறைச் சிந்தனை - நம்பிக்கையே நோயாளியைக் குணமாக்குகிறது. இதை மருத்துவர்களும் கூறத்தான் செய்கிறார்கள். பல வெற்று (**Dummy**) மாத்திரைகள், நோயாளியின் நம்பிக்கையால் நோயைக் குணப்படுத்தியிருப்பதைச் சோதனை மூலம் நிரூபித்து இருக்கிறார்கள்.

(தொடரும்)

-ஷிவேந்த்ரா

# இலக்கியப் படைப்புக்களில் இனி புதிய பாதையில் நடப்போம்

## எழுத்தாளர் பிறேமினி தெரிவிப்பு

**பெண் எழுத்தாளர்கள் பெண் விடுதலை பற்றியே எழுதி வருகிறார்கள். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என எழுதிக் கொள்வதில் எந்தப் பயனும் இல்லை. பிரச்சினைகளைக் கூறுகின்றனர். ஆனால் தீர்வை முன்வைக்கத் தவறி விடுகின்றனர்.**

யாழ்ப்பாணம், மார்ச் 23

இலக்கியத்துடன் சார்ந்த படைப்புக்களில் எழுதும் கவிதைகள், சிறுகதைகள் ஆகியவற்றில் புதிய பாதை அமைத்துக் கொள்ள வேண்டும் என வலி.கிழக்குப் பிரதேச உதவிச் செயலரும், எழுத்தாளருமாகிய எஸ்.பிறேமினி தெரிவித்தார்.

கீதா கணேஷ் எழுதிய 'எத்தனங்கள்' என்னும் நூல் வெளியீட்டு விழா யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்:

இலக்கியங்களிலுள்ள அதே நளினங்கள், வாசகங்கள் ஆகியவற்றைத் தவிர்த்து நவீன யுகத்துக்கு ஏற்ப எழுத வேண்டும். இலக்கியம் சார்ந்த படைப்புக்கள் பல எழுத்தாளர்களால் எழுதப்பட்டு விட்டன. சமூகத்தின் யதார்த்த நிலைகளை எழுத்துருவில் கொண்டுவரப்பட வேண்டும்.

அநேகமாக பெண் எழுத்தாளர்கள் பெண் விடுதலை பற்றியே எழுதி வருகின்றனர். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என எழுதிக் கொள்வதில் எந்தப் பயனும் இல்லை. பிரச்சினைகளை மட்டுமே தெளிவுபடுத்துகின்றனர் தீர்வை முன்வைப்பதில் தவறி விடுகின்றனர்.

போர்க் காலங்களிலும் போர் முடிவுற்ற காலங்களிலும் பல வேறுபாடான கருத்துக்கள் உண்டு. போர் முடிவுற்ற காலப்பகுதியில் அதிகமான பிரச்சினைகளும் மாறுபட்ட கருத்துக்களும் வெளி வருகின்றன.

தற்போது அதிகளவான சிறுவர்கள், முதியவர்கள் கைவிடப்பட்ட நிலையில் சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்களது பிரச்சினைகள் எதுவும் வெளியில் தெரிவதில்லை. இவற்றை ஓர் எழுத்தாளன் மட்டுமே வெளியில் கொண்டு வர முடியும்.

இலக்கியத்தின் எதிர்காலம் தமிழ் எழுத்தாளர்களுடைய பொறுப்பாகும்.

பெண்கள் தமது சுய விருப்பத்தின் அடிப்படையில் பெண் விடுதலை பற்றி எழுதுவதோடு சமூகத்தின் பிறழ்வுகளையும் சுட்டிக் காட்டுதல் வேண்டும்.

தமிழ் மக்களுக்குரிய கலாசாரங்கள், பண்பாடுகள், மொழிகள் ஆகியவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடாது. சிறந்த படைப்புக்களையும் எழுத்துக்களையும் உருவாக்குவதன் மூலம் நல்ல வாசகர்களைத் திரட்டிக் கொள்ள முடியும்.- என்றார். (எ-13)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 23

இணுவில் கந்தசுவாமி கோயில் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் அண்மையில் மணி மண்டபத்தில் நடைபெற்றது. மூன்று ஆண்டுகளுக்கான நிர்வாகத்தை நடத்துவதற்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் - சமாதான நீதிவான் செ.சோதிப்பெருமாள், செயலாளர் - செ.செல்வநாயகம், பொருளாளர் - பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன், ஏனைய உறுப்பினர்கள்- இ.ஆறுமுகம், இ.அருணகிரிவாசன், ந.சண்முகவடிவேல், க.சிவவடிவேல், த.சொக்கலிங்கம், சிவஸ்ரீ. இ.ஸ்ரீஸ்கந்த ராஜக் குருக்கள்.

(எ)



அகில இலங்கை சமாதான நீதவான் பட்டம் பெற்ற புத்தூர் மேற்கைச் சேர்ந்த ஆசிரியை திருமதி விமலன் சந்தானலக்சுமி. யாழ்.நீதிமன்ற நீதிவான் மா.கணேசராசா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்கிறார். (எ-3)

# மாணவருக்கு பாலியல் கல்வியை புகட்ட பாடசாலை சமூகம் விரும்புவதில்லை

## பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனப் பிரதிநிதி கூறுகிறார்

**பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சுய தொழில்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகளை இன்னும் அதிகரிக்க வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக இளைஞர், யுவதிகள் மத்தியில் முதலில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.**

யாழ்ப்பாணம், மார்ச் 23

பாடசாலை மட்டத்திலோ, சமூக மட்டத்திலோ இன்று 'பாலியல் கல்வி' சம்பந்தமான வகுப்புக்களை நடத்துவதாக இருந்தால் அதனைப் பாடசாலைச் சமூகமோ, சமூகப் பிரதிநிதிகளோ மாணவர்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு விரும்புவதில்லை. அதனால் இள வயதினருக்கு பாலியல் சார்ந்த பிரச்சினைகள், துஷ்பிரயோகங்கள் பற்றிச் சொல்ல முடியாது இருக்கின்றது என பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த உதயணி தெரிவித்தார்.

யாழ்.மனித உரிமை இல்லத்தில் பெண்கள் சிறுவர்கள் மீதான வன்முறைகள் அதிகரித்து வருவது தொடர்பாகச் சட்டத்துறையும் சமூகமும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி நடைபெற்ற கலந்துரையாடலில் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பிள்ளைகளுக்கு அறியாத, தெரியாத பிரச்சினைகளைச் சொல்வதனூடாக, பிள்ளைகள் வழி தவறிப் போவதற்கும், மனம் மாறுவதற்கும் வாய்ப்புக்கள் உருவாகும் என்பது அவர்கள் கருத்தாக இருக்கின்றது.

இதைவிட சிறுவர்கள், பெண்கள் பாதிக்கப்பட்டு சட்ட நடவடிக்கைக்குச் செல்லும்போது தீர்வுகள் காலதாமதமாக வருகின்றன. டி.என்.ஏ.பரிசோதனைகள் கூட மாறி வருகின்றன. இதனால் தப்புச் செய்தவர்களுக்குச் சரியான தண்டனை கிடைக்காமல் போய்விடுகிறது. பாதிக்கப்பட்டவர்கள் பற்றி யாருமே கவனத்தில் எடுப்பதில்லை.

பெண்கள் அமைப்புக்கள் ஒருங்கிணைந்த செயற்பாட்டோடு இயங்குவதற்கு நிதிப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. எனினும் நாம் இயன்றவரை விரைவாகச் செயற்பட்டு இனி வரும் காலங்களில் இவ்வாறான பிரச்சினைகள் நடைபெறாமல் தடுப்பதோடு தப்புச் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்த வேண்டும்.

பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சுய தொழில்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகளை இன்னும் அதிகரிக்க வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக இளைஞர், இளம் பெண்கள் மத்தியில் முதலில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.- என்றார். -(எ-16-13)

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹரா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# தாமதித்தால் பிளவு தயாரானால் நிமிர்வு

அமெரிக்க அரசு கொண்டுவந்த இலங்கை மீதான தீர்மானம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டு விட்டது. அந்தத் தீர்மானத்தைத் தோற்கடிக்க முடியாது என்பது சில நாள்களுக்கு முன்பே இலங்கை அரசுக்குத் தெரிந்துவிட்ட போதிலும் கௌரவமான தோல்வி ஒன்றுக்காக அது இறுதிவரை போராடியது.

ஜெனிவாவில் நடப்பது ராஜதந்திரப் போர் என்று இலங்கை அரசு ஆரம்பத்திலேயே அறிவித்ததால் அதில் படுதோல்வி அடைய விரும்பவில்லை. அதனால் குறைந்தது, அமெரிக்கத் தீர்மானத்துக்கு ஆதரவளிக்காமல் விலகி இருக்குமாறு அது ஆசிய, ஆபிரிக்க, தென்னமெரிக்க நாடுகள் பலவற்றிடம் கேட்டுக் கொண்டது.

இவை எல்லாவற்றையும் கடந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் பொருள், பயங்கரவாதப் பிரச்சினை என்று இலங்கை அரசுகளால் வகைப்படுத்தப்பட்டு வெளி உலகுக்குத் தெரிவிக்கப்பட்டு வந்த ஈழத் தமிழர் பிரச்சினை, இலங்கை நாடு மற்றும் இந்தியத் துணைக்கண்டம் என்பவற்றைத் தாண்டி உலக அரங்குக்குச் சென்று விட்டது என்பதுதான்.

இனிமேல் இலங்கை அரசு மட்டுமோ அல்லது இந்திய – இலங்கை அரசுகள் மட்டுமோ இந்த விவகாரத்தைக் கையாள்வது சாத்தியமில்லை. பிரச்சினை அதையெல்லாம் தாண்டி உலக அரங்குக்குச் சென்று விட்டது.

மற்றொரு வகையில் சொன்னால், இலங்கையில் நடந்தது பயங்கரவாதப் பிரச்சினை அல்ல; அது ஒரு விடுதலைப் போராட்டம் – தமிழ் இனச் சுதந்திரப் போராட்டம் – என்பதை இந்த உலகம் இப்போது அங்கீகரித்துள்ளது.

இந்தக் கட்டத்தில் இலங்கையின் எதிர்காலம் குறித்து கொழும்பு அரசு மிகத் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டியிருக்கிறது. அந்த முடிவே இலங்கை நாடு பிளவுபடாது இருப்பதா அல்லது இரண்டு நாடுகளாகத் துண்டாடப்படுவதா என்பதை அடுத்து வரப்போகும் 30 ஆண்டுகளில் தீர்மானிப்பதாக அமையும்.

சர்வதேசத் தலையீடு – குறிப்பாக ஐ.நா. தலையீடு – நிகழ்ந்த எந்தவொரு விடுதலைப் போராட்டத்திலும் நாடுகள் பிளவுபடாமல் இருந்ததாக [நீண்ட காலத்தின் பின்னரேனும்] கடந்த இரு தசாப்தங்களில் வரலாறில்லை. இந்தோனேஷியா : கிழக்குத் திமோர், சேர்பியா: கொசோவோ, இஸ்ரேல் : பலஸ்தீனம் மற்றும் மிக அண்மையில் சூடான் : தென் சூடான் ஆகியன இதற்கான மிகச் சிறந்த உதாரணங்கள்.

இதனால்தான் வெளியாரின் கண்காணிப்போ, தலையீடோ வேண்டவே வேண்டாம் என்று இலங்கை அரசும் தலைகீழாக நின்று பார்த்தது. இப்போது எல்லாமும் முடிந்து விட்டது.

இந்த நிலையிலாவது இலங்கை அரசு, நிலைமையைப் புரிந்துகொண்டு, தமிழர்களுடன் சமரசம் செய்வதற்கு முன்வரவேண்டும். இந்த நாடு பிரிக்கப்படாததாக இருக்க வேண்டும் என்று அரசு உண்மையிலேயே விரும்பினால், அது தமிழர்கள் கேட்கும் – விரும்பும் – தீர்வை இப்போது முன்வைப்பதைத் தவிர வேறு வழியில்லை. அப்படிச் செய்யத் தயாராகி விட்டால் நாடு நிமிர்ந்து விடும். முன்னேறும். முரண்டுபிடித்தால் அடுத்த 30 வருடங்களுக்குள் இந்த நாடு பிளவுபடுவதை அரசு பார்த்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கும். உலக நாடுகள் அதனைச் செய்து முடிக்கும்.

# நல்லிணக்கம் காண்பதற்கு அரசின் சார்பில் பிராயச்சித்தம் தேவை

■ *மருத்துவர் இ. சிவசங்கர்*

இலங்கைத் தீவினில் வாழுகின்ற இனங்களுக்கிடையில் உண்மையான நல்லிணக்கம் ஏற்பட்டாலே சுமுகமான சுபீட்சமான வாழ்வு அனைத்து தரப்பினராலும் எய்தப்பட முடியும். தற்போது இருக்கும் நிலையில் யார் நல்லிணக்கத்துக்கான செயற்பாட்டைத் தொடங்குவது சாத்தியமாகும் என்பதைப் பார்ப்போம்.

இலங்கைத் தீவில் அதிகாரத்தைத் தக்க வைத்திருப்போராக சிங்கள மக்களும், சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை அரசும் இருக்கின்றது. அதிகாரம் இல்லாத சமூகம், அதிகாரம் உள்ள சமூகத்தின் மீது சந்தேகம் கொள்வது இயற்கையே. அத்துடன் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக நடைபெற்று வரும் இன முரண்பாட்டு போராட்டத்தில் சிங்கள மக்கள் நல்லெண்ணத்துடன் கூடிய புரிந்துணர்வுடன் செயற்படாமையின் விளைவே, 70 களின் முதற் கட்டத்தில் பிரதான தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து தமிழர் விடுதலை கூட்டணி உருவாக வழிசமைத்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டைமாநாட்டுத்தீர்மானத்திலேயே தமிழ் ஈழத்தை விடுதலை பெற வைப்பதற்கான போராட்டத்தை முன்னெடுப்பதாக அறிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் தமிழர் தலைவர் தந்தை செல்வநாயகம், காங்கேசன்துறை இடைத் தேர்தலில் தமிழ் ஈழத்துக்கான மக்கள் ஆணையைப் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து நடந்த பிரிவினை தடைச்சட்ட ட்றயல் அற் பார் (Trail at bar) வழக்கினூடாக தமிழ் ஈழ உருவாக்கம் என்பது பிரிவினை அல்ல; மாறாக ஏற்கனவே இருக்கின்ற அடிமைப்பட்ட தமிழ் ஈழ நாட்டின் சுதந்திரப் போராட்டமாகும் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. அதற்கு மக்கள் ஆணை பெறுவதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணி 1977ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு மக்கள் ஆணையைப் பெற்றுக் கொண்டது.

### தமிழ் ஈழம் பிரபாகரன் முன்வைத்தது அல்ல

தமிழ் ஈழத்தைச் சுதந்திரமடைய செய்வதற்கான தீர்மானம் தமிழர் விடுதலைக் கூட்டணியால் முன்வைக்கப்பட்டு 1977ஆம் ஆண்டுத் தேர்தலினூடாகத் தமிழீழ மக்களின் முடிவாக உறுதிப்படுத்தப்பட்டு உலகுக்கு வெளிப்படுத்தப்பட்டது. இந்த மக்களின் முடிவை அரசியல் ரீதியாக தமிழர் விடுதலை கூட்டணி முன்னெடுக்க முடியாதுபோன நிலையிலேயே தமிழ் இளைஞர்களினால் பல ஆயுதப் போராட்ட இயக்கங்கள் தொடங்கப்பட்டு முனைப்புப்படுத்தப்பட்டது. பல இயக்கங்களின் ஆயுதப் போராட்ட வளர்ச்சியின் தொடர்ச்சியாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ் ஈழப் போராட்டத்தின் தலைமையாக உருவெடுத்தது. ஆகவே விடுதலைப்புலிகளால் முன்னெடுக்கப்பட்ட தமிழீழ சுதந்திர போராட்டமானது தமிழ் மக்களின் தீர்மானமேயன்றி, தனித்து விடுதலைப் புலிகளினுடைய கோரிக்கை அல்ல என்னும் தெளிவு நன்மை பயக்கும். "புலிகள் கேட்ட தமிழீழத்தை தமிழர் கூட்டமைப்பும் கேட்கின்றது". என்ற கூற்று வரலாற்றுத் தவறாகும். தமிழ் மக்களின் முடிவையே தமிழர் கூட்டமைப்பு முன்வைக்கின்றது என்பது தெளியப்பட வேண்டும்.

> “பண்டா-செல்வா ஒப்பந்தத்திலிருந்து இலங்கை இந்திய ஒப்பந்தம் ஊடாக முன்னைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்காவினால் முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வு முன்மொழிவுகள் வரை, இலங்கை வாழ் தமிழர்களின் அரசியல் நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

### இன நல்லெண்ணத்தின் தோல்வி

1957 இல் பண்டா-செல்வா ஒப்பந்தமும், 67இல் டட்லி-செல்வா ஒப்பந்தமும் பயனற்று முறிந்து போன நிலையிலேயே தமிழ் ஈழத்தை விடுதலை பெற வைத்து தனியாட்சி அமைத்து வாழத் தமிழ் மக்கள் முடிவெடுத்தனர்.

அந்த முடிவை அகிம்சை அரசியல் அணுகுமுறைகளால் முன்னெடுக்க முடியாது போனதன் விளைவே, அது ஆயுதப் போராட்டமாக மலர வழி கோலியது. தமிழ் மக்கள் அகிம்சை வழியில் முன்வைத்த அபிலாஷை, கோரிக்கைகள் அடாவடித்தனமாகவும், ஆயுதப் படையைக் கொண்டும் நசுக்கப்பட்டதே முதல் வரலாறாகும். இதன் தொடர்ச்சியாக தமிழர்களின் ஆயுதப் போராட்டமும் இப்போது நசுக்கப்பட்டுள்ளது. எனவே சிங்களத்தின் மீது நல்லெண்ணத்தை எதிர்பார்க்க முடியாத வரலாற்றுச் சந்தியில் நாம் நிற்கின்றோம்.

### தொடரும் மாற்றாந் தாய், ஆதிக்க நிலைப்பாடு

இந்த நிலையில், ஆயுதப் போராட்டமும் நசுக்கப்பட்ட நிலையில், பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டது என்றும் இலங்கையில் சமாதானம் கட்டமைக்கப்பட்டுள்ளது என்றும் அரசால் கூறப்படுவது உண்மை தெரியாது முன்வைக்கப்படுவதாகக் கருதி விடமுடியாதது.

பண்டா-செல்வா ஒப்பந்தத்திலிருந்து இலங்கை இந்திய ஒப்பந்தம் ஊடாக முன்னைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்காவினால் முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வு முன்மொழிவுகள் வரை, இலங்கை வாழ் தமிழர்களின் அரசியல் நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அந்த அரசியல் நிலைப்பாடுகள் தீர்க்கப்பட்டாலே, இந்தத் தீவில் நல்லிணக்கம் சாத்தியமாகும். அதனூடாக சமாதானம் உறுதிப்படுத்தப்படும்.

மேற்கூறிய விடயம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு நாட்டின் அரசியல், ஆயுதபலத்தைத் தக்கவைத்துள்ள சிங்கள இன மக்களின் நல்லெண்ணம் முதலில் தேவைப்படுகின்றது. ஆனால் வடமாகாணத்தில் போருக்கு பின்னான அரச, ஆயுத படைகளின் செயற்பாடுகள் நல்லெண்ணத்தைப் பிரதிபலிக்காததுடன், ஆக்கிரமிப்பு ஆதிக்க எண்ணப்பாட்டையே வெளிப்படுத்தி நிற்கின்றன. இவற்றை உறுதிப்படுத்த பல செயற்பாடுகளைச் சுட்டிக்காட்டக் கூடியதாக இருப்பினும் உதாரணத்துக்கு சிலவற்றை மட்டும் முன்வைக்கலாம்.

### நாவற்குழியில் சிங்களக் குடியேற்றம்

இலங்கைத் தீவில் இன முறுகல் நிலையின் ஆரம்பமாக மணலாறு (வெலிஓயா) சிங்கள குடியேற்றம் முக்கிய வரலாற்று நிகழ்வாகின்றது. அத்துடன் டொலர்பாம், கென்ற்பாம் சிங்களக் குடியேற்றங்கள் தமிழர்களின் மனக்கசப்பைப் பெரிதுபடுத்த காரணமாக இருந்தன. தமிழர் பிரதேசத்தில் சிங்கள அரசுகளால் திட்டமிட்டு நடத்தப்பட்ட சிங்களக்குடியேற்றங்கள் விடயத்தில் தமிழர்களின் மனக்கசப்பை சிங்கள அரசியல் வாதிகள் நன்கு அறிந்து வைத்துள்ளனர். இத்தகைய நிலையில் போருக்கு பின் உடனடியாக நாவற்குழி அரச வீட்டுத் திட்டத்தில் சிங்கள மக்கள் அமர்த்தப்பட்டனர். நல்லெண்ணம் உள்ள மனதின் செயற்பாடாக இது இருக்கவே முடியாது. மேலும் தமிழர்களிடம் சிங்களவர்கள் மீது நல்லெண்ணம் ஏற்பட முடியாது என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் மீளக்குடியேற்றப்படாத காலத்திலேயே இந்தக் குடியேற்றச் செயற்பாடு நிகழ்த்தப்பட்டது.

### தமிழர் பிரதேச ஏ-9 பாதையில் புத்தர் சிலைகளும்

போரினால் பாதிக்கப்பட்ட இந்து ஆலயங்களும், கிறிஸ்தவ ஆலயங்களும் வட தமிழர் பிரதேசத்தில் நிறைந்து காணப்படுகின்றன. இவை எவையும் அரசாங்கத்தினாலோ, ஆயுதப் படையினராலோ கண்டு கொள்ளப்படவில்லை. மாறாக பௌத்த மதத்தினர் வாழாத வட பிரதேசத்தில் புத்தர் சிலைகளை நிர்மாணிப்பதும், பௌத்த விகாரைகளை நிர்மாணிப்பதும் ஆயுதப் படையினரின் போருக்கு பின்னரான முக்கிய செயற்பாடாகக் காணப்படுகின்றது. இலங்கை இராணுவம் என்பது பௌத்த இராணுவம் என்பதாக மாறியுள்ளதையும் பௌத்தம் சிங்களத்தின் ஆதிக்க செயற்பாட்டுக்கு பயன்படுத்தபடுவதையுமே இப்போது பரவலாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

### வடபுலத்தில் சிங்கள இராணுவத்தினரின் குடும்பங்களுக்கு வீடமைத்தல்

போரின் போது பொதுமக்களின் வாழ்விடங்களும், நிர்வாக திணைக்களக் கட்டடங்களும் முற்றாக சிதைக்கப்பட்டது உலகறிந்த விடயம். மீள்கட்டுமானப் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடுகின்றனர் என்று கூறிக் கொண்டாலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களில் பொது மக்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல் மற்றும் திணைக்களக் கட்டடங்களோ, முக்கிய பிரச்சினையாகவுள்ள உத்தியோகத்தர் விடுதிகளோ இராணுவத்தினால் நிர்மானிக்கப்படவில்லை. மாறாக சுனாமிப் பேரழிவின் போது வீடுகள் அழிக்கப்பட்ட பொதுமக்களுக்காக வெளிநாட்டு அரசால் வழங்கப்பட்ட வீடுகள், இராணுவத்தினரின் குடும்பங்களுக்காக வழங்கப்பட்டுள்ளன. தற்பொழுதும் பல பொது மக்கள் வதிவிடங்கள் இல்லாது இருக்கையில், இராணுவத்தின் குடும்பங்கள் வாழ்வதற்காக வீடுகள் கிளிநொச்சி, முல்லைத்தீவில் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முக்கியமாக இங்கு ஞாபகப்படுத்தக்கூடிய விடயம் என்னவெனில், ஜப்பான் மீது அமெரிக்கா

*(பார்க்க பக்கம் 23)*



# சங்கரியின் கடிதம்

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி அனுப்பிய கடிதம் இது.**

“

**சீனா இலங்கை அரசுக்கு பல்வேறு இராணுவ முகாம்கள் அமைத்து அவற்றுக்கு வேண்டிய ஆயுத தளபாடங்களைத் தந்துதவுவதாகக் கூறி வருகிறது. இச் செய்தி வடக்கு, கிழக்கில் வாழும் மக்கள் விரும்பாத, பெரும் கவலை தரும் செய்தியாகும்.**

இலங்கை ஒரு மோசமான நிலையை எதிர்நோக்கி நிற்கும் இந்த வேளையில் எமது நாட்டையும் அதில் வாழும் மக்களையும் மிகவும் நேசிப்பவன் என்ற முறையில் நாட்டின் பெரும் நன்மையை கருதி எனது கருத்துக்களை வெளியிட விரும்புகின்றேன்.

இந்த நாடு எதிர்நோக்கி வந்த எந்தப் பிரச்சனையையும் என்னால் அது நாட்டுப் பிரச்சினை என்றே கருதப்பட்டு வந்தது. தற்போதைய அவலநிலை நாம் பயப்படும் அளவுக்குப் பெரிதாக விரிவடைந்துள்ளதென்றால் மிக முக்கியஸ்தர்கள் அழைக்கப்படாமல் அந்தப் பிரச்சினைகளில் முன்சிந்தனையின்றி ஈடுபட்டு உங்களுக்கு எரிச்சலையும் சங்கடத்தையும் உண்டு பண்ணியுள்ளனர். இவர்கள் அப்பாவி மக்களை, மகிழ்ச்சி தராத விடயங்களில் ஈடுபடுமாறு தூண்டி விட்டுப் பிரச்சினைகளை மிக மோசமடையச் செய்தனர்.

அனர்த்தங்களை ஒரு நாடு எதிர்நோக்கும் வேளையில் சர்வதேச சமூகம் பாதிக்கப்பட்ட நாட்டுக்கு நிவாரணப் பொருள்களோடு விரைவது சகஜம். இயற்கை அனர்த்தமாகிய சுனாமி நமது நாட்டில் ஏற்பட்டவேளை இந்தியா எவ்வளவு விரைவாகச் செயற்பட்டது என்பதையும் ஏனைய நாடுகள் சிறிதோ, பெரிதோ இந்தியாவைப் பின்பற்றி செயற்பட்டதை நாம் அறிவோம். ஒரு நாட்டில் உள்ளூர் கிளர்ச்சி ஏற்படும் போது இதேபோன்றே பிற நாடுகள் செயற்பட்டன. ஒரு நாடு கஷ்டத்தில் இருக்கின்றபோது ஏனைய நாடுகள் கைகட்டி நின்று வேடிக்கை பார்க்க மாட்டா. தம்பி பிரபாகரனுக்கு இலங்கைக்கு உதவ வருகின்ற நாடுகள் அத்தனையுடனும் எதிர்த்துப் போராட வேண்டி வருமேயொழிய தனித்து இலங்கை இராணுவத்துடன் மாத்திரமல்ல என நினைவூட்டி, ஆயுதங்களை கைவிட்டு அரசுடன் பேச்சுக்குச் செல்லுமாறு பல தடவை கேட்டிருந்தேன்.

இறுதியில் நான் எச்சரித்தவாறே நடந்தேறியது. அதிக விளம்பரமில்லாமல் அநேக நாடுகள் இலங்கைக்கு உதவ வந்து இறுதியில் விடுதலைப் புலிகளை தோற்கடிக்கவும் உதவியன. அநேகமான ஐரோப்பிய நாடுகள் விடுதலைப் புலிகளுக்கு உதவின எனக் கூறுவது தவறானதாகும். அதற்கு மாறாகச் சில இலங்கையர் சில நாடுகளை மிக மோசமாக அவமதித்து இருந்தாலும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ எந்த நாடும் விடுதலைப் புலிகளுக்கு உதவவில்லை. தனிப்பட்ட ஒருவர் ஒரு நாட்டில் இருந்து கொண்டு விடுதலைப் புலிகளை ஆதரித்திருந்தாலும் கூட அந்த நாட்டைக் குறைகூற முடியாது. அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய யூனியன் போன்ற நாடுகள் தத்தம் மண்ணில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்குத் தடை விதித்திருந்தமையை நாம் மறக்க முடியாது.

நவீன ஆயுதங்கள் கொடுத்துப் பல நாடுகள் இலங்கைக்கு உதவியளிக்காது விட்டிருந்தால் இலங்கை இராணுவத்தினரால் தனித்து இந்தப் போரை வென்றிருக்க முடியாது. இந்தியாவிடமிருந்தும் இந்தியாவின் ஒரு மாநிலமாகிய தமிழ்நாடு பொலிஸின் 'கியூ' பிரிவினர் மிகத் திறமையாகச் செயற்பட்டுப் பல தடவைகள் இலங்கைக்கு அனுப்பி வைக்க இருந்த பல தொன் எடையுள்ள வெடி மருந்தை தேடிப் பிடித்து கைப்பற்றியமையை நீங்கள் சுலபமாக மறந்திருக்கமாட்டீர்கள் என நினைக்கிறேன். இந்தியக் கடற்படையின் கரையோர காவல் பிரிவினர் ஆற்றிய பெரும் தொண்டால் யுத்தம் வெல்லக் கூடியதாக இருந்தது. இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் எமக்கு முதுகைக் காட்டிக் கொண்டிருந்தால் இந்த நாடு சிதைந்திருக்கும், யுத்தத்திலும் தோற்றிருக்கும். இந்த விடயங்களை இலங்கை என்றும் மறக்கக் கூடாது.

எதற்காக அல்லது இன்று இக்கட்டான நிலையில் என்ன தேவை ஏற்பட்டமையால் இலங்கை அரசு சீன வெளியுறவுதுறை அமைச்சரைச் சந்தித்து அமெரிக்கத் தீர்மானத்தை, சீனா எதிர்ப்பதாகப் பல தடவைகள் உறுதியளித்திருந்தும் எதிர்க்க வேண்டுமென சீன அரசின் உதவியை நாடியது. 1956 ஆம் ஆண்டு இலங்கையில் அரிசிக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவிய வேளை சீன அரசு பெருந்தன்மையாக எமது இறப்பருக்குப் பதிலாக அரிசியைக் கொடுத்து தனது பெருந்தன்மையை வெளிக்காட்டியது. அன்று தொடக்கம் இன்றுவரை இவ்விரு நாடுகளுக்கிடையில் இருந்த உறவில் பங்கம் எற்படாது இருக்கும்போது இந்தச் சந்தர்ப்பத்தில் நல்லெண்ணத்தை வளர்க்க வேண்டிய அவசியமில்லை. இந்த முயற்சியில் ஏதோவொரு நோக்கம் மறைந்திருக்கிறது. அநேகருக்கு இது இந்தியாவுக்கு எதிரான மறைமுக மிரட்டலா எனத் தோன்றுகிறது. பல வகையாலும் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கும்படி இந்தியாவுக்கு அழுத்தம் வந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் இந்த முயற்சி நல்ல ராஜதந்திரமாகத் தெரியவில்லை. குறிப்பாக தமிழ்நாட்டில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் ஏனைய அரசியல் கட்சிகளும் இத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டுமென அழுத்தம் கொடுக்கின்றன. இலங்கை இந்தியாவைப் பல காரணங்களுக்காக ஆத்திரமூட்டக் கூடாது. முக்கிய காரணம் என்னவெனில் ஒரு சமயம் இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாகப் பேச்சு நடத்த ஒரு வாய்ப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தில் இந்தியாவால் மட்டுமே முன்னின்று இலங்கை அரசுக்கும் சிறுபான்மை தமிழ் கட்சிகளுக்குமிடையில் மத்தியஸ்தம் செய்யக் கூடிய வாய்ப்பு உண்டு. இந்தியாவுடனும் சீனாவுடனும் நல்லுறவைப் பேணுவது சிறந்த முயற்சியாக இருந்தாலும் இரு நாடுகளில் ஒரு நாட்டு மக்களின் உணர்வை புண்படுத்தி அல்ல.

சீனா இலங்கை அரசுக்கு பல்வேறு இராணுவ முகாம்கள் அமைத்து அவற்றுக்கு வேண்டிய ஆயுத தளபாடங்களைத் தந்துதவுவதாகக் கூறி வருகிறது. இச் செய்தி வடக்கு, கிழக்கில் வாழும் மக்கள் விரும்பாத, பெரும் கவலை தரும் செய்தியாகும்.

சீனாவின் அன்பளிப்பை மிக்க நன்றியுடன் நிராகரிப்பதாக சீன அரசுக்கு இலங்கை கூற வேண்டும். 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதியுடன் துப்பாக்கிச் சூட்டுச் சத்தமும், செல் வெடிப்பதும் நின்று மீண்டும் ஒரு போராட்டம் தொடங்குவதற்குச் சிறு வாய்ப்புக்கூட இல்லாத நிலையில் இலங்கைக்கு யுத்த தளபாடங்கள் தேவைப்பட மாட்டாது. ஏதாவது யுத்தத் தளபாடங்கள் வழங்கப்படுமாயின் 30 ஆண்டுகளுக்கு மேல் சொல்லொணா துன்பங்களை அனுபவித்து தற்போது ஒரு விளையாட்டுத் துப்பாக்கியைக்கூடக் காண விரும்பாத மக்களை அடிமைப்படுத்தவே இது உதவும். சீனப் பெருங்குடி மக்கள் ஒரு புரட்சியின் மூலம் தமது உரிமைகளை வென்றெடுத்தமையால் இலங்கை வாழ் தமிழ்மக்களும் இன்னொரு புரட்சி ஏற்படுவதை விரும்ப மாட்டார்கள். இலங்கை மக்களின் பரிதாப நிலையை உணர்ந்து நிலைமையை மீளப் பரிசீலித்து யுத்த தளபாடங்களுக்குப் பதிலாக தமிழ் மக்களுக்கு உதவக்கூடிய விவசாய உபகரணங்களால் அப்பகுதியை நிறைக்க வேண்டும். அப்பாவித் தமிழ் மக்களை மேலும் ஒரு பயங்கர கனவு உலகத்துக்கு அனுப்பி வைக்காது பாதுகாக்க வேண்டும்.

ஏனெனில் கடந்தகால பயங்கர நினைவுகள் அவர்களை தொடர்ந்தும் அச்சுறுத்துகின்றன. தங்களுக்கு ஆலோசனை வழங்குகின்றவர்களை அவ்விடயத்தில் விசேட அக்கறை இல்லாதவர்களாகப் பார்த்துத் தெரிவு செய்யவும், நாட்டின் தலைவர் என்ற முறையில் அனைவரையும் சொந்தப் பிள்ளைகளாகக் கருதவும். வடக்கு கிழக்கு மக்கள் இராணுவ, கடற்படை, விமானப் படை ஆகிய முகாம்கள் இருக்கும் பகுதிகளில் பல கஷ்டங்களை ஏற்கனவே அனுபவித்துள்ளமையால் வட கிழக்கில் இந்த முகாம்களை விரும்பவில்லை.

இவ்வாறு எழுதுவதற்கு நான் பெரிதும் கவலையடைகின்றேன். ஏனெனில் நான் எந்தப் பிரச்சினையையும் வகுப்புவாத கோணத்திலிருந்து பார்ப்பவன் அல்ல. இந்தச் சந்தர்ப்பத்தில் நான் இவ்வாறு செய்வது தூரதிஸ்டமே. இது தங்களுக்கு மன வேதனையைக் கொடுத்தால் என்னை மன்னிக்கவும். இந்த விடயங்களை உங்களுக்கருகில் உள்ளவர்கள் உங்களின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். நான் மீண்டும் கூறுகின்றேன் இனப் பிரச்சினைக்கான தீர்வு தங்கள் கைகளிலேயே உள்ளது. இன்றைய பதற்ற நிலையைத் தணிக்க உங்களிடமுள்ள அதிகாரத்தையும் பிரச்சினை சம்பந்தமான தங்களுக்குள்ள அறிவையும் கொண்டு சிறுபான்மையினர் ஏற்கக்கூடிய ஒரு தீர்வை முன்வைத்து பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வை ஏற்படுத்தவும். என்னால் முன்வைக்கப்பட்ட இந்திய முறையிலான ஒரு தீர்வை அரச சார்பிலும், எதிர்கட்சி சார்பலும், புலம்பெயர் மக்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பு இருந்தது. மகாநாயக்கர்களுடைய ஆசீர்வாதமும் இருந்தது என நம்புகின்றேன். இதற்கு நீங்கள் எதிர்ப்பு இல்லை என்று என்னையும் நம்ப வைத்திருக்கிறீர்கள். ஒரு அரசியல் சாசனமும் உள்ளூரில் தயாரிக்கப்பட்டதென எவரும் தம்பட்டம் அடிக்க முடியாது. இந்திய அரசியல் சாசனமோ அன்றி தற்போதைய அரசியல் சாசனமோ பல விடயங்களில் பிரித்தானிய சாசனத்தை ஒத்தது என்பதை அறிந்திருப்பீர்கள். நீங்கள் இந்திய முறையிலான தீர்வை ஏற்கும் பட்சத்தில் அதற்கு எந்த எதிர்ப்பும் இருக்காது என நம்புகின்றேன். சமத்துவம், சமநீதியை கொண்டு உருவாகிய எந்தத் தீர்வுக்கும் நியாயப்படுத்தக்கூடிய எந்த எதிர்ப்பும் இருக்க முடியாது.

நான் வட பகுதி முழுவதையும் கிழக்கு மாகாணத்தின் ஒரு பகுதியையும் சுற்றி வந்துள்ளேன். எனது கணிப்பின்படி அநேக மக்கள் பெருமளவில் வன்னி மாவட்ட மக்கள் அரை பட்டினியில் வாழ்கின்றனர். மக்களுக்கு எதுவித அபிவிருத்தியிலும் நாட்டமில்லை. இன்னும் அநேக மக்கள் கூரையில்லாத வீடுகளிலும் பல அடிப்படை வசதிகளின்றியும் வாழ்கின்றனர். அவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் கூட கிடைக்கவில்லை. வயதுக்கு வந்த பெண் பிள்ளைகளுடன் வாழும் விதவைகளும், அநாதைகளும் மிகவும் கஷ்டப்படுகின்றனர். இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் அத்தனை உடைமைகளையும் இழந்தே மீளக்குடியேறி வாழ்கின்றனர் என்பதை அநேகா அறியமாட்டார்கள். தயவு செய்து நிலைமை சீரடையும் வரை மிக நொந்து போயுள்ள மக்கள் குறைந்த விலையில் அத்தியாவசியப் பொருள்களை பெற்றுக்கொள்ளும் வகையில் முன்பு இருந்தது போல் கூப்பன் புத்தகத்தை அறிமுகப்படுத்தவும். இம் முறையானது மிக நொந்து போயுள்ள மக்கள் மத்தியில் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள வறுமையை ஓரளவுக்கு குறைக்கும் என கருதுகிறேன். அனைவரும் தத்தம் உரிமைகளை ஏனையவர்களுடன் சமமாக அனுபவித்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் போல் ஒரு நியாயமான சமூகத்தில் வாழ வேண்டும். சரித்திர ரீதியாக சிங்கள மக்களும், தமிழ் மக்களும் ஒரே கொடியில் உருவானவர்களே.

எமது வீட்டை ஒழுங்காக வைத்திருக்காமல் 47 நாட்டுப் பிரதிநிதிகளிடம் சென்று அமெரிக்கத் தீர்மானத்தை எதிர்க்கும்படி கேட்பதில் அர்த்தமில்லை. அமெரிக்கத் தீர்மானத்தை எதிர்த்து நாடளாவிய ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் நாளுக்கு நாள் பதற்றம் அதிகரித்துக் கொண்டிக்கும் போது இலங்கை கடற்படையினர் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பூநகரி பிரிவுக்குள் உள்ள நாச்சிக்குடா கிராமத்தில் கடற்படை தளம் அமைப்பது கடற்படையினரின் புத்தியற்ற செயல் அல்லவா? நாச்சிக்குடாவில் தளம் அமைப்பதற்குரிய காரணம் வினோதமான கற்பனையாகும். 1970 ஆம் ஆண்டு தொடக்கம் 1983ஆம் ஆண்டு பதவியை ராஜினாமா செய்யும்வரை கிளிநொச்சி தொகுதியை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தி இருந்தேன். இக் கிராமத்தில் இந்துக்கள், முஸ்லீம்கள், கத்தோலிக்கர்கள் எவ்வித பிரச்சினையுமின்றி பல ஆண்டுகள் வாழ்ந்தனர். யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர் இக் கிராமத்துக்கு அண்மையில் ஒரு பொலிஸ் நிலையம் திறக்கப்படும் வரை அங்கு பொலிஸ் சேவை இருக்கவில்லை. அரை பட்டினியுடன் வாழும் அந்தக் கிராம மக்களுக்கு நாச்சிக்குடாவில் தளம் அமைப்பதற்காகச் செலவிடப்படும் பணம் நியாயப்படுத்த முடியாத வீண் செலவாகும். கடற்படையினர் கூறுவது போல் அங்குள்ள பொது மக்களுக்கு எதுவித பாதுகாப்பும் தேவையில்லை. அவர்கள் அதை கேட்கவும் இல்லை. அவர்கள் அதை பெரும் இடைஞ்சலாகவே கருதுகிறார்கள். போதைப் பொருள் கடத்தலை கட்டுப்படுத்த எனக் கூறும் காரணமும் அர்த்தமற்றதாகும். முப்படைகள் முகாம்களையும் மூட வேண்டுமென்று மக்கள் கிளர்ச்சி செய்யும் போது புதிய முகாம்கள் அமைப்பது நாட்டுக்கும், மக்களுக்கும் இருண்ட எதிர்காலத்தையே சுட்டிகாட்டுக்கிறது. ஆகவே தயவு செய்து புதிய முகாம்கள் திறப்பதை நிறுத்தி இராணுவப் பிரசன்னத்தை இல்லாமல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டு 30 ஆண்டுகள் பயத்துடனும், பீதியுடனும் வாழ்ந்த மக்கள் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்க வழி வகுக்க வேண்டும். *

# மீன்களும் பாடும்

இயற்கையில் படைக்கப்பட்ட உயிரினங்கள் அனைத்துக்கும் இறைவனால் குறிப்பிடப்பட்ட சில சிறப்பம்சங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதை பல விஞ்ஞானிகள் ஆராய்ச்சி பூர்வமாக நிரூபிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வெற்றியும் கண்டுள்ளனர்.

இரண்டாவது உலகப் போர் நடந்து கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் ஜேர்மன் நாட்டு படையிடம் 'யு போட்' என்கின்ற கப்பல்கள் இருந்தன. அந்தக் கப்பல்கள் கடற்படை 'ஹைபோ போன்' என்கின்ற கருவியை உபயோகப்படுத்தியது. மைக்ரோஃபோன் என்றால் தண்ணீருக்குள்ளும் இயங்கும் போன்.

இந்தக் கருவிகளை கடலுக்குள்ளே இறக்கி ஆராய்ந்து கொண்டு இருந்தபோது எதிர்பாராத சில சப்தங்கள் கேட்டன. எங்கிருந்து அந்தச் சத்தங்கள் வெளிவருகின்றன என்று மேற்கொண்டு முயற்சி செய்தார்கள் ஆராய்ச்சியாளர்கள். அதன் பின்னர்தான் இன்னும் தெளிவாகப் புரிந்து கொண்டார்கள். கடலில் இருக்கின்ற மீன்கள் போடும் சத்தங்கள் தான் அவை என்று. இன்னும் கொஞ்சம் நுணுக்கமாக ஆராய்ச்சி செய்தார்கள். அதன்பின்னர் தெரிந்ததாம் அவை வெறும் சத்தங்கள் இல்லை. இனிய நாதத்துடன் கூடிய சங்கீதம் என்று.

சங்கீதம் என்பது மனிதனுக்கு மட்டுமே சொந்தமான ஒன்று என்று நினைத்துவிடக்கூடாது. பறவைகளுக்கும்பாடத் தெரிவது போன்று மீன்களுக்கும் பாடத்தெரியும் என்பது காலமாகத்தான் எமக்குத் தெரியும்.

வானம்பாடிப் பறவை நன்றாகப் பாடக்கூடியது. அதனால்தான் அது வானம்பாடி. ஒருசில பறவைகள், குறிப்பாக கிளிபோன்ற பறவைகளுக்குப் பேசவும் தெரியும். மணிப்புறா என்கின்ற பறவை ஆபிரிக்க, அமெரிக்க நாடுகளில் அதிகம். அது பாடும் பாட்டு நீண்ட தூரத்துக்குக் கேட்கும்.

ஐரோப்பாவில் உள்ள தேன்சிட்டு ஆஸ்திரேலியாவில் உள்ள லயர் பறவைகளும் நன்றாகப் பாடக் கூடியவை. இமயமலைப் பகுதியில் உள்ள ஒரு வகைப் பறவை நன்றாக விசிலடிக்குமாம். அங்கே உள்ள பொர்பட் என்கின்ற பறவை தன்னுடைய குரலைத் தானே கேட்டு இரசிக்கும் என்று ஆராய்ச்சிகளை மேற்கொண்ட பலராலும் தெரிவிக்கப்படுகிறது.

மீன்களைப் பொறுத்தவரைக்கும் டாம்செல்காட் ஹேடாக் இவையெல்லாம் இனிய இசையை எழுப்பும். ஹேடாக் மீன் பாடும் சத்தத்தைக் கேட்டால் மோட்டார் சைக்கிள் சத்தம்போன்று இருக்கும். அது அந்த மீனின் காதல் பாட்டு, காட் மீனின் ஒலி முனக்கி ஒலிபோன்று கேட்கும்.

கடல் உயிரினங்களிலேயே நன்றாகப் பாடக்கூடியது திமிங்கிலம். அமெரிக்காவில் இரண்டு ஆராய்ச்சியாளர்கள் திமிங்கிலம் போடுகின்ற சத்தத்தைப் பதிவு செய்கிறார்கள்.

வடபசுபிக் பெருங்கடலில் 460 திமிங்கிலங்களின் சப்தத்தைப் பதிவு செய்தார்கள். அட்லாண்டிக் பெருங்கடலில் 88 திமிங்கிலங்களின் சப்தங்களைப் பதிவு செய்தார்கள். எல்லாவற்றையும் பதிவு செய்து கணினியில் ஏற்றி அவற்றினை ஒலி வேறுபாடுகளை ஆய்வு செய்து பார்த்தார்கள். அதன்போது, அதிலிருந்து ஒரு தாள லயம் இருப்பது தெரியவந்துள்ளது. அதாவது அவையெல்லாம் வெறும் சத்தம் இல்லை. தாளத்துக்கு கட்டுப்பட்டு எழுப்பப்படுகின்ற பாடல்கள் என்று.

ஒரே அணியில் உள்ள திமிங்கிலம் எல்லாம் ஒரே பாடலைத்தான் பாடுகின்றன. காலப்போக்கில் அந்தச் சத்தம் மாறிமாறி வருவதையும் கண்டுபிடித்துள்ளார்கள். அதனால் மனிதர்கள் தமக்குத்தான் பாடத்தெரியும் என்று மார்தட்டிக் கொள்ளத் தேவையில்லை.

மீனுக்குப் பாடத்தெரியும்; திமிங்கிலத்துக்குப் பாடத் தெரியும்.

இவையெல்லாம் இறைவனால் படைக்கப்பட்ட இயற்கையின் அற்புதங்கள். மனிதர்கள் பாடகர்களாக இருப்பதனால் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு சில அசௌகரியங்கள் கூட ஏற்படுவதுண்டு.



ஒரு பாடகரைத் தேடிப் பக்கத்து வீட்டிலிருந்து ஒருத்தர் வந்தார். "நீங்கள் ஒரு சங்கீத வித்துவானாக இருப்பது என்னுடைய அதிஷ்டம் என்றார். அப்படியா சொல்கிறீர்கள்? என்றார் பாடகர் "ஆமாம், உங்கள் பக்கத்து வீட்டுக்காரன் தன்னுடைய வீட்டை எனக்கு பாதி விலைக்கு விற்றுவிட்டுப் போய்விட்டார்" என்றார் .

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# விளையாட்டிலும் வெற்றியீட்டிய மானிப்பாய் மகளிர் கல்லூரி





சோபனா

(கடந்தவாரத் தொடர்ச்சி)

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் கடமையாற்றும் ஒவ்வொரு அதிபரும் தமது சேவைக் காலத்தில் பாடசாலைக்கான ஒவ்வொரு அபிவிருத்திகளையும் நிறைவேற்றி வந்தனர்.

1979 ஆம் ஆண்டு பாடசாலையின் அதிபராக திருமதி அரியமலர் இராஜரத்தினம் பொறுப்பேற்றுக் கொண்டார். பாடசாலையின் ஆசிரியராக உப அதிபராகக் கடமையாற்றிய இவரின் சேவைக்காலத்தில் பாடசாலை, கலை நிகழ்வுகளில் பங்கு பற்றி அதனூடாக பாடசாலைக்கான நிதி சேகரிப்பை பெற்றுக் கொண்டது.

" மகிஷாசு மர்த்தனி" எனும் நாட்டிய நாடகம் அதிபர் அரியமலர் இராஜரத்தினத்தின் முயற்ச்சியின் பயனாகவே அகில இலங்கை ரீதியான போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

1980 ஆம் ஆண்டு பாடசாலையின் அதிபராக க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு தமிழ்ப்பாடம் கற்பித்த ஆசிரியர் திருமதி பரமேஸ்வரி இராஜநாயகம் கடமையாற்றினார்.

பாடசாலையின் அபிவிருத்திகள் அதிகரிப்பதற்கு இணங்க மாணவர்களின் திறமைகள் கோட்டம், வலயம், மாவட்டம் என உயர்வடைந்தமைக்கு மூல காரணமாக பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்களே விளங்கினர்.

பாடசாலை வெள்ளி விழாக் காணும் காலத்தில் பாடசாலையின் அதிபராக திருமதி எஸ். கல்யாண சுந்தரேசன் கடமையாற்றினார்.

1991 ஆம் ஆண்டு பாடசாலையில் விஞ்ஞான கூடம் அமைக்கப்பட்டு சஞ்சிகை ஒன்றினை வெளியீடு செய்வதற்கு அதிபர் திருமதி.வை. தியாகராஜா தனது கடமையைச் செவ்வனே நிறைவேற்றி பாடசாலயை மேலும் அபிவிருத்தியடைச் செய்தார்.

அதனைத் தொடர்ந்து பாடசாலையின் அதிபராக திருமதி வி.பசுபதிப்பிள்ளை 1993 ஆம் ஆண்டு கடமையாற்றிய போது பாடசாலைக்கென " இன்ரறக் கழகம்" ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலையில் அமையப்பெற்றுள்ள முருகன் ஆலயத்துக்கு 1988 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில கும்பாபிஷேகம் செய்யப்பட்டு பூசை வழிபாடுகள் செவ்வனே நிறைவேற்றப்பட்டன.

பாடசாலையில் ஒவ்வொரு அபிவிருத்திகளும் காலத்துக்குக் காலம் நிறைவேற்றப்பட்டதன் விளைவாக மானிப்பாய் நகரில் ஒரு பிரசித்தம் அடைந்த மகளிர் பாடசாலையாக பலராலும் பேசப்பட்டது.

இதற்கமைவாக பாடசாலையில் இணைந்து கொள்ள அதிகமான மாணவர்கள் ஆர்வம் காட்டினர். 2002 ஆம் ஆண்டு ஆரம்பப்பிரிவு என தரம் ஒன்று வகுப்பு தனியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கல்வித்துறைகளிலும் மட்டுமல்லாது விளையாட்டுத் துறைகளிலும் பாடசாலை மாணவர்கள் பெரு வெற்றிகளைக் கண்டு பாடசாலை சமூகத்துக்கு நன் மதிப்பைப் பெற்றுக் கொடுத்தனர்.

2004 ஆம் ஆண்டு முதல் பாடசாலையின் அதிபராக திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிங்கம் பொறுப்பேற்று தற்போதும் கடமையாற்றி வருகின்றார்.

இவர் கடமையிலிருந்த காலத்தில் கல்லூரி அதிபர், இணைபாடவிதானம் என உயர்ந்த ஸ்தானத்தை எய்தத் தொடங்கியது.

" நிறுவனத்தால் பெற்றுக் கொள்ளக்கூடிய மனித வள அபிவிருத்தியை பூரணமாகவும், சிக்கனமாகவும் உச்சப் பயனுறுதித் தன்மையுடன் பயன்படுத்தி, அறிவு மைய அல்லது தகவல் மைய நூற்றாண்டுடன் இணைவோம்" எனும் நோக்குடனும் கல்வி, பயிற்சி, திறன்களில் தேர்ச்சி, சிறந்த ஊழியர் நலமேம்பாடு என்பவற்றை உள்ளடக்கும் மனித வள அபிவிருத்தி ஊடாக பொருளாதார பரிமாணம் - சமூகப் பரிமாணம் என்பவற்றின் சமநிலை சிதைவுறா வகையில் ஒன்றிணைந்து விஞ்ஞான தொழில்நுட்ப, தொழில் நுணுக்கத் துறைகளில் பயனுறுதிமிக்க மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் அறிவும் நுட்பத் திறன்களும் ஆழமான தேசப்பற்றும் கொண்ட மனிதவளத்தை உருவாக்குதல் எனும் பணிக் கூற்றுக்கு அமைவாகவும் பாடசாலையில் ஒவ்வொரு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மானிப்பாய் மகளிர் கல்லூரி ஒரு பெண்கள் பாடசாலை எனும் தனித்துவத்துடன் விளங்குவதால், பாடசாலை சீருடையானது அனைத்து மாணவர்களினதும் சமத்துவத்தை வலியுறுத்தும் வகையில் வெண்ணிற ஆடையாக அணிதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

> மதபேதமின்றி அனைத்து மாணவர்களும் தனி ஒரு மாணவ சமுதாயம் மட்டுமே எனும் நோக்குடன் ஒவ்வொரு மாணவரும் வழி நடத்தப்பட்ட வண்ணம் உள்ளனர்.

இதனைவிட தரம் 1 முதல் 5 வரை ஆண், பெண் பிள்ளைகள் சேர்ந்து கல்வி கற்பதால் ஆண் பிள்ளைகள் நீல நிற அரைக் காற்சட்டையும் வெண்ணிற சேட்டும், பெண் பிள்ளைகள் வெண்ணிற ஆடையும் அணிகின்றனர்.

பாடசாலைக் கட்டுக்கோப்பு விதி முறைகளுக்கு அமைவாக மாணவர்களை வழி நடத்திச் செல்வதில் மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்னிலை வகிக்கின்றது எனத் தான் கூற வேண்டும்.

மாணவர்கள் தமது சீருடைகளில் பாடசாலையின் இலச்சினயை பொருத்தியுள்ளனர். நடுவில் ஒளியேற்றப்பட்ட தீபத்தை உள்ளடக்கி இது அமைக்கப்பட்டுள்ளது. அதன் மேற்புறத்தில் பாடசாலையின் பெயரும், அடிப்புறத்தில் பாடசாலையின் மகுட வாசகமும் பொறிக்கப்பட்டுள்ளது. இலச்சினையை பொறித்திருப்பது மாணவர்கள் பாடசாலையின் விதிமுறைகளை எவ்வாறு பின்பற்றி நடக்கின்றனர் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

" உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளார் " எனும் மகுட வாசகத்தை பண்டிதர் எஸ். இளமுருகன் உருவாக்கிக் கொடுத்ததற்கு அமைவாக மாணவர்கள் அதனைக் கடைப்பிடிப்பதற்கு ஆசிரியர்களின் வழிகாட்டல் உறுதுணையாக உள்ளது.

பாடசாலையின் கொடி சிவப்பு,நீல நிறங்களைக் கொண்டதாக இலச்சினை பொறிக்கப்பட்டு பாடசாலையில் ஏற்றப்பட்டு வருகின்றது. பாடசாலையின் தனித்துவத்தைச் பிரதிபலிக்கும் வகையில் மாணவர்களால் அணியப்படும் கழுத்துப்பட்டி சிவப்பு, நீலம் நிறங்களைக் கொண்ட வகையில் அமையப்பெற்றுள்ளது.

மாணவர்கள் பாடசாலைக்கு எவ்வாறான தோற்றத்துடன் சமூகம் தர வேண்டும் என்பதற்கு அமைவாக சீருடையுடன் கழுத்துப்பட்டி என இலச்சினை, காலணி அனைத்தையும் மாணவர்கள் அணிந்திருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பாடசாலையில் இத்தகைய ஒழுக்க விதிப் பண்புகளால் மாணவர்கள் சிறந்த பிரஜைகளாக உருவாக்கப்பட்ட வண்ணம் உள்ளனர். மதபேதமின்றி அனைத்து மாணவர்களும் தனி ஒரு மாணவ சமுதாயம் மட்டுமே எனும் நோக்குடன் ஒவ்வொரு மாணவரும் வழி நடத்தப்பட்ட வண்ணம் உள்ளனர்.

கல்லூரி சமுதாயத்தால் சமய ஒழுக்க விழுமியங்கள் அதற்கேற்ப வழிகளில் திட்டமிட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தக் கல்லூரியில் அதிகளவு இந்து சமய மாணவர்கள் கல்வி பயில்வதால் பாடசாலை வளாகத்தில் அமையப் பெற்றுள்ள முருகன் ஆலயத்தில் வழிபாடுகள் நிறைவேற்றப்படுகின்றன.

(தொடரும்)

## பூஜித ஜயசுந்தரவுக்கு இடமாற்றம்

கொழும்பு, மார்ச் 23

வடமேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்ககோன் இந்த இடமாற்றத்தை வழங்கியுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

பூஜித ஜயசுந்தர பொலிஸ் தலைமையக போக்குவரத்து குற்றப் பிரிவின் பயிற்சிக்குப் பொறுப்பான சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபராக கடமையாற்றவுள்ளார்.

வடமேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பதவிக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, அநுராதபுரம் பொலிஸ் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் மேலும் இரு பொலிஸ் பரிசோதகர்கள் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பொலிஸார் கஞ்சாவுடன் கைது

கொழும்பு, மார்ச் 23


பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் சீருடையில் மோட்டார்சைக்கிளில் 2கிலோ கஞ்சாவைக் கொண்டு சென்றுகொண்டிருந்தபோது புத்தளம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலக விசேட பிரிவினரால் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பஹரிய, 15 ஆம் மைல் கல் பிரதேசத்தைச் சேர்ந்த சாலியவெவ மற்றும் கருவலகஸ்வெவ பொலிஸ் நிலையங்களில் பணியாற்றுகின்ற பொலிஸ் உத்தியோகத்தர்களே கைதுசெய்யப்பட்டதாகப் புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக்கிடைத்த தகவலை அடுத்து இவர்களைப் புத்தளம், தில்லையடிப் பிரதேசத்தில் சோதனைக்குட்படுத்தியபோது, 2 கிலோ கஞ்சாவுடன் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட இவர்களிடம் விசாரணை மேற்கொண்டுவரும் புத்தளம் பொலிஸார், நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவும் நடவடிக்கையை மேற்கொண்டுவருகின்றனர். (ச)

## எப்படி இருந்த நான்....



இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து புறக்கோட்டை ரயில்வே நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் புதன்கிழமை தேசிய உரிமைகள் சபையின் சத்தியாக்கிரகமொன்று நடைபெற்றது. பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டனர்.

## பயங்கரவாத அச்சுறுத்தல் முற்றாக ஒழிக்கப்படவில்லை

### இப்படிக் கூறுகிறார் கோத்தபாய

கொழும்பு, மார்ச் 23

பயங்கரவாத அச்சுறுத்தல் முற்று முழுதாக இன்னும் ஒழிக்கப்படவில்லை என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார். ஆயிரக்கணக்கான விடுதலைப் புலி உறுப்பினர்கள் தப்பிச் சென்றுள்ளார் என்றும், பெருமளவிலான ஆயுதங்கள் தொடர்ந்தும் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். பயங்கரவாத அச்சுறுத்தல்கள் முற்று முழுதாக நீங்கியதாகக் கருத முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

எனினும், புலிகள் மீள இயங்க மேற்கொள்ளும் முயற்சிகள் முறியடிக்கப்படும். பிரபாகரனின் மரணத்துடன் புலிகள் இல்லாதொழிக்கப்பட்டு விட்டதாகச் சிலர் பிழையாக கருதுகின்றனர். உண்மையில் போர் முடிவடைந்தது முதல் பல தடவைகள் புலிகள் மீள இயங்க எடுத்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டுள்ளன என்கிறார் கோத்தா.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது. போர் வலயங்களுக்கு எவ்வித தடையுமின்றிப் பயணம் செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது, உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டுள்ளன, வடக்கு, கிழக்கில் படையினரைத் தவிர வேறு எவரும் ஆயுதம் ஏந்த வில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ச)

# பொறுப்பாகச் செயற்படவும்

### மக்கள் பிரதிநிதிகளுக்கு மஹிந்த கூறும் அறிவுரை

கொழும்பு, மார்ச் 23

மக்கள் பிரதிநிதிகளின் நடத்தைகள் மற்றும் அவர்களின் செயற்பாடுகள் குறித்து மக்கள் அவதானித்துக் கொண்டிருப்பதால், பொறுப்பை உணர்ந்து முன்னுதாரணமாகச் செயற்பட வேண்டியது மக்கள் பிரதிநிதிகளின் கடமையாகும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.

புத்தளம் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

**ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் மக்களின் தேவைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளுக்கு உள்ளது**

ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் மக்களின் தேவைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளுக்கு உள்ளது என்று அவர் கூறினார்.

ஊடகங்களில் மக்களின் பிரதிநிதிகளின் சில செயற்பாடுகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படுவதால், அது குறித்துப் புரிந்து நடந்து கொள்ளுமாறு, எவரும் தம்மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்தா-தபடி செயற்படுமாறும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார்.

அண்மைக்காலமாக இலங்கையின் ஆளும் கட்சியை சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் மீது கொலை, கொள்ளை மற்றும் வன்புணர்வு, கப்பம் பெறுதல், காணிகளை அபகரித்தல் போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பிக்குகள் கொலை; மேலும் இருவர் கைது

கொழும்பு, மார்ச் 23

கோட்டே ரஜமகா விகாரையின் பிக்குகள் இருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒரு சந்தேக நபரான கல்கமுவ பொலிஸ் பிரிவிலுள்ள விகாரையைச் சேர்ந்த பஸ்நாயக்க நிலமே நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பிக்குகள் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்களுக்கும் கொலையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

மிரிஹான பொலிஸ் நிலைய விசேட பிரிவினரால் இந்த இரண்டு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலைச் சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## எரிவாயு விலை விரைவில் அதிகரிப்பு

கொழும்பு,மார்ச் 23

எரிவாயு விலை விரைவில் அதிகரிக்கும் என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

விலையுயர்வு தொடர்பான பேச்சுக்கள் தொடர்கின்றன.

ஆனால் எரிவாயுவின் விலையை எவ்வளவுக்கு அதிகரிப்பது என்னும் விடயத்தில் முடிவு எட்டப்படவில்லை என்று நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் றூமி மார்சூக் கூறினார்.

எரிவாயு விலை விரைவில் மீளாய்வு செய்யப்படும். தீர்மானம் எடுத்த பின் நாம் இதுபற்றி அறிவிப்போம் என்று அவர் கூறினார்.

எரிபொருள்களின் விலைகள் கடந்த மாதம் அதிகரிக்கப்பட்ட பின் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சரான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, எரிவாயுவின் விலைகளை அதிகரிக்க அனுமதிக்கப்பட மாட்டாது என்று தெரிவித்தார்.

இருப்பினும் பிரதான எரிவாயு கம்பனியான லாஃப், லிற்றோ நிறுவனங்கள், 12.3 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலையை முறையே ரூபா 209 மற்றும் 175ஆல் அதிகரிக்க அனுமதி கோரியுள்ளன. தற்போது ஒரு எரிவாயு சிலிண்டரின் கொழும்பு விலை 2046 ரூபாவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## நூதனசாலையின் கட்டடம் மக்கள் பாவனைக்கு இன்று

கொழும்பு தேசிய நூதனசாலையின் முதலாம் மாடிக் கட்டடம் மக்கள் பாவனைக்காக இன்று வெள்ளிக்கிழமை திறக்கப்படவுள்ளது என்று தேசிய உரிமைகள் தொடர்பான அமைச்சின் செயலாளர் காந்தி விஜேதுங்க தெரிவித்தார்.

நூதனப் பொருள்கள் திருடப்பட்ட தினத்தன்று சேவையில் ஈடுபட்ட மண்டபப் பொறுப்பாளர் மற்றும் பாதுகாவலர்கள் சேவையில் இருந்து நீக்கப்படவுள்ளனர் என்று அவர் தெரிவித்தார். நூதனப் பொருள்கள் காணாமல் போன விடயம் தொடர்பிலான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றனர் என்றும் அவர் மேலும் கூறினார். (ச)

## முதல்தர தலைவர் பதவியை பொன்சேகா ஏற்க முடியாது

### லால் காந்த கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 23

சரத் பொன்சேகா நாட்டின் முதல்தர தலைவர் பதவியை வகிக்கத்தகுதியுடையவர் அல்ல என்று மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி. லால் காந்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஏகாதிபத்தியத்துக்கு எதிரான நிர்வாகியே நாட்டுக்குத் தேவைப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

சரத் பொன்சேகா விடுதலை செய்யப்படவேண்டும் எனத் தெரிவித்த அவர், சரத் பொன்சேகாவை விடுதலை செய்ய அமெரிக்காவே முன்னிற்பதாக அவர் தெரிவித்தார்.

நாட்டை மீட்கும் பூரண தேசிய வேலைத் திட்டத்தில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் முதலாளித்துவ எதிர்ப்பாளர்கள் மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களை ஒன்றிணைக்கும் மத்திய நிலையம் ஒன்று அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார். சிங்கள - தமிழ் புத்தாண்டுக்கு பதிலாக சிங்கள - தமிழ் - முஸ்லிம் புத்தாண்டு இலங்கைக்கு அவசியம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## சுட்டுக்கொலை

கொழும்பு, மார்ச் 23

கொழும்பு - கிராண்ட்பாஸ், வெலிகொட 225ஆம் இலக்க தோட்டப் பகுதியில் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர்கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் உயிரிழந்துள்ளார்.

பிரசன்ன குமார (வயது-30) என்பவரே கொலையுண்டவர் ஆவார். (ச)

## ஹஜ் யாத்திரிகளை அதிகரிக்கக் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 23

ஹஜ் யாத்திரைக்காக 5 ஆயிரத்து 500 இலங்கை யாத்திரிகர்களை அனுமதிக்குமாறு இலங்கை குழுவினர் ரியாத் அரசிடம் கோரியுள்ளனர்.

இது தொடர்பில் அங்கு சென்ற சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச். எம் பௌஸிக்கும் அந்த நாட்டு ஹஜ் விவகார அமைச்சருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் 3 மில்லியனுக்கும் அதிகமான முஸ்லிம் மக்கள் உள்ளனர்.

தற்போது சமாதானமான சூழ்நிலை ஏற்பட்டுள்ள நிலையில் அதிகமான முஸ்லிம்களுக்கு ஹஜ் யாத்திரை மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இந்த நிலையில் ஹஜ் யாத்திரைகளை அதிகரிக்குமாறு கோரி தாம் கோரிக்கை விடுத்திருப்பதாக பௌஸி கப் பௌசி தெரிவித்துள்ளார். (ச)

## மரண அறிவித்தல்



### திருமதி செல்லப்பா பூரணம்

ஆனைக்கோட்டையைப் பிறப்பிட மாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும், தற்காலிகமாக கொழும்பை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி செல்லப்பா பூரணம் 22.03.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - நாகம்மா தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்ற செல்லப்பாவின் அன்பு மனைவியும் கந்தசாமி, அரியபூபதி, காலஞ்சென்றவர்களான செல்லச்சாமி, குமாரசாமி மற்றும் அரியமலர், குருசாமி, கமலாம்பிகை, பாலாம்பிகை, விஜயராசன் ஆகியோரின் அன்புத்தாயும் குணமணி, தேவி (கனகாம்பிகை), ரஞ்சிதமலர், பூமணி, வசந்தி, லோரன்ஸ், செல்வராஜா, கருணாநிதி, ஜோசெப் ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, தம்பிராஜா, திரவியம் மற்றும் ரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.03.2012) சனிக்கிழமை அன்னாரின் (மட்டக்குளி, 65/98 காக்கைதீவு 2 ஆம் ஒழுங்கை கொழும்பு) இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதம்பிட்டிய இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை மேற்கு,
மானிப்பாய்

தகவல்:
குடும்பத்தினர்
விஜயன் (மகன்)

## விற்பனைக்கு

270 - xxxx தொடர் இலக்கமுடைய உழவு இயந்திரம்

தொடர்பு: 077 8448747

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் 45 பேச்சஸ் ($4\frac{1}{2}$ பரப்பு) காணியும் கே.கே.எஸ்.வீதியில் சிவலிங்கப்புளியடியில் 45 பேச்சஸ் $4\frac{1}{2}$ பரப்பு காணியும், யாழ்.ஆஸ்பத்திரி முன் மணிக்கூட்டு வீதியில் 45 பேச்சஸ் $4\frac{1}{2}$ பரப்புக் காணியும் இரண்டாம் பகுதியாக 75 பேச்சஸ் $7\frac{1}{2}$ பரப்பு காணியும், சாவகச்சேரி நீதிமன்றம் முன் பக்கமாக 240 பேச்சஸ் 24 பரப்பு வீட்டுடன் சேர்ந்த காணியும் உடன் விற்பனைக்கு.

தொடர்பு: 0777 232535

## உடனடி வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான தகைமையுடைய, அனுபவமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
தகுதி, அனுபவத்தின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்.
அரச அல்லது தனியார் துறையில் ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்

1. Centre Manager
2. Computer Lecturer / Instructors
3. Computer Hardware Technician
4. Office Assistant

7 நாட்களுக்குள் விண்ணப்பிக்கவும். மேலதிக விவரங்களுக்கு :

Gateway
Centre for ICT Education
347, Kasthuriyar Road, Jaffna
Phone : 021 567 5555 Fax : 021 222 7967
E - mail : gatewayjfn@sltnet.lk

## இலங்கை திட்டமிடல் சேவை III ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சை விசேட கருத்தரங்குகள்

துறைசார் நிபுணர்களினால் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் (யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்) ஆரம்பமாகின்றன.

| மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு | திறந்த போட்டிப் பரீட்சை |
|---|---|
| ஒவ்வொரு சனியும் 1 மணி தொடக்கம் 5 மணிவரை விடய ஆய்வு, கிரகித்தல், திட்டமிடல் விடயங்கள் | ஒவ்வொரு ஞாயிறும் 1 மணி தொடக்கம் 5 மணிவரை பொது அறிவு, பொது உளச்சார்பு, கிரகித்தல் விடயங்கள் |
| ஆரம்பம்: 24.3.2012 சனி 1 மணி | ஆரம்பம்: 25.3.2012 ஞாயிறு 1 மணி |

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 02 - 01 - 1951
விண்ணில் 13 - 04 - 2002



### திருமதி தங்கராசா இந்திராணி

திதி:- 23.03.2012 வளர்பிறை பிரதமை

ஆண்டு பத்தானதோ? எம் வீட்டு விளக்கணைந்து
ஆயினும் ஆறவில்லை எம் துயரம் இப்பொழுதும்
மறையவில்லை உங்கள் நினைவலைகள்
இப்படியும் ஒரு சோதனையா எம் செல்வங்களுக்கு
இது தான் இறை படைப்பின் நியதியா?
மனமிதை ஏற்கவில்லையே அம்மா?.....
பாசமிகு மனைவியின் - அன்பு அன்னையின்
பசுமை நினைவுகளை என்றென்றும் சுமக்கும்...

பத்திரகாளிகோயில் ஒழுங்கை,
பருத்தித்துறை.
T.P. 077 0870998,
001 416 287 1453 (Canada)

க.தங்கராசா (கணவர்), ச.சங்கீதா (மகள்),
ச.சந்திரகாந் (மருமகன்),
சஜீவன், சஞ்சய் (பேரப்பிள்ளைகள்). } (கனடா)
சுகந்தன் சந்தோஷ்.

(15933) (2,6,7)

ஓம் விராட் விஷ்வப் பிரமனே நமஹ

## ஓராண்டு நினைவஞ்சலி



### மாணிக்கம் இலங்கராஜா

( ஓய்வு பெற்ற விசேட சுகாதார கவனிப்பாளர், சுகாதார நிலையம் யாழ். பல்கலைக்கழகம்)

மலர்வு 1951★03★01
உதிர்வு 2011★04★04

ஆண்டொன்று சென்றாலும் ஆறாது
எம் துயரம்
நீங்கள் எமைவிட்டுப் போனாலும்
உங்கள் கண்கள் அவனியைவிட்டுப்
போகலையே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

இந்திராதேவி (மனைவி)
ஜெகன் (பெறாமகன்)

ஆசாரி வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்

சிவமயம்

கரைச்சி புளியம் பொக்கணை

## நாகதம்பிரான்

ஆலய பங்குனி உத்தர பொங்கல் (05.04.2012) விழாவின்போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான ஏல விற்பனை அறிவித்தல்

நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழா எதிர்வரும் 05.04.2012 வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. விழாவின்போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான நில ஏல விற்பனை எதிர்வரும் 25.03.2012 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

ஆலய பரிபாலனசபை

## "ஒரு கொடியில் பூத்த மலர்கள் கருகி 03 ஆண்டுகள்"

23.03.2009

"மாத்தளன் மா மாணிக்க
மயானத்தில் ஓ வென வந்த
வல்லூறிடம் சிக்கிச் சிதறிய
யுக மழியா நினைவுகள்"

தாமோதரம்பிள்ளை அற்புதம்
தாமோதரம்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராசா (J.P.)
பஞ்சலிங்கம் சந்திராதேவி
கணபதிப்பிள்ளை பஞ்சலிங்கம்
(வலயக்கல்விப் பணிமனை, துணுக்காய்)
ஸ்ரீஸ்கந்தராசா டிலானி (நிலா)
பஞ்சலிங்கம் குகராஜ்
பஞ்சலிங்கம் தனுராஜ்
செல்வம் ஜெகன்
செல்வம் புவித்திரா (டயானா)
தவராசா மதியினி

அற்புத பவனம்,
மாங்குளம்.
(15933) (2,6,7)

மகன்,
தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 16 ★ 08 ★ 1976
விண்ணில் 28 ★ 03 ★ 2009

### அமரர் கனகரத்தினம் சுரேஸ்குமார் (சுரேஸ்)

( புதுக்குடியிருப்பு வைத்தியசாலை பணியாளர்)

திதி : பூர்வபக்கபிரமை (23.03.2012)

குடும்பம் எனும் கோயிலில் குதூகலித்த என் அப்பாவே
நினைவுகளில் ஒன்றாகி நிரந்தரமாய் வாழும் முன்னே
காலன் கவர்ந்து சென்றது ஏனோ ?
நிம்மதியை இழந்து உமைத்தேடுகிறேன்
மறு ஜென்மம் எனும் சொல்லை மனதார நம்புகிறேன்
நீண்ட ஆயுளுடன் மீண்டும் வருவீர்கள் என்று
உயிர் வாழுகின்றேன்

என்றும் நீங்காத நினைவுகளுடன் வாழும்
மனைவி சு.பரிமளம் (மதி)
தாவளை, இயற்றாலை, வரணி



மண்ணில் 17 ★ 05 ★ 1984
விண்ணில் 13 ★ 03 ★ 2009

### அமரர் கந்தையா ஜெயக்குமார் (ஜெயம்)

திதி : பூர்வபக்கஏகாதசி

எம் அன்பான உடன் பிறப்போ
வாழும் இளம் வயதினிலே - எம்மை
விட்டுப்பிரிந்து ஆண்டு மூன்றாகிவிட்டது
பெருமையுடன் நீ வாழ நாடு கடந்து சென்ற போதும்
உன் குறும்புச் செயலால் ஓடோடி வந்தாய்
உன் வாழ்வுதனை விரும்பாத காலன்
பாதியிலே பறித்து விட்டான்
நீ இல்லாத எம் சுற்றமோ கலங்கி நிற்குதடா

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

என்றும் நீங்காத நினைவுகளுடன் வாழும்
அப்பா, அம்மா, உடன்பிறப்புக்கள்,
அத்தான்மார், அண்ணிமார்,
உற்றார், உறவினர்

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் குண்டுமணி திரவியநாதன்

தோற்றம் 22.06.1956
மறைவு 27.03.2009

அன்பு எனும் தேசல் அதனை
பாசம் என்னும் வலை வீசி
உறவு என்னும் ஓடம் அதில்
உரிமையுடன் வாழ்ந்து வந்தோம்
தேசம் விட்டு காலனால் விண்ணுலகு சென்று
ஆண்டுகள் மூன்று ஆனதோ!
பொங்கி வரும் கண்ணீருக்கு அளவில்லையே
உனை நினைத்துத் தேம்புகின்றோம்.

நாவலடி, உடுப்பிட்டி.
- குடும்பத்தினர்.

(15646)(2-6-7)

# ‘சிறை’ வைத்த விரிவுரையாளர்களை கிழக்குப் பல்கலை மாணவர் விடுவிப்பு

அம்பாறை, மார்ச் 23

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்லடி சுவாமி விபுலானந்தா நுண்கலை கற்கைகள் பீட மாணவர்களின் கல்விச்சுற்றுலாவுக்காக வழங்கப்பட்ட பணம் இதுவரையில் தமது சுற்றுலாவுக்குப் பயன்படுத்தாமல் இருப்பது தொடர்பிலும் தமது சில கோரிக்கைகள் இதுவரையில் கவனத்தில் கொள்ளப்படாமைக்குக் கண்டனம் தெரிவித்தும் மாணவர்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



விபுலானந்தா நுண்கலை கற்கைகள் பீட மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில்......

நேற்றுமுன்தினம் நண்பகல் தொடக்கம் விரிவுரையாளர்களைப் பல்கலைக்கழகத்துக்குள் பூட்டிவைத்து மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வளாக முன்றிலில் பதாகைகளுடன் திரண்ட மாணவர்கள் நிர்வாகத்துக்கு எதிரான கோசங்களை எழுப்பியதுடன் தமது கோரிக்கைகள் நிறைவேறும் வரையில் கதவைத் திறக்கமாட்டோம் எனத் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த காத்தான்குடி பொலிஸார் மாணவர்களுடன் பேச்சில் ஈடுபட்டபோதிலும் தமது கோரிக்கைகள் நிறைவேறும் வரையில் கதவு திறக்கப்படாது எனத் தெரிவித்தனர்.

மாணவர்களை ஏமாற்றிப் பிழைக்காதே, மாணவர்களின் பணத்தை சூறையாடாதே, பல்கலைக்கழகமா? வியாபார ஸ்தாபனமா?, போன்ற கோசங்களைக்கொண்ட பதாகைகளையும் மாணவர்கள் ஏந்தியிருந்தனர்.

தாம் கடந்த காலத்தில் பல்வேறு தடவைகள் தமது கல்விச்சுற்றுலாவுக்கான கோரிக்கைகள் விடுத்த போதிலும் அவை தொடர்பில் நிர்வாகம் கவனத்தில் கொள்ளவில்லையென்று மாணவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் தமது பாடங்களின் விரிவுரைகளுக்கு விரிவுரையாளர்கள் கலந்து கொள்வதில்லை என்றும் இதன் காரணமாகப் பல பாடத்திட்டங்கள் இன்னும் முடிவுறாத நிலையிலேயே உள்ளன என்றும் அவர்கள் கூறினர்.

இதேவேளை கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி கிட்ணன் கோவிந்தராஜா மாணவர்களுடன் நடத்திய பேச்சைத் தொடர்ந்து மாணவர்கள் தமது ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டதுடன் விரிவுரையாளர்களையும் விடுவித்தனர். (ச-31)

# விபத்தில் மாணவன் சாவு திருக்கோவிலில் பதற்றம்

அம்பாறை,மார்ச் 23

திருக்கோவில் பிரதேசத்தில் மண்அகழ்வு வாகனம் கட்டுப்பாட்டை மீறி வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் 12 வயது பாடசாலை மாணவன் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற விபத்தையடுத்து அங்கு பதற்றம் ஏற்பட்டது. அங்கு விரைந்து வந்த இர்ணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து நிலைமையை கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்தனர் என்று திருக்கோவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஈ.பி.சமிந்த ஜெயசூரிய தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் தம்பிலுவில், தம்பிமுத்து வீதியைச் சேர்ந்தவரும் தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலயத்தில் தரம் 7இல் கல்விகற்று வரும் மதனராஜா இலக்சன் என்ற மாணவனே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தையடுத்து வாகன சாரதி தப்பி ஓடி பொலிஸாரிடம் சரணடைந்தார்.இதனால் பிரதேச மக்கள் கோபமடைந்து இந்த வாகனத்தை சேதப்படுத்த முற்பட்டதுடன் கல் வீச்சுக்களையும் நடத்தினர். இதனால் பிரதேசத்தில் பதற்றம் ஏற்பட்டதையடுத்து இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு நிலமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. திருக்கோவில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ச-31)

# பிடிபட்டது குரங்குக் கூட்டம்

அம்பகமுவ பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராமங்களில் விவசாயிகளுக்குத் தொல்லை கொடுத்து வந்த 20 குரங்குகளைப் பிடித்து விவசாயிகள் அம்பகமுவ பிரதேச செயலக அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட குரங்குகளை அம்பகமுவ பிரதேச செயலகத்தின் ஊடாக மாதுருஓயா மற்றும் ரந்தனிகெல ஆகிய பகுதிகளிலுள்ள காடுகளில் விடுவதற்காக வன ஜீவராசிகள் பிரிவின் உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. அம்பகமுவ பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நோட்டன், கினிகத்தேனை, அம்பகமுவ போன்ற பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள மரக்கறிகளையும் பழவகைகளையும் நாசப்படுத்தி வந்த குரங்குகளை அந்தப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் பிடித்து அம்பகமுவ பிரதேச செயலகத்திடம் ஒப்படைந்தனர்.

அம்பகமுவ பிரதேச செயலர் புஷ்பகுமாரவின் ஆலோசனைக்கேற்ப இந்த நடவடிக்கை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# திருமலையில் உலக வங்கி நிபுணர் குழு

திருகோணமலை, மார்ச் 23

கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டத்தை மேற்பார்வை செய்வதற்கும், ஆலோசனை வழங்குவதற்கும் உலக வங்கியின் நிபுணர்கள் குழு திருகோணமலைக்கு சென்றுள்ளது.

உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்திற்குப் பொறுப்பான கொள் முதல் நிபுணர் ஹைதர் இர்சா (பாகிஸ்தான்), சிரேஷ்ட நிதி மேலாண்மை நிபுணர் பி.விக்கிரமசிங்க, ஆலோசகர் விக்கிரமரத்ன ஆகியோரடங்கிய இந்தக் குழுவினர், கிழக்கு மாகாண திட்டப் பணிப்பாளர் ஏ.உதயகுமார், உதவிப்பணிப்பாளர் ந.தமிழ்ச்செல்வன், தகவல் கல்வித் தொடர்பாடல் நிபுணர் ஏ.எஸ்.கௌரிபாலன் ஆகியோரை வரோதய நகரிலுள்ள திட்ட அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். (ச)

## இந்த வார இதழில்...

### கலியுகம் எப்படியிருக்கும்

....கலியுகத்தில் திருடர்கள், கருணையற்றவர்கள் மற்றும் அயோக்கியர்கள் போன்றவர்களே அரசாள்வார்கள்! மக்களுடைய பணங்களை அரசர்களே திருடிக்கொள்வார்கள்! அவர்களால் கஷ்டப்பட்டு மக்கள் மலைகளிலும் காடுகளிலும் ஒளிந்து வாழ......

### ஹோலி பண்டிகை

ஹோலி பண்டிகை இந்துக்களால் கொண்டாடப்படும் ஒரு வண்ணமயமான பண்டிகை ஆகும். பனி காலத்திற்கு விடையளித்து. வெயில் காலத்திற்கு வரவேற்புரை வழங்கும் காலத்தில் கொண்டாடப்படும் ஒரு பண்டிகை ஆகும். விவசாயிகள் அறுவடை முடித்து, நிறைந்த மனத்துடன் இதை கொண்டாடுவார்கள். இந்த பண்டிகை பங்குனி மாதம் பௌர்ணமியன்று (மார்ச் மாதம்) கொண்டாடப்படும். கிருஷ்ண பகவான் தன் குழந்தை பருவத்திலும், பால்ய பருவத்திலும் கோபியர்களுடன் விளையாடியதுதான் இந்த ஹோலி பண்டிகை.....






### ரணில் தரப்போகும் உத்தரவாதம்...?

ரணில் விக்கிரசிங்க ஜனாதிபதியினால் கீழ் கண்ட விடயங்களுக்கு என்ன பதில் கூறப் போகின்றார்.

★ தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுமா?

★ தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு உத்தரவாதம் அளிக்கப்படுமா?

★ போர்க் குற்றம் தொடர்பாக சர்வதேச விசாரணைக்கு உடன்படுவாரா?

★ ஒரு காலத்தில் இவரால் முன்வைக்கப் பட்ட சமஸ்ட்டி முறையை தூசு தட்டுவாரா?

★ இவரும் கூட 13பிளஸ் என்று தான் கூறுகின்றார். அப்படியானால் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவாரா? இவற்றிற்கெல்லாம் வெளிப்படையான பதில்கள் தேவை.இவற்றிற்கெல்லாம் ரணில் விக்கிரம சிங்க உளம் திறந்து பதில் அளிப்பதன் மூலம்........

### நிர்ப்பந்திக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்கள்

இராணுவ முகாம் பொறுப்பதிகாரிகளினால் தென்மராட்சி, மீசாலை, சாவகச்சேரி, கோண்டாவில் உட்பட்ட பகுதிகளில் அங்கு நடமாடிய மக்களின் அடையாள அட்டைகள் முதல் நாள் பறிக்கப்பட்டன. ஏன் திடீரென அடையாள அட்டைகள் பறிக்கப்படுகின்றன என்ற அச்சம் அப்பகுதி மக்களிடம் வேகமாகத் தொற்றிக் கொள்ளத் தவறவில்லை. அடையாள அட்டைகள் பறிக்கப்பட்டவர்களை அடுத்த நாள் இராணுவ முகாம்களுக்கு வந்து .....



# என்ன தவறு செய்தோம்?

## சர்வதேசத்தின் இறுக்கத்துக்கான காரணம் ஒன்றும் புரியவில்லை என ஏங்குகிறார் பிரதமர்

நுவரெலியா, மார்ச் 23

சர்வதேச நாடுகள் எம் மீது இவ்வளவு இறுக்கமான நடவடிக்கையை மேற்கொள்ள நாம் செய்த தவறு என்னவென்று புரியவில்லை என்று பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்தார்.

கண்டி, கெட்டம்பேயிலுள்ள மஹிந்த ராஜபக்ஷ தகவல் தொழில்நுட்ப கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது தாய்நாட்டை நேசிக்கும் ஒவ்வொருவருக்கும் பொறுப்பும் கடமையும் உண்டு. அதுவே இக்கட்டான இந்த நேரத்தில் நாம் பொறுமை காப்பதாகும். தற்போது சர்வதேச ரீதியாக எமது நாட்டுக்கு ஏற்பட்டுள்ள அழுத்தத்துக்கு எதிராகச் சகல அரசியல் கட்சிகளும் ஒரே கருத்தைக் கொண்டுள்ளமை வரவேற்கத்தக்கது.



அமெரிக்கா உட்பட மேற்கத்தேய நாடுகளால் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்படவுள்ள சூழ்ச்சியை எதிர்கொள்ள நாம் தயாராகியுள்ளோம். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு அவர்கள் தெரிவிக்கின்றனர். இது குறித்து அரசு தற்போது ஆராய்ந்து வருகிறது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை மூன்று பிரிவுகளின் அடிப்படையில் தற்போது ஆராய்ந்து வருகிறார்.

அரசியல் ரீதியில் எமக்கிடையே பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் நாடு என்ற வகையில் எமக்கு எதிராக ஏதாவது சவால்கள் ஏற்படுமாயின் அதனை எதிர்கொண்டு வெற்றிபெற அனைவரும் ஒரு பொதுநோக்கத்தின் கீழ் இணைய வேண்டும். இதனைத் தவிர வேறெந்த வழியும் இல்லை.

நாட்டில் தலைவர்கள் மாறலாம். கட்சிகள் மாறலாம். அரசுகள் மாறலாம். வெற்றி, தோல்விகள் ஏற்படலாம். ஆனால் எமது இறைமை, சுதந்திரம், தன்னாதிக்கம் என்பவை பாதுகாக்கப்பட வேண்டும்- என்றார். (ச)



தெமட்டகொடை ரயில் நிலையத்துக்கு அண்மையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நிறுத்திவைக்கப்பட்டிருந்த ரயில் பெட்டிகள், தானாக தண்டவாளத்தில் நகர்ந்து சென்று அங்கிருந்த கைவிடப்பட்ட பழைய ரயில் பெட்டிகளுடன் மோதி மதிலையும் உடைத்துக்கொண்டு சென்றது. (ச)

## நுவரெலியாவில் வைத்திய கண்காட்சி

நுவரெலியா,மார்ச் 23

நுவரெலியா பொது வைத்தியசாலையினால் வைத்திய கண்காட்சியொன்று நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் அத்தியட்சகர் டாக்டர் அருண ஜயசேகர தெரிவித்தார்.

நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு சீடிஸ்கேன் இயந்திரம் ஒன்றைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் அதற்கான நிதி திரட்டல் நடவடிக்கையின் ஒரு கட்டமாக இந்தக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நுவரெலியா பொது வைத்தியசாலையில் இது தொடர்பான ஊடகவியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கண்காட்சி எதிர்வரும் 7 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார். (ச)

## தமிழ்ப் பட்டதாரிகளுக்கு விகாரையில் விளக்கம்

மட்டக்களப்பு,மார்ச் 23

ஜெனிவாவில் இடம்பெறும் மனித உரிமைகள் மாநாடு தொடர்பாக மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் பட்டதாரிகளுக்கு தெளிவூட்டும் செயலமர்வு வாழைச்சேனை பௌத்த ஜெயந்தி விகாரையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்தச் செயலமர்வில் ஜெனிவா மாநாட்டின் நோக்கம், அதனால் மேற்கத்தைய நாடுகள் அடையப்போகும் நன்மைகள் வடக்கு, கிழக்கில் இடம்பெற்றுவரும் அபிவிருத்திப் பணிகள் உட்படப் பல்வேறு விடயங்கள் குறித்து விகாராதிபதி பட்டதாரிகளுக்கு விளக்கமளித்தார். (ச)

## பையில் சிசுவின் சடலம் 119 இற்கு வந்த தகவல்

எருவில், மார்ச் 23

கல்முனை, மணற்சேனை மயானத்தில் உரப்பையொன்றில் குழந்தையின் சடலம் காணப்படுவதாக நேற்றுமுன்தினம் அதிகாலையில் பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கமான 119 இற்கு கிடைத்த அவசர அழைப்பை அடுத்து அங்கு விரைந்த பொலிஸாரால் அந்தப் பிரதேச மக்கள் பீதி அடைந்தனர்.

கல்முனைப்பொலிஸார் அங்கு சென்று பார்த்தபோது வாய்கட்டப்பட்டிருந்த அந்த உரப்பையினுள் குப்பைகளே இருந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-31)


உ
சிவசிவ

கீரிமலை நகுலேஸ்வரம்

திருவருள் மிகு ஸ்ரீ நகுலாம்பிகை சமேத ஸ்ரீ நகுலேஸ்வரப் பெருமான் திருக்கோயில்

மண்டலாபிஷேக பூர்த்தி விழா விஞ்ஞாபனம்

24.03.2012 சனிக்கிழமை



சிவநேயச் செல்வர்களே!

சரித்திரப் பிரசித்திபெற்ற புராதனமான கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப் பெருமானுக்கு கடந்த 06.02.2012 திங்கட்கிழமை ஜிர்னோர்த்தரன மஹா கும்பா பிஷேகப் பெருவிழா சிறப்பாக நடைபெற்று தொடர்ந்து 48 தினங்கள் மண்டலாபிஷேகம் நடந்து வருகிறது. பூர்த்தி விழா எதிர்வரும் 24.03.2012 சனிக்கிழமை நடைபெற திருவருள் பாலித்துள்ளது. அன்றைய தினம் அடியார்கள் அனைவரும் வழிபாடு செய்து திருவருள் பெற்றுய்யுமாறு வேண்டிக் கொள்கின்றோம். மஹாகும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற பல்வேறு வழிகளிலும் ஆதரவும் பல உதவிகளும் வழங்கிய உள்ளூர் அடியார்களுக்கும் வெளியூர் புலம்பெயர்ந்த அடியார்களுக்கும் நகுலேஸ்வரப் பெருமான் அனுக்கிரகம் வழங்க வேண்டுதல் செய்து நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் மண்டலாபிஷேகப் பூர்த்தி நாளாகிய அன்று அடியார்கள் அபிஷேகப் பொருள்களாகிய பால், இளநீர், தயிர், நெய், கரும்பு, பழவகை, பூக்கள், மாலைகள் போன்ற திரவியங்கள் தந்துதவி நகுலேஸ்வரப் பெருமானின் திருவருள் பெற்றுய்வீர்களாக.

கிரியைகள் விவரம்

22.03.2012 வியாழக்கிழமை காலை அனுஞ்ஞை வாஸ்த்து சாந்தி செய்து 1008 கலச ஸ்தாபனம். வியாழன் பிற்பகல் 5.00 மணிக்கு மிருத்சங்கிரணம், அங்குரார்ப்பணம், கடகஸ்தாபனம், வெள்ளி காலை, மாலை யாகபூசை, கும்ப பூசைகள்.

23.03.2012 வெள்ளிக்கிழமை காலை 8 மணிதொடக்கம் விக்னேஸ்வர பூசை, சங்குஸ்தாபனம், யாகபூசை, சகஸ்ர கலச சங்கு பூசை, அக்னி கிரியைகள், விசேட பூஜை.

24.03.2012 சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் விசேட பூஜை, யாக பூஜை, சகஸ்ர கலச சங்கு பூஜை, நகுலாம்பிகை நகுலேஸ்வர சுவாமி, மூலவர், பரிவாரத் தெய்வங்கள் திரவிய அபிஷேகம், சகஸ்ர லிங்கத்துக்கு சகஸ்ர கலச சங்காபிஷேகம் நடைபெற்று உச்சிக்காலப் பூஜை, மகேஸ்வர பூஜை (அன்னதானம்)

சனி காலை 8 மணிக்கு மஹா பூர்னாகுதி, கும்பவீதி பிரதட்சனம் 9 மணிக்குப் பிரதான கும்ப அபிஷேகம்.

பிற்பகல் 3 மணிக்கு மஹா கும்பாபிஷேக மலர் வெளியீடு.

பிற்பகல் 3 மணிக்கு விசேட பூஜை, வசந்தமண்டப பூஜை, திருவூஞ்சல்.

மாலை 6 மணிக்கு ஸ்ரீ நகுலாம்பிகை சமேத ஸ்ரீ நகுலேஸ்வரப் பெருமான் இடபாருட பூந்தண்டிகையில் திருவீதியுலா வலம் வந்து அடியார்களுக்கு அனுக்கிரகம் வழங்குவார்.

முக்கிய குறிப்பு:- அடியார்கள் அனைவரும் பூவகை, பழவகை, இளநீர், அன்னதானப் பொருள்கள் என்பவற்றைக் கொடுத்துதவுமாறு வேண்டுகின்றோம். சகஸ்ர லிங்க கலச அபிஷேகத்துக்கு அடியார்கள் 1001 ரூபா அலுவலகத்தில் கொடுத்துப் பதிவு செய்து சங்கல்பம் செய்யுங்கள். எதிர்வரும் 2013 தைப்பூச நன்னாளில் 111 அடி உயரமான இராஜகோபுரத்துக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெற இருப்பதால் திருப்பணி அன்பளிப்புப் பொருள்கள் வழங்கி உதவுக.

நகுலேஸ்வரம், கீரிமலை. இராஜராஜ ஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் ஆதீன கர்த்தாவும், பிரதம குருக்கள்.

T.P:- 0217900470 இலங்கை வங்கி கணக்கு இலக்கம்: 7573078 - மல்லாகம் கிளை.

(15936)(2-7-9)



உ
சிவமயம்



ஸ்ரீ நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமான்

"நகுலநாதம்"

மகா கும்பாபிஷேக

மலர் வெளியீட்டு வைபவம்

தலைமை

நகுலேஸ்வர தேவஸ்தான பிரதம குரு

இராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள்

காலம் : 24-03-2012 சனிக்கிழமை

நேரம் : பிற்பகல் 3.00 மணி

இடம் : கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தான மண்டபம்

கும்பாபிஷேக மலர் நகுலேஸ்வர பெருமான் ஆசியுடன் மங்கல வாத்தியம் இசைக்க உள்வீதி வலம் வருதலும் மலர் வெளியீட்டு வைபவமும் இடம்பெறும்.

சிவநேய செல்வர்கள் அடியார்கள் யாபேரும் இவ் வைபவத்தில் கலந்து மகா கும்பாபிஷேக மலரைப் பெற்று எம் பெருமான் திருப்பணியில் பங்கு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நகுலேஸ்வர தேவஸ்தான
பிரதம குரு,
இராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள்

(15937) (9,10)

# விடுவிக்கப்பட்ட பின்பும் தொடரும் துன்பங்கள்

கோப்பாய் சண்முகம்
கதையோடு செய்தி

உயிருள்ள நாள்களில் நினைவுகளை சுமந்து கொண்டு திரிய வேண்டியதான சூழலில் இருக்கின்றாள் அவள். செத்தாலும் ஏன் என்று கேட்பதற்கு ஆள்கள் இல்லை. தடுப்பில் இருந்து இப் பொழுதான் வெளியில் வந்தவள். போரில் அவள் வாழ்ந்த ஊர் சிதைக்கப்பட்டு உயிரில்லாமல் கிடக் கிறது. இதற்குள் அவள் மனதில் அடிக்கடி பழைய நினைவுகள் வந்த படி இருக் கும்.

ஒவ்வொரு நாளும் இரவானதும் அவள் தூக்கத்தில் ''அந்தப் பொசிசனில் ஏய்ம் வைத்து தாக்கு'' என்ற தளபதியின் கட்டளைதான் ஞாபகத்துக்கு வரும். அந்த ஞாபகம் வரும் இரவு அடிக்கடி அவள் தூக்கம் கலைந்து கொள்ளும்.

வாழ்க்கையோடு இணைய வந்தவள் பழையதைப் பற்றி நினைக் கக் கூடாது என்று பார்த்தால் அவளை சமூகம் ஒதுக்கி வைத்தது. சமூகம் தானாக அவளை ஒதுக்க வில்லை. ஆயுததாரிகளின் அடக்கு முறைக்குள் சமூகம் அகப்பட்டதால், அவளை ஒதுக்கி வைத்தது. போர்க்களத்தில் பட்ட கஷ்ரம், பின்பு தடுப்பு முகாமில் பட்ட கஷ்ரம், தடுப்பு முகாமில் இருந்து வெளியே வந்தும் கஷ்ரம்.

அவளைப் பாதுகாக்க எவரும் இல்லை. தடுப்பு முகாமில் இருந்து வெளியே வந்தும், அவள் வாழ்க்கையை நகர்த்தப் பெரும்பாடுபடுகிறாள். தனது வாழ்க்கையை கஷ்ரத்துடன் நகர்த்திக் கொண்டிருக்க, சில பேர் சி.ஐ.டி. என்று சொல்லி அவளை விட்டபாடில்லை.

அவளது கைபேசி ஒலி எழுப்பினால் அவளது உடல் எல்லாம் வேர்த்து நடுக்கம் காணும். அவளது கைபேசியில் பேசும் இனந்தெரியாத நபர் யார் என்று தெரியாமல் அவள் நாளாந்தம் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறாள். வெளியே எவரிடமும் சொல்ல முடியாது. தனக் குள்ளே போட்டு உடைத்துக் கொண்டு இருக்கிறாள்.

கைபேசியில் அவளுடன் பேசும் இனந்தெரியாதவன் சி.ஐ.டி என்று வேறு சொல்லுறான். பிறகு என்ன அவளால் செய்ய முடியும்? ஒன்றுமே செய்ய முடியாது. அவன் சி.ஐ.டியோ இல்லையோ, அது வேற விடயம். ஆனால் அவனுக்கு பின்னால் ஒரு சக்தி இருக்கிறது என்பது மட்டும் அவளுக்கு நன்கு புரிகிறது. அதுதான் அவன் அவளுடன் அடிக்கடி கைபேசியில் தொந்தரவு கொடுத்த வண்ணம் இருக்கிறான்.

இதனால் அவள் மனதில் அடிக் கடி பழைய நினைவுகள் நிழலாடும். அந்தக் காலம் பெட்டைய லோட கைப் பேசியில் அல்ல, நேரில் சேட்டை விட்டால்கூட அவ்வளவு தான். பெண் போராளிகளே துணிந்து சேட்டை விட்டவனைப் பிடித்து நல்ல வாங்கு வாங்குவார்கள். பெட்டையளோட சேட்டை விட்டவன் என்று ஒருநாள் ஒருவனை பிடித்து வந்து 1 kgஅரிசியை எடுத்து முகாம் முற்றத்தில் எறிந்து விட்டினம். அவனைப் பொறுக்கச் சொன்ன போது காலையில் இருந்து பின்னேரம் வரையும் அரிசியைப் பொறுக்கிக் கொண்டே இருந்தான். இப்படியாக பல சம்பவங்கள் அவள் மனதில் ஓடும்.

அப்பத்த காலம் பெண்களுக்கு பாதுகாப்பு இருந்தது. பெண்களுக்குப் பிரச்சினை என்றால் பெண்கள் தாங்களாகவே முடிவு எடுக்கும் சூழல் இருந்தது. ஆனால் இப்ப அது இல்லை. எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது. பெண்களுக்கு பெண்களே எதிரியாகி விட்டார்கள். இந்த சூழலில் இவளால் என்ன செய்ய முடியும்? ஒவ்வொரு நாளும் சுமை யுடன் நகரும் போதும் அவளது கைபேசி ஒலிக்கும் போதும் அவள் பழைய நிலைமை இனிமேல் வராதா என ஏங்குவாள்...

இந்த கைபேசி அழைப்புக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என நினைத்தாள் புலனாய்வுத்துறையினர் எனக் கூறி முன்னாள் போராளிகளை இனந்தெரியாத நபர்கள் மிரட்டி வருவது தொடர்பாக கிளிநொச்சிக்குப் பகுதியில் முறைப்பாடுகள் வருவது அவளுக்குத் தெரியும்.

கிளிநொச்சி பொலிஸில் முறையிட்டாள். ஆனால் தொல்லை குறைந்தபாடில்லை. பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை. அவன் மீண்டும் மீண்டும் அழைப்பு எடுத்து மிரட்டுகின்றான்.

அண்மையில் ஒரு முன்னாள் பெண் போராளியுடன் தொடர்பு கொண்ட அநாமதேய நபர் ''நாங்கள் நினைத் தால் உம்மைக் கடத்திச் செல்ல முடியும். நீர் இராணுவத்துடனும் பொலி ஸாருடனும் அநாகரிகமாக நடந்து கொண்டது எமக்குத் தெரியும். நாங்கள் என்ன கேட்டாலும் அதைச் செய்ய வேண் டும்'' என மிரட்டியுள்ளான்.

பேப்பரில இது சம்பந்தமாக முறைப்பாடு செய்தவர்களைப் பற்றி ஏதாவது வருமோ என்று ஒவ்வொரு நாளும் பேப்பரையும் பார்ப்பாள். ஆனால் அதைப் பற்றி எந்தச் செய்தியும் இது வரை வரவில்லை. முறைப்பாடு செய்தவர்களுக்கே இன்னும் தீர்வு இல்லை. எனக்கு எப்படித் தீர்வு கிடைக்கும்? என்று தானே தனக்குள்ளே நினைத்துக் கொண்டு தனது கைபேசிப் பிரச்சினையை எதிர்கொண்டு வந்தாள். தனக்கு உதவுவோர் இவளது கைபேசிக்கு தொடர்பு எடுத்தாலும் கைப் பேசியைப் பார்த்து எவருடைய அழைப்பு என உறுதி செய்த பின் னரே அவள் தனது கைபேசியை அழுத்திக் கதைக்க வெளிக்கிடுவாள். இதற்குள் ஆறுதலாக கைபேசியை அழுத்துவதால் அவளது உறவுகள் அவளைக் கண்டபடி பேசியது முண்டு. அந்தப் பேச்சையும் வாங்கிக் கொண்டு தனது பிரச்சினையை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள்.

எல்லாமும் எப்போது தீரும்?


## தையல் பயிற்சி நிலைய ஆசிரியர் வெற்றிடம்

ஜெயந்திநகர் கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவ ஆச்சிரமச் சைவச்சிறுவர் இல்ல தையல் பயிற்சி நிலையத்துக்கான ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்
★ தையல் பயிற்சி டிப்ளோமா பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
★ 21 தொடக்கம் 50 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்.
★ இல்லத்தில் தங்கி நின்று பணிபுரியக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
★ திணைக்களங்களில் பணிபுரிந்தோருக்கு வயதெல்லை கிடையாது.
★ பெண்பாலார் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
★ உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும்.
★ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை தலைவர், மகாதேவ ஆச்சிரமச் சிறுவர் இல்லம், ஜெயந்தி நகர், கிளிநொச்சி எனும் முகவரிக்கு 31.03.2012 க்கு முன்னர் நேரடியாக அல்லது பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்.
(14072) (45)

## விற்பனைக்கு

BAHIRAHA No - 1 புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக் குண்டு. 100/=
R.M.B. பாம் பருத்தித்துறை
T.P : 077 4701928
(15945)(6-14-8)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் 5 Rooms, 2 Toilets, 1 Kitchen, Hall உடனான வீடு வாடகைக்கு உள்ளது.
நிறுவனம்/ NGO/ Guest House போன்றவை விரும்பத்தக்கது.
(15944) தொடர்பு: 075 7131027

## வாழ்த்துகின்றோம்

கடந்த (14.03.2012)
புதன்கிழமை சிவாச்சாரிய
அபிஷேகம் பெற்ற எமது
ஆலய அர்ச்சகர்
பிரம்மஸ்ரீ
வரதராஜக்குருக்கள்
கேதீஸ்வரக் குருக்கள்
(B.Com (Hons), M.A. (PDS)
அவர்கள் மேலும் பல சிறப்புகளைப்
பெற்றுப் பல்லாண்டு வாழ
வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
பரிபாலன சபையினர்.
இருபாலை வேளாதோப்பு,
மதுரை மகா முத்துமாரியம்மன், தேவஸ்தானம்.





## வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

NIPPONS
இலங்கையின் முதல் தர பிளாஸ்ரிக் உற்பத்தியாளர்களான
Mangala
# NIPPON PLASTIC INDUSTRIES
இன்று(23.03.2012) வெள்ளிக்கிழமை தொடக்கம்
இல. 536 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணத்தில்(மனோகரா சந்தி) அமைந்துள்ள
மங்களா காட்சியறையுடன் இணைந்து
யாழ்.மாவட்டத்தில் தமது விநியோகத்தை ஆரம்பிக்கவுள்ளார்கள்
என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்.

புதுவருடத்தை முன்னிட்டு விசேட விலைக் கழிவுகள்

NIPPON PLASTIC INDUSTRIES
Factory & Head Office
Bathlagoda, Ibbagamuwa, Kurunegala, Sri Lanka.
T.P: 037 2259823, 2259691, 4698497,
037 5671255, 5671256 2258000 Fax: 037 4640218

6 கதிரைகள் கொள்வனவு செய்வோருக்கு
750 ரூபா பெறுமதியான 1 ரீபோ இலவசம்

தொடர்புகளுக்கு: 536, K.K.S. Road, Jaffna. T.P 021 2228367, 0777286069, 021 4921099




# பிரதேசசபை கிளிநொச்சி

# பொது அறிவித்தல் -2012

## பிரதேசசபை பூநகரி

**1.துவிச்சக்கர வண்டி, வளர்ப்பு நாய் உரிமம் பெறல்-2012**

2012 ஆம் ஆண்டு துவிச்சக்கர வண்டி, வளர்ப்பு நாய்களுக்கான உரிமத்தை சித்திரை மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**2. வீடமைப்பு நகர அபிவிருத்தி கட்டளைச்சட்டப்பிரிவு 268 இன் பிரகாரமான அறிவித்தல்**

பூநகரி பிரதேசசபையின் அனுமதி இன்றி சபை எல்லைக்குள் அரச, தனியார், அரசசார்பற்ற நிறுவனம் என்பவற்றால் மேற்கொள்ளப்படும் கட்டடங்கள், மதில்கள், மலசலகூடங்கள், குழாய்க்கிணறுகள், கிணறுகள் என்பனவற்றை அமைத்தல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் போன்றன சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே பூநகரி பிரதேசசபையால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து சபையின் முன் அனுமதி பெறப்படாது கட்டப்படும் கட்டடங்களுக்கு கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

ஏற்கனவே அனுமதிபெற்றவர்கள் கட்டடம் கட்டி முடிக்காத பட்சத்தில் அனுமதியைப் புதுப்பித்தல் வேண்டும். அனுமதி பெற்ற கட்டடம் கட்டி முடித்தவர்கள் முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**3. வியாபார உரிம அனுமதிப்பத்திரம்-2012**

பூநகரி பிரதேசசபை எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் 2012 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தைப்பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து கட்டணங்களை 15.04.2012 ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தினைப் பெற்று வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அத்துடன் உரிமம் காட்சிப்படுத்தப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**4. படவரைஞராக, நில அளவையாளராகப் பதிவு செய்தல்-2012**

2012 ஆம் ஆண்டு படவரைஞராக, நிலஅளவையாளராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவுசெய்துள்ளவர்களும் 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்துகொள்ள அல்லது புதுப்பிக்க முடியும்.

**5. விளம்பரங்களை அமைத்தல், காட்சிப்படுத்தல்-2012**

எமது பகுதியின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பொது வீதிகள், பொதுஇடங்கள், வர்த்தக நிலையங்களில் பொருத்தப்படும் காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்காக 31.03.2012 ஆம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணங்களைச் செலுத்தி சபையின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள், வர்த்தக நிலைய உரிமையாளர்கள், நிறுவனங்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் 01.04.2012 க்குப் பின்னர் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**6. சூழல் பாதுகாப்பு உரிமம் - 2012**

மத்திய சுற்றாடல் அதிகாரசபைத்தலைவர் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய பாதுகாப்புச்சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு எனக்கு வழங்கப்பட்ட குறிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் பூநகரி பிரதேசசபையின் நிர்வாகப்பிரிவில் 1533 16 ஆம் இலக்க 2008.01.25 ஆம் திகதிய மற்றும் 1534 18 ஆம் இலக்க 2008.02.01 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் விதந்துரைக்கப்பட்ட தொழிலை அல்லது வியாபாரத்தை மேற்கொள்பவர்கள் எமது சபையின் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு 30.04.2012 ஆம் திகதிக்கு முன்பாக சூழல் பாதுகாப்பு உரிமத்தை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**7. கட்டாக்காலி கால்நடைகள்**

எமது நிர்வாகப் பிரதேசத்திற்குள் அலைந்து திரியும் கட்டாக்காலி கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு கேட்டுக் கொள்வதோடு, அவ்வாறு கட்டி வளர்க்கப்படாத கால்நடைகள் பிரதேச சபையால் பிடிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**8. பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கு அண்மித்து கடல் உணவுகள், மரக்கறிகள், இறைச்சி மற்றும் உயிர்க்கோழிகள் விற்பனையைத் தடை செய்தல்**

எமது சபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கு அண்மித்த ஒரு கிலோமீற்றர் தூரத்துக்குள் கடல் உணவுகள், மரக்கறிகள், இறைச்சி மற்றும் உயிர்க்கோழிகள் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. மீறுவோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**9. பொது இடங்கள், வர்த்தக நிலையங்களின் முன்பாகவும் வீதியோரங் களிலும் கழிவுகளைப் போடுதல்**

சபையின் எல்லைக்குட்பட்ட பொதுஇடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுப்பொருள்களைக் கொட்டுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கொள்கலன்களில் கழிவுப் பொருள்களைச் சேகரித்து அதனை அகற்றுவதற்கு எமது சபையின் உபஅலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு உரிய கட்டணத்தைச் செலுத்தி கழிவை அகற்றி சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**10. நடைபாதை வியாபாரம்**

எமதுசபை எல்லைக்குட்பட்ட வீதியோரங்களில் நடைபாதை வியாபாரம் செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. வீதி வியாபாரம் செய்வோரின் பொருள்கள் சபையால் கைப்பற்றப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**பொன்னம்பலம் சிறீஸ்கந்தராசா**
**தவிசாளர், பூநகரி பிரதேசசபை கிளிநொச்சி.**

(கி/9879)(2-9)



யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய
விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்
திரு.செல்லத்துரை தர்மராஜன் அவர்களின்

# சேவைநலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்



**திரு.செல்லத்துரை தர்மராஜன் (SLTS I)**

ஆரம்பக் கல்வி :
யா/ கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
இடைநிலைக் கல்வி, உயர்கல்வி } யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

ஆசிரியர் சேவை :
மன்/ மொட்டைக்காடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 01.02.1984 - 28.02.1985
மன்/ வெள்ளான்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 01.03.1985 - 31.08.1985
மன்/ மொட்டைக்காடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 01.09.1985 - 31.01.1992
மன்/ இலுப்பைக் கடவை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 01.02.1992 - 21.07.1992
யா/ நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை 22.07.1992 - 28.02.1994
யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலம் 01.03.1994 01.01.2012

**அயராது உழைத்த அர்ப்பணிப்பாளர்**

ஆசிரியர் செல்லத்துரை தர்மராஜன் அவர்கள் கடந்த 18 வருடங்களாக யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் விளையாட்டுத்துறைக்கு பொறுப்பாக இருந்து அப்பாடசாலையை சகல துறைகளிலும் முன்னேற்ற வேண்டும் என்பதற்காக அயராது உழைத்தவர். அத்துடன் கோட்டமட்ட, வலயமட்ட நிகழ்வுகளின் போது இணைந்து பணியாற்றியவராவார். 02.01.2012 இல் ஓய்வுபெற்றுச் சென்ற அவரை அவரது பிறந்த நன்நாளில் வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். அன்னாரின் ஓய்வுகாலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து அவரை வாழ்த்துகின்றேன்.

சண்.தயாளன், உதவிக்கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி),யாழ்ப்பாண கல்வி வலயம்

**ஆளுமை மிக்க ஒருங்கிணைப்பாளர்**

யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு அளப்பரிய சேவையாற்றி தனது விருப்பின் நிமித்தம் சேவையிலிருந்து ஓய்வுபெறும் அசிரியர் திரு.செல்லத்துரை தர்மராஜன் நீண்டகாலமாக என்னுடன் பழகி வருபவர். கணித பாடத்தை மாணவர்களுக்கு வினைத்திறனுடன் கற்பிப்பதில் வல்லவர். எமது வலயத்தால் நடாத்தப்பட்ட பல கருத்தரங்குகள், விளையாட்டு நிகழ்வுகளுக்கு வேண்டிய அனுசரணைகளை நல்கியவர். ஒழுங்கமைத்துத்துத்தந்தவர். இவருடன் பழகக்கிடைத்த இனிய நாள்கள் மறக்கமுடியாதவை. பல்துறை ஆளுமை கொண்ட இவர் தனது ஓய்வுக்காலத்தில் உடல் , உள ஆரோக்கியம் பெற்று குடும்பத்தினருடன் மகிழ்வுடன் வாழ எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"வெள்ளைத் தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையா உயர்வு"

திரு.த.இராசலிங்கம், பிரதிக்கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம்,யாழ்ப்பாணம்.

**பல்துறை ஆற்றல்மிக்க பண்பாளர்**

திரு. செ.தர்மராஜன் ஆசிரியர் தனது 28 வருட ஆசிரிய சேவையில் 18 வருடங்கள் எமது கல்லூரியில் கணிதபாடத்தை கற்பித்து மாணவர்களின் நன்மதிப்பை பெற்றிருந்தார். கற்பித்தல் செயற்பாட்டுடன் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியராக (POG). சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் பொறுப்பாசிரியராக , ஒழுக்காற்றுக்குழு . முகாமைத்துவக்குழு உறுப்பினராக இருந்து மாணவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். வெளிமாவட்டங்களுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பங்குகொள்ள உதவினார். அவரது உன்னத சேவை என்றும் மறக்க முடியாதது. அவரது சேவையை மனதாரப் பாராட்டுவதுடன் அவர் நீண்டகாலம் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வி.மாணிக்கம்,ஓய்வுநிலை அதிபர், பிரதிக்கல்விப் பணிப்பாளர்.

**நேரம் பாராது நின்றுழைத்தவர்**

கடந்த 18 ஆண்டுகாலமாக இக்கல்லூரிக்கு புகழ்சேர்க்கும் முகமாக சேவையாளனாகத் திகழ்ந்து 02.01.2012 இல் ஓய்வினைப் பெற்றுக் கொண்ட திரு.செ.தர்மராஜன் அவர்கள் பிறந்த இன்றைய நாளிலே அவரது சேவைப் பணிகளை மனம் நிறைந்து பாராட்டி வாழ்த்துவதிலே பெருமகிழ்வெய்துகின்றேன். சிறந்த கணித ஆசிரியர் . விளையாட்டுத்துறையில் மிகுந்த அனுபவமும் ஆற்றலும் மிக்கவர். விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியராக இருந்து சாதனை படைத்த அந்த நிகழ்வுகள் எம்மனதில் நின்று நிழலாடுகின்றன. பன்மொழியாற்றலுடன் தொடர்பாடலிலும் ஒழுங்கமைப்பிலும் தனித்துவமான ஆளுமைப்பண்பு மிக்கவர். மாணவர் கட்டொழுங்கிற்கு மகுடமாகத் திகழ்ந்தவர். தன்னுள் மறைந்திருந்த நோய்வடுவையும் மனத்திலே கொள்ளாது எந்நேரத்திலும் எவ்வேளையிலும் கல்லூரிக்காக உழைத்து சேவையில் இருந்து ஓய்வினைப் பெற்றுக்கொண்டு 59 ஆவது வயதில் காலடி வைக்கும் எம் இனிய ஆசிரியருக்கு சுக நலமும் சகல சௌபாக்கியங்களும் எல்லாவித சிறப்புக்களும் அருள எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

வே.ஞானகாந்தன், அதிபர், யா/ கனகரத்தினம் ம. ம. வி.

**ஆசிரியர் நலன் காத்த நல்லாசான்**

திரு.செல்லத்துரை தர்மராஜன் அவர்கள் இவ்வித்தியாலயத்தில் தனது பணியைத் தொடங்கிய நாளிலிருந்து பல துறைகளிலும் ஓய்வு ஒழிச்சலின்றி . தனது சொந்த நலன்களைத் துறந்து பணியாற்றிய ஒருவர். எமது ஆசிரியர் நலன்புரிக்கழகத்தில் பல்வேறு பதவிநிலைகளை வகித்து ஆசிரியர்களின் நலன்களுக்காக சமயோசிதமாகவும், துணிச்சலுடனும் தீர்மானங்களை எடுத்து திறம்படச் செயற்பட்டவர். 02.01.2012 இல் ஓய்வுபெற்றுச் சென்றுள்ள அவரது சேவையை பாராட்டுவதுடன் ஓய்வு காலத்தில் சீருடனும் . சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ பிறந்த நன்நாளிலே வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/ கனகரத்தினம் ம.ம.வி.**

(2-9)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 11 ★ 04 ★ 1966



இறப்பு 15 ★ 03 ★ 2009



பிறப்பு 16 ★ 04 ★ 1989

**நடராசா ஜெயந்தினி** **நடராசா ரகுராஜ்**

மூன்று ஆண்டென்ன முப்பது ஆனாலும்
முடியுமா! உமை மறக்க
மூச்சோடு கலந்த உம் நினைவு - எம்
மூச்சுள்ளவரை நிலைக்கும்

வலைஞர்மடம் - முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலில் காயப்பட்டு மரணமடைந்த எங்கள் அன்புத்தெய்வங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஏழாலை தெற்கு, சுன்னாகம். நடராசா குடும்பத்தினர்

# திடீரெனத் தீப்பற்றி எரிந்த வீடு

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்ப்பாணம் கொட்டடி, கண்ணபுரம் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் திடீரென்று வீடொன்று தீப் பற்றி எரிந்து முற்றாக நாசமாகியுள்ளது.

வீட்டில் எவரும் இல்லாத நேரத்தில் திடீரென்று தீப் பிடிக்க வீடு முற்றாக எரிந்துள்ளது. மதிய நேரமே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மின் ஒழுக்கால் தீ ஏற்பட்டிருக்கலாம் என்று இந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். இருப்பினும் வீட்டில் உள்ளவர்கள் மின் சாரத்தை நிறுத்திவிட்டே வீட்டை விட்டு வெளியேறியதாகக் கூறுகின்றனர்.

முற்றாக வீடு எரிந்துள்ள நிலையில் சம்பவ இடத்துக்கு நேரடியாக சென்ற மாவட்ட செயலக இடர் முகாமைத்துவப் பிரிவினர், பாதிக்கப்பட்ட குறித்த வீட்டாருக்கு தற்காலிக கூடாரங்களை உடனடியாகவே வழங்கியுள்ளனர். (ம-5)

# கோப்பாய் மாவீரர் துயிலும் இல்ல கிணற்றில் சிப்பாயின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைந்துள்ள படைத் தலைமையகத்தில் கடமையாற்றிய சிப்பாய் ஒருவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கண்டியைச் சேர்ந்த பிரதீப் ஜெயசேகர (வயது-21) என்ற சிப்பாயே இவ்வாறு நேற்று மரணமானவராவார்.

கோப்பாயில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள 51 ஆவது பிரிகேட்டைச் சேர்ந்த இராணுவச் சிப்பாயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது சடலம் நேற்றுக் காலை கோப்பாய்ப் பொலிஸாரால் மீட்டகப்பட்டது. முகாமின் எல்லைப் புறத்தில் அமைந்துள்ள காவலரணில் கடமையாற்றிய இராணுவச் சிப்பாய், கைத்தொலை பேசியில் உரையாடிக் கொண்டிருந்தபோது தவறுதலாக கிணற்றினுள் வீழ்ந்து மரணமானார் என்று கூறி அவரது சடலம் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்குச் சட்ட வைத்திய அதிகாரி சி.சிவரூபன் நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-5)

# நல்லிணக்கம் காண்பதற்கு அரசு பிராயச்சித்தம் தேவை

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அணுகுண்டைப் போட்டு அழித்ததனால் ஜப்பானை மீள் புனருத்தாரணம் செய்யும் பொறுப்பை அமெரிக் காவே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற பிரேரணையை ஐக்கிய நாடுகள் சபையில் சமர்ப்பித்தது இலங்கையே. ஆனால் தமிழர் பிரதேசத்து அழிவுகளை மீள் கட்டமைக்கும் பொறுப்பு, இலங்கை அரசால் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

மேற்கூறிய மூன்று செயற்பாடுகளும் இலங்கை அரசினதும், ஆயுதப் படையினதும் நல்லெண்ணம் அற்ற தன்மையில், அரசாங்க ஆயுதப்படைபலத்தை பயன்படுத்தி, தமிழர் பிரதேசத்தில் சிங்கள பௌத்த விஸ்தரிப்பு மேற்கொள்ளப்படுவதையுமே உறுதிப்படுத்தி நிற்கின்றன.

இவை நல்லிணக்கம் சார்ந்த செயல் முறைக்கு வழிவகுக்காது, பகைமை உணர்வை வளர்த்து அடுத்த கட்ட அமைதியின்மைக்கும், போராட்ட முன்னெடுப்புக்களுக்கும் வழி சமைக்கும் செயல் முறையாகவே காணப்படுகின்றது.

கட்டுரையின் முற்பகுதியில் கூறப்பட்ட வரலாற்றுத் தொடர்ச்சி எதுவும் ஜனாதிபதிக்கு தெரியாததல்ல. மேலும் போரின் பின் வடபுலத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதன் உதாரணங்களாக மேலே முன்வைக்கப்பட்டவைகளும் அரசின் கருத்துரு எண்ணத்தின் செயல்வடிவங்களே.

இந்தச் செயற்பாடுகள் அனைத்தும் இலங்கை வாழ் தமிழர் மீது தங்களின் நல்லெண்ணம் அற்ற தன்மையின் வெளிப்பாடுகளே. மேலும் தெளிவாக கூறப்படின், இவை வல்எண்ணத்தின் விளைவான தமிழர் மீதான வன்முறையே ஆகும். சிறிலங்கா அரசின் இத்தகைய வன்முறை செயற்பாடுகளால் இன நல்லிணக்கம் ஏற்படப் போவதில்லை. மாறாக முரண்பாட்டு போராட்டங்களுக்கே வழி சமைக்கும்.

### எண்ணம், செயல்களின் தொடர்ச்சி

தமிழர் மீதான சிங்களவர்களின் நல்லெண்ணத்தின் அவசியம் பற்றியும், இல்லையேல் ஏற்படக்கூடிய எதிர் விளைவுகள் குறித்தும் 21.11.2010 இல் உதயனில் கட்டுரை வரைந்திருந்தேன் பௌத்த மத தர்ம சாஸ்திரத்துக்கு அமைவாக என்னால் முன்வைக்கப்பட்டவை கவனத்தில் எடுத்து கொள்ள முடியாமல் போய் விட்டதையே கடந்த ஒன்றரை வருடத்தைய செயற்பாடுகள் காட்டி நிற்கின்றன. இதற்கான இயற்கை சுழற்சியின் விளைவே ஜெனிவா பிரேரணை. இதற்காக அமெரிக்காவையும், புலம் பெயர் தமிழர் அமைப்புக்களையும் சாருவதால் எந்தப் பலனும் விளையப் போவதில்லை. அரச தலைமைத்துவத்தின் எண்ணச் செயற்பாடுகளினால் ஏற்படுத்தப்பட்ட இயற்கையின் கர்ம வினைச் சக்கரத்தின் சுழற்சியின் விளைவே இந்தப் பிரேரணை முன்மொழிவு. இந்த சுழற்சியை நல்லிணக்க சமாதான திசையில் திருப்புவதற்கான காலம் இன்னும் கடந்து போய் விடவில்லை என்றே கருதுகின்றேன்.

### பாவத்தை அறிக்கையிடலும், மனந்திருந்துதலும் இயற்கையின் மன்னிப்பும்

கிறிஸ்தவத்தில் சொல்லப்படுகின்ற பாவத்தை அறிக்கையிடலும், மனந்திருந்துதலும் இயற்கையில் தொடங்கப்பட்ட கர்ம வினை சுழற்சியை தடுத்து நிறுத்தும். இதனாலேயே "மன்னிப்பு கிடைக்கின்றது" என்று கூறப்படுகின்றது. இத்த கைய பொறிமுறைக்கூடாக அன்றி, வேறு வழிகளினால் பாவத்தின் சுழற்சியை தடுத்து நிறுத்த முடியாது. இது பௌத்த, இந்து தர்ம அறநெறி தத்துவங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளதே.

### பிராயச்சித்தம், பரிகாரம்

மேற்கூறிய படிமுறைகளுக்கூடாக நகர்ந்து வரும் போது இறுதியாக வருபவைகளே பரிகாரம் தேடல், பிராயச்சித்தம் செய்தல் என்பதாகும். இந்து தர்மத்தில் அதிகமாக கையாளப்படும் இவை பௌத்த தர்மத்திலும் உள்ளதாகவே கருதுகின்றேன். மேற்கூறிய

1. பாவத்தை அறிக்கையிடல்
2. மனந்திருந்துதல்
3. பரிகாரம் தேடல்
4. பிராயச்சித்தம் செய்தல்

போன்ற படிமுறை செயற்பாடுகளுக்கு ஊடாகச் செல்லும் பொழுது எமது செயற்பாடுகளுக்கான எதிர்வினை விளைவுகள் நிறுத்தப்பட்டு, இயற்கையுடன் நல்லிணக்கம் ஏற்படும்.

இந்தச் செயல் முறைகளை நடைமுறைப்படுத்தும் வாய்ப்பாகவே ஜெனிவா பிரேரணை அமைகின்றது என்று கொள்ளலாம். இவற்றை நடைமுறைப் படுத்தி இயற்கையுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதினூடாக இலங்கையில் சமாதான சகவாழ்வை ஏற்படுத்த அரசு முனையலாம்.

*

# எரிபொருள் நிரப்பு நிலையம் திறப்பு

'வடக்கின் வசந்தம்' அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் லிவ பூல் நெவிகேஷன் நிறுவனத்தால் நவீன முறையில் நிர்மாணிக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக்கூட்டுத் தாபனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையம் இன்று காலை 7.30 மணிக்கு யாழ்.நகர் வின்ஸர் சந்தியில் (கஸ்தூரியார் வீதியில்) திறந்து வைக்கப்படவுள்ளது. (ம-14)

# இறையருள் எப்போது கிடைக்கும்?

இறைவனை அடைவதற்காக யாருடைய பிராணனாவது துடிக்குமானால் அவர் இறை யனுபூதி பெற அவ்வளவு தாமதமில்லை என்று தெரிந்து கொள்ளலாம். ஒருவன் குருவிடம் 'சுவாமி இறையருளை எப்படிப் பெறுவது? என்பதை எனக்குக் கூறுங்கள்' என் றான். அதற்கு குரு 'வா, காட்டுகிறேன்' என்று கூறி சீடனை ஒரு குளத்துக்கு அழைத் துச் சென்றார். இருவரும் தண்ணீரில் இறங் கினார்கள். திடீரென்று குரு சீடனின் தலை யைத் தண்ணீரில் அமிழ்த்திப் பிடித்துக் கொண் டார். சிறிது நேரத்துக்குப் பிறகு கையை விட்டார். சீடன் பரிதவித்துப் போய் தலையை மேலே தூக்கினான்.

உடனே குரு சீடனைப் பார்த்து "எப்படி இருந்தது?" என்று கேட்டார். அதற்கு சீடன், சுவாமி உயிரே போவது போல் இருந்தது. பிரா ணன் கி ந்து துடித்தது என்றான்.

இதைக்கேட்ட குரு, எப்போது இறை வனுக்காக உன் உயிர் இப்படித் துடிக்குமோ, அப்போது நீ இறையனுபூதி பெறுவாய். அதற் காக இப்போதிருந்தே இறைவனைச் சிந்தனை யில் நினைத்து தியானத்தில் ஈடுபடு என்றார்.




## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

**சாவகச்சேரி நவீன சந்தையில் மேற்குப் பக்கத்தில் அமையவுள்ள கடைகளை வாடகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல்**

மேற்படி விடயம் தொடர்பான கேள்வி அறிவித்தல் உதயன் பத்திரிகையில் 02.03.2012 ஆம் திகதி பிரசுரிக்கப் பட்டது. இக்கேள்வி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பப் படிவம் பெற்றுக் கொள்ளும் முடிவுத் திகதி 23.03.2012 ஆம் திகதி ஆகும். இம் முடிவுத்திகதி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப் பட்டுள்ளது. எனவே நவீன சந்தைக் கடைகளை வாடகைக்கு விடு வதற்கான மீள் கேள்வி அறிவித்தல் பின்னர் உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி

இ. தேவசகாயம்பிள்ளை
தவிசாளர்,

## வீடு வாடகைக்கு

இல.10 அம்மன் வீதி, கந்தர் மடத்தில் 4 படுக்கை அறைகள், **Attach Bath room** என்பவற்றுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தனியார் நிறுவனங்கள், நிறுவன ஊழியர்களுக்கு மட்டும்.

**தொடர்பு : 077 8574315**

## காணி விற்பனைக்கு

மீசாலை புத்தூர்ச் சந்தியில் (சியாமளா மில் முன்பாக) A-9 வீதியில் 4 பரப்புக் காணி நன்னீர்க் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு:
குமரன் சில்க் சாவகச்சேரி.
T.P: 021 720 1115.

(15958) (45)

## வேலையாள்கள் தேவை

யாழ்நகர் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் பிரபல மொத்த சில்லறை பலசரக்கு வியாபார நிலையத்துக்கு கீழ் வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை

1. சிட்டை எழுதுநர் (பில் கிளாக்)
2. பொதி கட்டுபவர் (சேல்ஸ் மன்)

முன் அனுபவம் விரும்பத்தக்கது.
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி
இல. 344, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 776 8835

(15953) (45)

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை**

(முன்னாள் ஆங்கில ஆசிரியர்- வற்றாப்பளை றோ.க.த.க. பாடசாலை, அச்சுவேலி இடைக்காடு ம.ம. வித்தியாலயம், புத்தூர் அ.மி.த.க. பாடசாலை)

பலாலி தெற்கு சென். ஜேம்ஸ் வயாவிளான் முகவரியில் திருமண உறவால் தடம் பதித்து எண்ணும் எழுத்தும் என இணைந்து வாழ்ந்து நன் மக்கள் அறுவருக்கு முன்னறி தெய்வமாக நல்வழிகாட்டி சீர் சிறப்பாக வாழ்ந்திருந்தீர். நாட்டின் தலை விதியால் நாடு கடந்து சென்று கனடாவில் காலம் நகர்ந்து சென்ற வேளைதனில் கால ஓட்டத்தின் வேகம் முதுமையை எட்டியது. முதுமையின் கொடைகள் நோய் நொடிகளாகி காலனவன் கையில் ஒப்படைக்கப்பட்ட துவோ.

தங்கள் பிரிவினால் துயருறும் மனைவி, பிள்ளைகள், உறவினர்களுடன், சென் ஜேம்ஸ் சன சமூக நிலையத்தினராகிய நாமும் இணைந்து எமது அஞ்சலியை செலுத்துகிறோம்.

பலாலி தெற்கு,
வயாவிளான்.

சென். ஜேம்ஸ் சனசமூக நிலையத்தினர்

(15875) (45)

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிர்காலம் பற்றிய விடயங்களில் நாட்டம் செல்லும். தொழில் ரீதியாக, சிலர் உங்களின் உதவிகள் நாடி வரலாம். பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். மருத்துவச் செலவுகளைத் தவிர்க்க, உடல் நலத்தில் கவனம் அவசியம். உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர், அதை நிறைவேற்றாமல் இழுத்தடிக்கலாம். மறதியால் அவதியுண்டு.

**இடபம்:** புத்திசாலித்தனமாகச் செயற்படும் நாள். ஆதாயகரமான பணவரவுகளை சிலர் மூலம் பெறலாம். வியாபாரிகள் தொழில் விஸ்தரிப்பு விஷயங்களில் அக்கறை காட்டுவர். முக்கிய பிரச்சினை ஒன்றைத் தீர்க்க, சிலரிடம் யோசனை கேட்பீர்கள். நண்பர்களின் பாராட்டுக்களைப் பெறலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும்.

**மிதுனம்:** நினைத்த காரியம் ஒன்றைத் பிற்போட்டு வைத்துவிட்டு, வேறு வேலைகளில் அக்கறை காட்டுவீர்கள். சோர்வு, சோம்பலை விரட்டி புத்துணர்ச்சியுடன் செயற்படுவீர்கள். வெளியூர் பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். சிறிய அளவில் லாபத்தை எதிர்பார்த்து செய்த காரியம் ஒன்றில், அதிக அளவில் லாபம் கிடைக்கலாம். வேலைப்பளு கூடும்.

**கடகம்:** குடும்ப விடயங்களில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள். வேலையாள்கள் கேட்ட உதவிகளை செய்வீர்கள். பழைய நண்பர் ஒருவர் மூலம், புதிய நண்பரின் அறிமுகம் கிட்டும். உங்களின் ஊக்கம், உற்சாகத்தைக் குறைக்கும் அல்லது அதிகரிக்கும் சம்பவங்கள் நடக்கலாம். பல நாள்களாக சந்திக்காத பழைய நண்பர் ஒருவரைச் சந்திக்கலாம். சோம்பல் கூடும்.

**சிங்கம்:** இனம் புரியாத கவலைகள் மனதை ஆள்கொள்ளும் நாள். வீட்டு உபயோகப் பொருள்கள் பழுதாகி செலவுகளை உண்டாக்கலாம். எங்காவது புறப்பட்டுச் செல்லும் நேரத்தில், யாராவது உறவினர்கள் வந்து தொந்தரவு கொடுக்கலாம். குடும்ப உறுப்பினர்கள் வழியில் திடீர் பிரச்சினை ஒன்றைச் சந்திக்கலாம்.

**கன்னி:** உறவினர்கள் சிலருக்கு மனம் உவந்து உதவி செய்வீர்கள். சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள். அண்டை அயலாருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் மறையும். சொத்து விவகாரங்களில் சிறு பிரச்சினைகள் ஏற்படலாம். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். புதிய பொருள்கள் வாங்க நேரிடலாம். கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும்.

**நாளை**

பங்குனி 11 சனிக்கிழமை 24.03.2012
திதி: துதியை பி.ப 12.06 வரை
நட்சத்திரம்: ரேவதி பி.ப 03.07 வரை
சுபநேரம்: 03.15-04.45 வரை,
ராகு காலம்: 09.15- 10.45வரை

**துலாம்:** கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வரவு ஒன்றை எதிர்பார்த்துச் செலவு செய்வீர்கள். வெளியூர்களில் இருந்து வரும் நபர்கள், முக்கியமான தகவல்களைக் கொண்டு வரலாம். சுய தொழில் புரிவோர் கூடுதல் வருவாய் பெறலாம். குறுக்குவழி சிந்தனைகளை விரட்டி, நேர் வழியில் செயற்பட வேண்டும். பெண்கள் விடயங்களில் பட்டும் படாமல் நடக்கவும்.

**விருச்சிகம்:** எந்த வேலையையும் சுணக்கம் இல்லாமல், உடனுக்குடன் செய்து முடிக்க வேண்டும். சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து, பெரிய அளவில் கவலை கொள்வீர்கள். முக்கிய நிகழ்ச்சிகள், கூட்டங்களில் கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கும். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக, மற்றவர்களிடம் உதவி கேட்பீர்கள். திடீர் செலவு நேரும்.

**தனுசு:** நேரம் காலம் பார்க்காமல், கடுமையாக உழைக்க நேரிடலாம். மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். நண்பர்களின் ஆலோசனைகள் கேட்டுச் செயற்பட முற்படுவீர்கள். அவசர தேவைகளுக்காக, சிலரிடம் கடன் வாங்கலாம். சகோதரர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்வது நல்லது.

**மகரம்:** வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள். சாப்பிடக்கூட நேரமில்லாமல், அடுக்கடுக்காக பல வேலைகளைச் செய்யலாம். பழகிய சிலரின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க நேரிடலாம். சில விடயங்களில் எதிர் பார்த்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடிவுக்கு வரலாம்.

**கும்பம்:** பல நாள்களாக, பிற்போட்டு வந்த காரியங்களை இன்று நிறைவேற்ற முற்படுவீர்கள். வீட்டை அலங்கரிக்க அழகுப் பொருள் ஒன்றை வாங்குவீர்கள். வழக்கமான பணிகளில் சிறு தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் சம்பவங்கள் நடக்கலாம். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும்.

**மீனம்:** உறவுகள் வழியில் சுபச்செலவுகள் ஏற்படலாம். காலை நேரத்தில், மனதிற்கு உற்சாகம் தரும் செய்தி ஒன்றைக் கேட்கலாம். சில வேலைகளை தாமதமாக ஆரம்பித்தாலும், சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். வெளியூரில் இருக்கும் ஒருவரை தொடர்பு கொண்டு, முக்கிய விடயமாகப் பேசலாம். அனுகூலமான நாள்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | | | | | | 7 | 5 |
| | | 2 | | 9 | 8 | 1 | | |
| | 5 | 1 | | | 3 | 6 | | |
| 4 | | | | | | 5 | 1 | |
| 5 | 2 | | | | | | 9 | 3 |
| | 3 | 7 | | | | | | 2 |
| | | 9 | 3 | | | 2 | 6 | |
| | | 5 | 6 | 7 | | 4 | | |
| 2 | 6 | | | | | | | 7 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 1 | 2 | 9 | 3 | 8 | 5 | 7 |
| 2 | 9 | 8 | 5 | 1 | 7 | 3 | 4 | 6 |
| 3 | 5 | 7 | 8 | 6 | 4 | 9 | 1 | 2 |
| 1 | 8 | 4 | 9 | 5 | 2 | 7 | 6 | 3 |
| 9 | 2 | 3 | 6 | 7 | 1 | 4 | 8 | 5 |
| 5 | 7 | 6 | 3 | 4 | 8 | 1 | 2 | 9 |
| 8 | 4 | 9 | 7 | 2 | 6 | 5 | 3 | 1 |
| 6 | 3 | 5 | 1 | 8 | 9 | 2 | 7 | 4 |
| 7 | 1 | 2 | 4 | 3 | 5 | 6 | 9 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## தேவை

வேலைக்கு ஆள்கள் தேவை. கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் வரவும்.
வெங்கடேஸ்வரா 125A, 127, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது


நுணாவில் சந்திக்கும் உரும்பிராய்க்குமிடையில் பெறுமதி மிக்க நகைப் பார்சல் ஒன்று தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
தொ.பே. 077 586 6709, 077 2091023


## Specialized Janitorial Services

## ஸ்பெஷலைஸ்ட் ஜனிடோரியல் சுத்திகரிப்பு சேவை

கொழும்பில் அமைந்துள்ள எமது நிறுவனமானது
யாழ். நகரில் இயங்கும்
**மங்களா தளபாட நிறுவனத்தினருடன்**
இணைந்து தனது கிளை நிறுவனத்தை குடாநாட்டு மக்களுக்கான சேவைக்காக
இல. 536/1, கே.கே.எஸ். வீதி, மனோகராச் சந்தியில்
இன்று (23.03.2012) வெள்ளிக்கிழமை கோலாகலமாக ஆரம்பிக்கின்றார்கள்.

குடாநாட்டு மக்களுக்கான
எமது சேவைகள்



1) நிறுவனங்களுக்கான சுத்திகரிப்பு சேவை
2) வீடு, ஹோட்டல் சுத்திகரிப்பு சேவை
3) மாபிள்(Tiles) சுத்திகரிப்பு சேவை
4) அல்ஹபோன் பார்டிஷன் / ஷோ றூம் சுத்திகரிப்பு சேவை
5) Floor Polishing / Vaccine / Carpet Shampoo சேவை
6) Show Room Glass Cleaning

எமது விரைவான சேவையைப் பெற இன்றே நாடுங்கள்

**Specialized Janitorial Services**

இல. 536/1 கே.கே.எஸ். வீதி, மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P: 021 4921108, 0777286069


## மரண அறிவித்தல்

அமரர் கலாநிதி சிவஸ்ரீ

## சபா. மனோகரக் குருக்கள்



யாழ்ப்பாணம், துன்னாலை வடக்கு கரவெட்டியை பிறப்பிடமாகக் கொண்டவரும், மன்னாரை வதிவிடமாகக் கொண்ட வருமான கலாநிதி சிவஸ்ரீ சபா ரட்ணக் குருக்கள் மனோகரக் குருக்கள் ஐயா (14.03.2012) புதன்கிழமை இரவு லண்டனில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஸ்ரீ சபாரட்ணக்குருக்கள் - மீனாட்சி அம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வரும், ரதி அம்மாவின் அன்புக் கணவரும், பூரணானந்த ஈஸ்வரசர்மா, லீலாதேவி ஆகியோரின் அருமை சகோதரனும், கௌராம்பிகை, சச்சிதானந்தக் குருக்கள் ஆகியோரின் மைத்துனரும், சிவரூபசர்மா, குகதாச சர்மா, செல்வமோகன் சர்மா, ஐங்கர சர்மா, கிரிசாந்த சர்மா ஆகியோரின் அன்புத் தந்தையும், பகலவ சர்மா, பிறேமானந்த சர்மா, ராதாலக்ஷ்மி, ராதாமணி, வைஷ்ணவி, ஸ்ரீராஜினி, பானுமதி, ஸ்ரீவித்யாதர்சினி, அன்னபூரணி ஆகியோரின் அன்பு மாமனும், கார்த்திக், பவதாரனி, ஹரிராம், சாய்ராம், கோகுல்ராம், ஐஸ்வர்யா, அட்சயா, செல்வசந்தோஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2012) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, அஞ்சலி நிகழ்வை தொடர்ந்து அவரது புகழுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணியளவில் மன்னார் பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உப்புக்குளம்,
மன்னார்.

(15891) (9,10)

தகவல்:
குடும்பத்தினர்.

## புதுகடை திறப்பு விழா

இல-965 K.K.S வீதியில் இயங்கிய பிரபா மெக்கானிக் சேவிஸ் சென்ரர் தற்போது இல 909/2 K.K.S வீதி தட்டாதெருச்சந்தி ரான்ஸ்போமருக்கு அருகில் ( 23.03.2012) வெள்ளிக்கிழமை இன்று மதியம் 12.00 மணிக்கு புதுப்பொலிவுடன் புதிய இடத்தில் திறந்த வைக்கப்படவுள்ளது என்பதை அன்பர்கள், நண்பர்கள், ஆதர வாளர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும் அறியத்தரு கின்றேன் *ச.பிரபாகரன் (உரிமையாளர்)*

**பிரபா மெக்கானிக் சேவிஸ் சென்ரர்.**

## VACANCIES

**(Urgent Employment)**

**Tilko Jaffna City Hotel** requires

- Steward & Stewardess (Trainees-School leavers)
- Barman (Experience for 2 years)

(Please forward your CV by post or Email)
Tilko Jaffna City Hotel (Pvt) Ltd.
70/6,K.K.S road, Jaffna, Sri Lanka.
Email:tilkojaffna@gmail.com
web: www.cityhoteljaffna.com

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் வருடாந்த பொதுக் கூட்டம் - 2012

பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 15.04.2012 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு சங்கத் தலைவர் திரு. ந. இராஜதேவன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

குறிப்பு: பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் எதிர் வரும் 07.04.2012 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செயலாளர், பழைய மாணவர் சங்கம், யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

உ.தவபாலன்,
செயலாளர்.

ந. இராஜதேவன்,
தலைவர்.

## 31 ஆம் நாள் நினைவு



கடந்த (22.02.2012) புதன்கிழமை
சிவபதமடைந்த எமது
குடும்பத்தலைவி
அமரர் திருமதி **செல்வரட்ணம் அருந்தவம்**
அவர்களின் வீட்டுக்கிருத்திய
நிகழ்வுகள் இன்று (23.03.2012)
வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறவிருக்கும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இல 12/9, மாரியம்மன் ஒழுங்கை,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.
T.P: 0776176413, 0217900788 — குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



*திருமதி பரமானந்தன் பரமேஸ்வரி*

*(ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி)*

கரந்தனைப் பிறப்பிடமாகவும், கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும், தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான திருமதி பரமானந்தன் பரமேஸ்வரி நேற்றுமுன்தினம் (21.03.2012) புதன்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவ குரு-செல்லமா தம்பதியரின் அன்பு மகளும், கந்தையா - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற கந்தையா பரமானந்தனின் (சிறாப்பர், யாழ். கச்சேரி) அன்பு மனைவியும், சியாமளா (கனடா), மஞ்சுளா, இராகுலன் (ஜேர்மனி), மிதிலா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் விஜய ரெட்ணம், ஸ்கந்தராஜா (கனடா) ஆகியோரின் மாமியும், சாயினி (கனடா), கார்த்திக் (பரியோவான் கல்லூரி), வர்ஷினி, நிலாணி (கனடா) ஆகி யோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற தவமணி மற்றும் பரமலிங்கம், இராஜேஸ்வரி, தனேஸ்வரி, ஞானேஸ்வரி, ஞானேஸ்வரன் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (25.03.2012) கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*120/4, திருவள்ளுவர் ஒழுங்கை,*
*அரசடி வீதி, கந்தர்மடம்.*

தகவல்:
மஞ்சுளா (மகள்),
விஜயரெட்ணம் (மருமகன்)

## போதையில் இடையூறு மூவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு முன்பாக மது போதையில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த 3 பேருக்கு யாழ். நீதிமன்றம் 9ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

யாழ். பொலிஸார் சந்தேக நபர்கள் மூவரையும் கைது செய்து யாழ். நீதிமன்றில் நீதிவான் மா. கணேசராஜா முன்னிலையில் நேற்று முற்படுத்தினர். மூவரும் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 3ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

(ங-4)

## *31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்*

தோற்றம்
12
06
1933



மறைவு
22
02
2012

அமரர்

**பொன்னையா தங்கச்சிப்பிள்ளை**

*அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23.03.2012) வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.*

54/12, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம். — பிள்ளைகள்.

## வீடு, காணி விற்பனைக்கு

யாழ்நகரில் பலாலி வீதி, 2ம் ஒழுங்கையில் அமைந்துள்ள 8ம் இலக்க வீடு கிணற்றுடன் குளி 6 விஸ்தீரணமுடையது விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-0772085402

## விற்பனைக்கு

45 நாள் நிரம்பிய பூச்சி நீக்கிய நல்ல இன பொம்மனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக் குண்டு (கறுப்பு, கறுப்பு பிறவுண்)

தொடர்புகளுக்கு: 0776062747

## கார் விற்பனைக்கு

Toyota (Allion) 240, Car விற்பனைக்கு. 2005 Model, Immuculate Conception, Silver Metalic, Reverse Camera, TV, DVD, Forlight, Tear Interian.

தொடர்புகளுக்கு: 0787484953, 0774809830

## வாகனம் விற்பனைக்கு



ஆங்கில இலக்கம்,
டூவல்A/C, புல்சீட் செட், பவர் ஸ்டியரிங், மெனுவல், 5 கதவு, LH-113, ஏலோவில், பவர் சட்டர், Rs 40/- (Negosiable)

**தொ.இல. 0774722522.**

## NUMBER PLATE தொலைந்துவிட்டது

NP.JI.2157 எனும் இலக்க மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு திருநெல்வேலி - அராலிப் பகுதியில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் தந்து உதவவும்.

தொடர்புகட்கு : 075 0376326

## தேவை

முல்லைத்தீவு உணவகத்துக்கு சமையல்காரர்கள், உதவியாள்கள், வெயிற்றர் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 5360958

## வாடகைக்கு

முல்லைத்தீவு நகரப் பகுதியில் உணவகம் நடத்தக் கூடியதும் ஏஜென்சி நடத்தக் கூடியதுமான இரண்டு கடைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 5360958

## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி.அன்ரன்.ஜோர்ச் தர்ஷினி அவர்களின் அன்புத் தந்தை

**தருமு அருளானந்தம்**

அவர்களின் பிரிவால் துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். பிரதேச செயலக நலன்புரிசங்கம்,
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



சிவஸ்ரீ
சபா.மனோகரக் குருக்கள்
(சிவாச்சாரிய திலகம், சமாதான நீதிவான்)

**உமது பிரிவுத்துயரினால் வாடும் உமது குடும்பத்தினர், உறவினர்கள், சுற்றத்தார், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமதும் எமது குடும்பத்தினரதும் ஆழ்ந்த அன்பான இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

*பிரம்மஸ்ரீ சு. வரதகுமார்சர்மா*
*குடும்பத்தினர்.*
*கோயிற்குளம் மன்னார்.*
*பிரம்மஸ்ரீ இ. ரமணிதரக் குருக்கள் குடும்பத்தினர்.*
*யாழ்ப்பாணம் .*

(15894) (45)

## மரண அறிவித்தல்கள்



*ஆறுமுகம் தர்மலிங்கம்*

*(யாழூர் துரை - எழுத்தாளர், நாடக இயக்குனர்)*

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் சென்னையை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தர்மலிங்கம் (யாழூர்துரை) (21.03.2012) புதன்கிழமை சென்னையில் (இந்தியா) காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சிவகாமி தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்ற செல்லம்மா கதிர்காமனின் அன்புச் சகோதரரும் ராஜென், ரவீந்திரன், மங்கையர்க்கரசி உதயன், அன்புக்கரசி சிவா ஆகியோரின் அருமை மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.03.2012) வியாழக்கிழமை சென்னையில் நடைபெற்றது

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
இந்தியா (மங்கை உதயன்) - 00917639184888,
பிரான்ஸ் (அன்பு சிவா) - 0033698386364),
பிரான்ஸ் (ரவி) - 0033651459795,
பிரான்ஸ் (ராஜென்) - 00336996661915.

தகவல்:
குடும்பத்தினர்



*செல்லையா யோகநாதன்*

*(நாதன் மாமா - முன்னாள் பிரபல லொறி உரிமையாளரும், ரயர்க்கடை முன்னாள் உரிமையாளரும்)*

நல்லூரைப் பிறப்பிடமாகவும், நவாலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா யோகநாதன் நேற்று (22.03.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - தையல்நாயகி தம்பதியரின் இளைய புதல்வனும், மேரி இம்மா குலதாவின் அன்புக் கணவரும், உமாதேவி (லண்டன்), உதயகுமாரி, உஷாந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கோபிநாத் சிங் (லண்டன்), சாய்பாலன் (டோகா), சுஜந்தன் (கனடா) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற சிவானந்தசோதி மற்றும் சரஸ்வதி, விஜயரட்ணம், குணரத்தினம், செல்வராசாத்தி (கனடா), செல்வமலர், நேசமணி, கனகராணி, சகுந்தலா ஆகியோரின் சகோதரனும், கோபிதா, கவீனா, சிவனுயா, தனிகா, கார்த்திகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2012) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2.30 மணியளவில் ஆனைக்கோட்டை, கரையாம்பிட்டி இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நவாலி கிழக்கு,*
*மானிப்பாய்.*

தகவல்:
குடும்பத்தினர்

# பண்டாரிக்குளம் விபுலானந்தா சம்பியன்

**டினேஸ் அதிரடியாக ஆடி, 73 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொடுக்க, கஜன், தர்சுதன் ஆகியோர் இலக்குவேட்டை நடத்த 5 இலக்குகள் வித்தியாசத்தில் வென்றது பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரி.**

வவுனியா, மார்ச் 23

'டயலொக்' நிறுவனத்தின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கு இடையில் முதன் முறையாக இடம்பெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரி அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரி அணியை எதிர்த்து கோவிற்குளம் இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கோவிற்குளம் இந்துக் கல்லூரி அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடி 41 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் திருப்பிரியன் ஒரு சிக்ஸர், 4 பவுண்டரிகள் அடங்கலாக 57 ஓட்டங்களையும், கிரிதரன் 6 பவுண்டரிகள் அடங்கலாக 37 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் பண்டாரிக்குளம் விபுலாணந்தாக் கல்லூரி சார்பாக கஜன், தர்சுதன் ஆகியோர் 7 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 3 இலக்குகளை வீழ்த்தினர்.

194 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரி அணி 41 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்கினை இழந்து 195 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் டினேஸ் ஆட்டம் இழக்காமல் 11 பவுண்டரிகள் அடங்கலாக 73 ஓட்டங்களைத் தனது அணி சார்பாகப் பெற்றார்.

பந்து வீச்சில் கோவிற்குளம் இந்துக்கல்லூரி அணி சார்பாக பானுஷன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 3 இலக்கினை வீழ்த்தினார்.

ஆட்ட நாயகனாக பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரி அணி வீரர் டினேஸும் ஆட்டத் தொடர் நாயகனாக கோவிற்குளம் இந்துக் கல்லூரி அணிவீரன் மனோஸும் தெரிவு செய்யப்பட்டனர்.

(ங-400-23)

# 3 தங்கப் பதக்கங்கள்

## கிடைத்தன வடமாகாணத்துக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 23

இலங்கை மெய்வன்மைச் சம்மேளனத்தின் அனுசரணையுடன் வென்னப்புவ பிரதேச செயலகப்பிரிவு நடத்திய தேசிய மெய்வன்மைப் போட்டியில் யாழ். மாவட்டம் ஒரு வெள்ளி பதக்கத்தினையும், வவுனியா மாவட்டம் 3 தங்கப் பதக்கம், இரண்டு வெண்கலப்பதக்கத்தினையும் பெற்றுள்ளன.

சிரேஸ்ட பிரிவு பெண்களுக்கான போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.தர்சிகா குண்டெறிதல் போட்டியில் 9.90 மீற்றர் தூரத்தினை எறிந்து முதலாம் இடத்தையும், தட்டெறிதல் போட்டியில் 30.18 மீற்றர் தூரத்தை எறிந்து முதலாம் இடத்தையும், பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் பங்குபற்றி 29.4 செக்கன்களை ஓடி முடித்து மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

சிரேஸ்ட பிரிவு திறந்த மட்டப் போட்டியில் பெண்கள் பிரிவில் தட்டெறிதல் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எ.அனுஷா 35.98 மீற்றரினை எறிந்து முதலாம் இடத்தையும் குண்டெறிதல் போட்டியில் 9.54 மீற்றர் தூரத்தினை எறிந்து மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த வி.ஹரிகரன் 36.16 மீற்றர் தூரம் எறிந்து மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளார். (ங-23)

# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 23

கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான மென்பந்துக் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:

ஆண் பிரிவு

முதலாமிடம்-விவேகானந்த நகர் - கிருஸ்ணபாரதி விளையாட்டுக் கழகம், இரண்டாமிடம்-கிளிநொச்சி மத்தி தீரர் விளையாட்டுக் கழகம்.

பெண்கள் பிரிவு

முதலாமிடம்-கனகபுரம் விளையாட்டுக் கழகம், இரண்டாமிடம்-உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகம்.

(ங-23)

# முதன்முதலாக....



இலங்கை 'ரக்பி' பாடசாலைச் சங்கம் நடத்திய 2012 ஆண்டுக்கான 'ரக்பி' போட்டி கடந்த வாரம் காலி, ரத்ஹம பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது. மேற்படி போட்டியில் முதல்முறையாக யாழ். மாவட்டத்திலிருந்து பங்கு பற்றிய ஊர்காவற்துறை சென்.அன்ரனிஸ் கல்லூரி அணி வீரர்கள் கல்லூரி அதிபர் பொறுப்பாசிரியருடன். (ங-23)

# மஞ்சிக் கிண்ணம் கோப்பாய் ஐக்கியத்துக்கு

வலி-வடக்கு மார்ச் 23

கோப்பாய், நல்லூர், தீவகப் பிரதேசங்களுக்கு இடையேயான மஞ்சி வெற்றிக் கிண்ணத்திற்கான யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் ஆதரவுடன் இடம் பெற்ற பெண்களுக்கான இறுதிப் போட்டியில் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழகம் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இறுதிப் போட்டியில் முதல் இரண்டு சுற்றுக்களையும் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகம் 25:17, 25:20 புள்ளிகள் என்ற அடிப்படையில் கைப்பற்றி நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை வென்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

(ங-86)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் கைதடி தென் கிழக்கு விநாயர் சன சமூக நிலையம் நடத்தி வரும் தென்மராட்சி பிரதேசத்துக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு நிலைய முன்றலில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் பங்கு கொள்ளும் அணிகளின் விவரங்கள் வருமாறு:

கைதடி மத்தி உதயசூரியன் (ஏ பிரிவு) எதிர் கைதடி வளர்மதி (பி பிரிவு).

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் தலைவர் சண்முகலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாவட்ட தாச்சிச் சங்கத்தின் செயலாளர் ஜினதாஸ், பொருளாளர் ஆனந்தஜெய ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ங-23)

***

யாழ்ப்பாணம் ,மார்ச் 23

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கிடையே நடத்தும் 11 பேர் பங்கு கொள்ளும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது. அதில் இன்று வெள்ளிக் கிழமை இடம் பெறும் ஆட்டத்தில் பங்கு கொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:

மாலை 4 மணி

ஆதிசக்கி விளையாட்டுக்கழகம் எதிர் உடுப்பிட்டியுத் விளையாட்டுக்கழகம்.

(ங-23)

# தென்மராட்சி பிரதேச கிரிக்கெட் போட்டிகள்

தென்மராட்சி மார்ச் 23

தென்மராட்சி பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான குழுநிலைப் போட்டிகளில் 5 பந்து பரிமாற்றங்களை கொண்ட 6 பேர் பங்கு பற்றும் மென்பந்து கிரிக்கெட் போட்டி நாளையும் நாளை மறுதினமும் சாவகச்சேரி நகர சபை பொதுவிளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி போட்டிக்கான போட்டி நிரல் தயாரிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக் கிழமை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது என்று பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

(ங-9)

# விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம் ,மார்ச் 23

நல்லூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் எதிர் வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை, 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரண்டு தினங்களும் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ங-7)

# கரப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 23

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான 15,17,19 வயதுப்பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு மல்லாகம் மாகாவித்தியாலயத்திலும் 15,17,19 வயது பிரிவு கரப்பந்தாட்டப் போட்டிகள் நாளை சனிக்கிழமை மல்லாகம் மகா வித்தியாலயத்திலும் இடம் பெறவுள்ளன. (ங-23)

# வடமாகாண மரதன் ஓட்டம்; வென்றோர் விவரம்

யாழ்ப்பாணம் ,மார்ச் 23

வடமாகாண ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டப் போட்டி கடந்த வாரம் யாழ். மாவட்டத்தில் இடம் பெற்றது .

இதில் ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டப் போட்டியில் முதல் 10 இடங்களையும் பெற்ற வீர, வீராங்கனைகளின் பெயர் விபரங்கள் வருமாறு:

ஆண்கள் பிரிவு

(33 கிலோமீற்றர் தூரம்)

முதலாமிடம்-நவநீதன்-வவுனியா மாவட்டம் (2 மணித்தியாலம் 8 நிமிடம்),

இரண்டாமிடம் -தேவராஜன்- முல்லைத்தீவு மாவட்டம் (2 மணித்தியாலம் 12 நிமிடம்),

மூன்றாமிடம்-எஸ்.கணேஸ்வரன்-யாழ்.மாவட்டம் (2மணித்தியாலம் 16 நிமிடம்),

நான்காமிடம்-கே.பிரதீபன் -மன்னார் மாவட்டம் (2 மணித்தியாலம் 21 நிமிடம்),

ஐந்தாமிடம்-எஸ்.நிமோஸ்-கிளிநொச்சி மாவட்டம் (2 மணித்தியாலம் 21 நிமிடம்),

ஆறாமிடம்- ஏ.சசிகரன்-வவுனியா மாவட்டம் (2 மணித்தியாலம் 23 நிமிடம்),

ஏழாமிடம் -ஜே.எம்.எஸ். என்.குமார - வவுனியா மாவட்டம் (2 மணித்தியாலம் 30 நிமிடம்),

எட்டாமிடம்-கெ.ஜெயந்தன்-யாழ். மாவட்டம் (2 மணித்தியாலம் 30 நிமிடம்),

ஒன்பதாமிடம்-வி.லோகரதன் - கிளிநொச்சி மாவட்டம் (2 மணித்தியாலம் 32 நிமிடம்),

பத்தாமிடம்- ஆர்.சாந்தன் -வவுனியா மாவட்டம் (2 மணித்தியாலம் 33 நிமிடம் ).

***





ஆண்கள் பிரிவில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்.





பெண்கள் பிரிவில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்.

பெண்கள் பிரிவு

(33 கிலோமீற்றர் தூரம்)

முதலாமிடம்-ஆர்.சாளினி - வவுனியா மாவட்டம் (2 மணித்தியாலம் 59 நிமிடம்),

இரண்டாமிடம்-ஜெ.மரியகொறற்றி - யாழ். மாவட்டம் (3 மணித்தியாலம்),

மூன்றாமிடம்- எஸ்.கேமா - முல்லைத்தீவு மாவட்டம் (3 மணித்தியாலம் 6 நிமிடம்),

நான்காமிடம் -பி.விமலாதேவி- கிளிநொச்சி மாட்டம் (3மணித்தியாலம் 17 நிமிடம்),

ஐந்தாமிடம் -என்.சுமதி- யாழ்ப்பாண மாவட்டம் (3 மணித்தியாலம் 18 நிமிடம்),

ஆறாமிடம் -எம்.வினோயினி -வவுனியா மாவட்டம் (3 மணித்தியாலம் 20 நிமிடம்),

ஏழாமிடம்-என்.தயாளினி- முல்லலைத்தீவு மாவட்டம் (3 மணித்தியாலம் 32 நிமிடம்),

எட்டாமிடம்-ஹினோபா- யாழ்ப்பாண மாவட்டம் (3 மணித்தியாலம் 45 நிமிடம்),

ஒன்பதாமிடம்-கே.ஜனுஷா -யாழ். மாவட்டம் (3 மணித்தியாலம் 51 நிமிடம்),

பத்தாமிடம்-எஸ்.மிதுனா- முல்லைத்தீவு மாவட்டம் ( 4 மணித்தியாலம் 2 நிமிடம்).

(ங-23)

# மயிரிழை வெற்றி






ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரின் பரபரப்பான இறுதியாட்டத்தில் இரண்டு ஓட்டங்களால் பங்களாதேஷை வீழ்த்தி பாகிஸ்தான் வெற்றிக் கிண்ணத்தை தன்வசமாக்கியது. இந்தப் போட்டி மிர்பூரில் நேற்று பகலிரவு ஆட்டமாக இடம்பெற்றது. இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகள் நேற்று மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய பாகிஸ்தான் அணி ஆரம்பத்திலிருந்து சீரான இடைவெளியில் இலக்கினை பறிகொடுத்து வந்தது. பங்களாதேஷ் பிரதமர் ஷேக் அல் ஹசீனா நேரடியாக மைதானத்திலிருந்து ஆட்டத்தைப் பார்வையிட்டார்.

இந்த எழுச்சி காரணமாக பங்களாதேஷ் வீரர்கள் அடிக்கடி நடுவர்களிடம் முறையீடு செய்து கொண்டிருந்தனர். இதன் காரணமாக பாகிஸ்தான் வீரர்கள் ஓட்டம் குவிக்க முடியாமல் திணறியதுடன் இலக்குகளையும் இழந்தனர். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மொஹமட் ஹபீஸ் மாத்திரம் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி பாகிஸ்தானின் இருப்பை நிலைப்படுத்தினார். ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற 4 இலக்குகளை 70 ஓட்டங்களுக்கு இழந்திருந்தது. உமர் அக்மல், ஹமாட் அஷாம் இணைந்து அணியை 172 பந்துகளில் 100 ஓட்டங்களைத் தாண்ட வைத்தனர். 59 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்ட நிலையில் அஷாம் ஆட்டமிழந்தார். அவர் ஆட்டமிழந்த அடுத்த பந்து பரிமாற்றத்திலேயே உமர் அக்மலும் ஆட்டமிழக்க பாகிஸ்தான் மீண்டும் இக்கட்டான நிலைக்குச் சென்றது.

துடுப்பாட்ட பவர்பிளேயும் தெரிவு செய்யப்பட அப்பிரிடியும் களமிறங்கினார். அப்ரிடி, அஹமட் இணைந்து துடுப்பாட்ட பவர்பிளேயை உரியமுறையில் பயன்படுத்தினர். வேகமாக துடுப்பாட்ட பவர்பிளேயின் 4 பந்து பரிமாற்றங்களிலேயே 36 ஓட்டங்கள் விளாசப்பட்ட போதும் இறுதிப் பந்து பரிமாற்றத்தை சகிப் அல்ஹசன் ஓட்டமெதனையும் வழங்காது வீசி முடித்தார்.

துடுப்பாட்ட பவர்பிளே முடிவடைந்த அடுத்தடுத்த பந்து பரிமாற்றங்களிலேயே அப்ரிடி ஆட்டமிழந்தார். அதன் பின்னர் பின்வரிசை வீரர்கள் பெரியளவில் சாதிக்காத போதும் அஹமட் தனித்து நின்று இறுதி வரையில் போராடினார். இவரது போராட்டம் காரணமாக பாகிஸ்தான் அணி 50 பந்து பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 236 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய பங்களாதேஷ் அணிக்கு தமிம் இக்பால், நஷிமுதீன் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது. அளவான அதிரடியுடனேயே ஆட்டத்தை ஆரம்பித்தது. தமிம் இக்பால் மாத்திரம் அதிரடியாக துடுப்பெடுத்தாடி 47 பந்துகளில் தனது 23 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். அத்துடன் ஆசியக் கிண்ணத் தொடரின் சகல ஆட்டங்களிலும் அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

சிறப்பாகச் சென்று கொண்டிருந்த பங்களாதேஷ் அணி பந்து வீச்சு பவர்பிளே எடுக்கப்பட்டதும் தடுமாறத் தொடங்கியது. முதலாவது இலக்குக்காக 68 ஓட்டங்களைப் பகிர்ந்த நிலையில் முதலாவது இலக்கினை இழந்தது. அடுத்த இலக்கினை அடுத்த பந்து பரிமாற்றத்திலேயே இழக்க பங்களாதேஷ் அணி நெருக்கடிக்குள்ளாகியது. இறுதியில் பந்து வீச்சு பவர்பிளேயில் 2 இலக்குகளை இழந்து 8 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. தமிம் இக்பால் சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த நிலையில் உமர்குல்லின் பந்து வீச்சில் யுனிஸின் சிறப்பான பிடியெடுப்பில் ஆட்டமிழக்க பங்களாதேஷின் வெற்றி கேள்விக் குறியானது. அதன் பின்னர் சகிப் அல் ஹசன், நஷீர் ஹுஸைன் இணைந்து பலமான இணைப்பாட்டத்தை அமைத்தனர். எனினும் சகிப் அல்ஹசன் 68 ஓட்டங்களுடனும், நஷீர் ஹுசைன் 28 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க வெற்றி பாகிஸ்தான் பக்கம் திரும்பியது.

இறுதியில் 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் பங்களாதேஷ் அணி 234 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதனால் 2 ஓட்டங்களால் வெற்றியீட்டிய பாகிஸ்தான் அணி ஆசியக் கிண்ணத்தை சுவீகரித்தது. ஆட்டநாயகனாக சயீட் அப்ரிடியும், ஆட்டத் தொடர்நாயகனாக சகிப் அல்ஹசனும் தெரிவானர்கள். (5)

## பாகிஸ்தான் எதிர் பங்களாதேஷ்

மிர்பூர் மைதானம்

பாகிஸ்தான் 236/9(50) பங்களாதேஷ் 234/8 (50)

பாகிஸ்தான் அணிக்கு 2 ஓட்டங்களால் வெற்றி

ஆட்ட நாயகன்: சயிட் அப்ரிடி

### பாகிஸ்தான்

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| மொஹமட் ஹபீஸ் | c ஹுஸைன் b அப்துர் ரசாக் | 40 | 87 | 4 | 0 |
| நசீர் ஜேம்ஸ்ட் | c முகதுல்லா b மோட்ரசா | 9 | 8 | 2 | 0 |
| யூனிஸ்கான் | lbw ஹுஸைன் | 1 | 5 | 0 | 0 |
| மிஸ்பாஉல்கக் | runout நசிர் ஹுசைன் | 13 | 23 | 1 | 0 |
| உமார் அக்மல் | c ரகிம் b முகதுல்லா | 30 | 45 | 0 | 1 |
| ஹமட் அசாம் | c&b சஹீப் அல்ஹசன் | 30 | 37 | 3 | 1 |
| சயிட் அப்ரிடி | c நசிர்ஹுசைன் b அல்ஹசன் | 32 | 22 | 4 | 1 |
| அகமட் | (ஆட்டமிழக்காமல்) | 46 | 52 | 4 | 0 |
| உமர்குல் | c அல்ஹுசைன் b மோட்ரசா | 4 | 6 | 0 | 0 |
| சைட் அஜ்மல் | b அப்துர் ரசாக் | 4 | 7 | 0 | 0 |
| ஐசஸ் சீமா | (ஆட்டமிழக்காமல்) | 9 | 11 | 1 | 0 |
| உதிரிகள் | | 18 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 236 | | | |

இலக்கு இழப்பு: 1-16, 2-19, 3-55, 4-70, 5-129, 6-133, 7-178, 8-199, 206

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| மோட் ரசா | 10 | 0 | 48 | 2 |
| நஜ்முல் ஹுசைன் | 8 | 1 | 36 | 1 |
| அப்துர் ரசாக் | 10 | 3 | 26 | 2 |
| சஹ்தட் ஹுசைன் | 9 | 0 | 63 | 0 |
| சகிப் அல்ஹசைன் | 10 | 1 | 39 | 2 |
| மஹமதுல்லா | 3 | 0 | 14 | 1 |

### பங்களாதேஷ்

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| தமீம் இக்பால் | c யுனிஸ் b உமர்குல் | 60 | 68 | 8 | 0 |
| நசீமுடின் | c யுனிஸ் b சயிட்அப்ரிடி | 16 | 52 | 0 | 0 |
| யாஹூருல் இஸ்லாம் | c யுனிஸ் b சயிட்அஜ்மல் | 0 | 5 | 0 | 0 |
| நசீர் ஹுசைன் | c மிஸ்பா உல்ஹக் b உமர்குல் | 28 | 63 | 1 | 0 |
| சஹீப் அல்ஹசன் | b ஐசஸ் சீமா | 68 | 72 | 7 | 1 |
| முஸ்பிகிர் ரகிம் | cநசீர் ஜேம்ஸ் b ஐசஸ் சீமா | 10 | 8 | 1 | 0 |
| முகமதுல்லா | (ஆட்டமிழக்காமல்) | 17 | 16 | 1 | 0 |
| மோட் ரசா | cநசீர் ஜேம்ஸ் b சைட்அஜ்மல் | 18 | 9 | 2 | 0 |
| அப்துர் ரசாக் | b ஐசஸ் சீமா | 6 | 8 | 0 | 0 |
| சஹ்தட் ஹுசைன் | (ஆட்டமிழக்காமல்) | 0 | 1 | 0 | 0 |
| உதிரிகள் | | 11 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 234 | | | |

இலக்கு இழப்பு: 1-68, 2-68, 3-81, 4-170 5-179, 6-190, 7-218, 8-233.

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| மொஹமட் ஹபீஸ் | 10 | 0 | 30 | 0 |
| உமர்குல் | 10 | 2 | 65 | 2 |
| சயீட் அஜ்மல் | 10 | 2 | 40 | 2 |
| சயீட் அப்ரிடி | 10 | 1 | 28 | 1 |
| ஐசஸ்ஷீமா | 7 | 0 | 46 | 3 |
| ஹமாட் அசாம் | 3 | 0 | 20 | 0 |

பாராட்டி வாழ்த்துகின்றோம்



முன்னாள் பருத்தித்துறை
பிரதேச செயலாளரும்
தற்போதய எமது
கரவெட்டிப் பிரதேச
செயலாளரும் எமது
குடும்ப நண்பருமாகிய
உயர்திரு.
இ.வரதீஸ்வரன்
அவர்கள் இலங்கை
நிர்வாக சேவையின்
அதியுயர்
சிறப்புத் தரத்திற்குப்
பதவி உயர்த்தப் பட்டமையை இட்டும்
மேன் மேலும் அவர் பல பட்டங்களையும்
பதவி உயர்வுகளையும் பெறவேண்டும்
என்று வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
திரு.வன்னிமரம் அரவிந்தன்
திருமதி அரவிந்தன் சுமீரா
(B.A.(HONS)2nd Upper)
Political science special M.A(R) Pubilice Ad.
திரு. வே.வன்னிமரம் - குடும்பம்
(கிராம உத்தியோகத்தர்)

சேவைநலன் பாராட்டு



திரு.கதிரித்தம்பி வடிவேலுநாதன்
(பாதுகாப்பு உத்தியோகத்தர் - இலங்கை வங்கி கோப்பாய்)

மனமுவந்தேற்ற வங்கிப் பணியில்
மகிழ்வுடன் பல வருடங் கடந்து
தனியொரு கிளையாம் கோப்பாயினை
தலை நிமிர்த்திய வேளையிலே
அகவை "அறுபது" ஓய்வை அழைக்க
அன்புடன் விடைபெறும் சேவையாளனே
நன்றியுடன் நற்சேவை பாராட்டி
வாழ்த்துகின்றோம் வாழ்க நீடுழி!

இலங்கை வங்கி
கோப்பாய்.

முகாமையாளரும்
ஊழியர்களும்.

**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

அரச, தனியார் அலுவலர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், இளைஞர், யுவதிகளுக்கான

**சனி ஞாயிறு புதிய பிரிவு ஆரம்பம் 24.3.2012**

காலம் : 1 - 3 மாதம் பயிற்சிக்கட்டணம் : ரூபா 3000/-

182, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் - காலை 8 - 9
NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி - காலை 10 - 11

**பாடசாலை மாணவர்களின் சனி, ஞாயிறு பிரிவு**

NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி – மாலை 1 – 2
182, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் – மாலை 3 – 4

அனுமதி கட்டணம் : ரூபா 500/- மாதம் : ரூபா 500/- மட்டும்
(அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முதலில் வருவோருக்கே அனுமதிக்கு முன்னுரிமை)

நாளை மட்டும் 24.03.2012 பயிற்சியில் சேரும் அனைவருக்கும் Complete English Book (Spoken/Grammar) இலவசம்

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

## புனர்வாழ்வு குறித்து கவனம்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வீரர் மொஹமட் அமீரின் புனர்வாழ்வு குறித்து கட்டாயம் கவனம் செலுத்த வேண்டுமென சர்வதேச கிரிக்கெட் பேரவையின் நிறைவேற்று அதிகாரி வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் பேரவையால் விதிக்கப்பட்டுள்ள போட்டித் தடைக் காலத்தை குறைப்பது குறித்து அவர் அக்கறை செலுத்தக் கூடாதென ஹரூண் லோஹாட் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-5)

**மாபிள் பதித்தல்**

மத்திய கிழக்கு நாட்டில் 10 வருட முன் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் விருப்பத்துக்கு ஏற்ற வகையில் குறுகிய காலத்தில் சிறந்த முறையில் மாபிள் பதித்துக் கொடுக்கப்படும்.

தொடர்புக்கு : பாபு - 0773824871



**சுதன் ரான்ஸ்போட் சேவிஸ்**

236, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் தொ.பே: 0776122876, 0776193629, 0215100537
96, சென்றல் றோட், கொழும்பு-12 தொ.பே: 0776122876, 0770257129, 0112434134.

யாழ் ⇆ கிளிநொச்சி ⇆ முல்லைத்தீவு ⇆ கொழும்பு

★ உங்கள் பொருள்களுக்கு 100% பாதுகாப்பு
★ அதிகுறைந்த விலைக் கட்டணம்
★ திருப்பி அனுப்பும் பொருள்களுக்கு முற்றிலும் இலவசம்
★ உங்கள் இடம் நாடி அதிவேகமாக வழங்கப்படும் சேவை

சுதன் ரான்ஸ்போட் சேவை மட்டுமே....!



## 3 கோடி

இந்திய கிரிக்கெட் அணியின் இளம் வீரரான ஹோக்லி சமீப காலமாக சிறப்பாக விளையாடி வருகிறார். கடைசியாக ஹோக்லி ஆடிய 4 இன்னிங்சில் 3 சதம் அடித்து அசத்தியுள்ளார். அதிலும் ஆஸ்திரேலியாவில் நடந்த முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் ஆட்டத்தில் இலங்கைக்கு எதிராக 133 ஓட்டங்களும், ஆசிய கிண்ணத் தொடரில் பாகிஸ்தானுக்கு எதிராக 183 ஓட்டங்களும் குவித்தார்.

இதனையடுத்து அவருக்கு பாராட்டுகள் குவிந்த வண்ணம் உள்ளன. அடுத்தடுத்து சிறப்பாக செயற்பட்டதை தொடர்ந்து அவரது விளம்பர மார்க்கெட்டும் எகிறியுள்ளது.

கடந்த ஆண்டில் 3 பிராண்டுகளுக்கு ரூ.1 கோடி அளவில் ஒப்பந்தம் செய்யப்பட்ட ஹோக்லி தற்போது ஒரு பிராண்டிற்கு ரூ.3 கோடிக்கு ஒப்பந்தமாக உள்ளார் (5)

**பணிநிலை வெற்றிடம்**

டைசைனிங் (பெண்கள்)
டைசைனிங் (பழக விரும்புபவர்கள்)
ஸ்கிறீன் பிறிண்டிங் (அனுபவம் உள்ளவர்கள்)

**நேர்முகத்தேர்வு :**
**24.03.2012 சனிக்கிழமை,**
**முற்பகல் 09.00 மணி - 02.00 மணிவரை**
(சுயவிபரக்கோவையுடன் சமூகமளிக்கவும்)

ANDRA Digital Image
6D, Uppumadam Junction, K.K.S.Road, Kondavil.
021 7201266 , 0776622981



**சாதனை நாயகனை வாழ்த்துகின்றோம்**

எமது வித்தியாலய கணித பாட ஆசிரியரான திரு.F.அருட்செல்வன் அவர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சையில் (SLEAS2011)சித்தியடைந்துள்ளதுடன் சிறப்பாக நுண்ணறிவுப் பரீட்சையில் 92 புள்ளியைப் பெற்றமையை இட்டு அவரை வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல உயர்வுகளைப் பெற உளமார வாழ்த்துகின்றோம்.

மு/பாரதி வித்தியாலய
அதிபர், ஆசிரியர், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்

**ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா**



ஆலோசனைகளுக்கு,
யாழ்ப்பாண மக்களின் அபிமானத்தை வென்ற
திசைகாட்டி
(பிறைவேட்) லிமிட்டெட்
(PV82703)
தற்போது **கொழும்பில்.**
தலைமைக்காரியாலயம், 37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 2219016
Web: www.thisaikaddi.lk, email: thisaikaddi@sltnet.lk
கிளைகள்: 23, 1/3, மகேஸ்வரி ஒழுங்கை, கொழும்பு 06.
(மு.ப.9.00 - பி.ப.5.30) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட பின் வரவும்.
தொலைபேசி: 0112366925, 0756438553
115A, இரத்னபுரம் வீதி, கிளிநொச்சி.
தொலைபேசி: 021 2285544
மெல்போன் அவுஸ்திரேலியா Land Phone No: 0061390437100

**ஷாம்சன் இங்கிலீஷ் - 3 மாத பயிற்சிநெறி**

எந்தவொரு குழந்தையும் 2 தொடக்கம் 4 வயதுக்குள் தன் தாய் மொழியைப் பேசப் பழகிக்கொள்கிறது. தமிழ்க் குழந்தைகள் தமிழைப் பேசப்பழகுகின்றன. ஆங்கிலக் குழந்தைகள் ஆங்கிலத்தைப் பேசப்பழகுகின்றன. 2 வருடத்தில் ஒரு குழந்தை செய்யும் காரியத்தை ஏன் இன்று வரை உங்களால் செய்ய முடியாமல் இருக்கிறது.

தவறான வழியில் ஆங்கிலத்தைக் கற்றுக்கொண்டதனாலேயே அது உங்களுக்கு கடினமாக இருக்கின்றது. எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சி நெறியில் இலக்கணமோ, எழுத்துப் பயிற்சியையோ நாம் வழங்குவதில்லை மாறாக எவைபவர்களுடன் உடையாடற் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலமே ஆங்கிலம் பழக்கப்படுத்தப்படுகின்றது. இது குழந்தைகள் தம் தாய்மொழியைப் பழகுவதை அடிப்படையாகக் கொண்டது.

எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சியில் இணைந்த அனைத்து மாணவர்களும் தற்போது ஆங்கிலத்தில் சரளமாக பேசுகின்றனர். நீங்களும் இப்பயிற்சி நெறியில் இணைய விரும்பினால் (25.03.2012) இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I 08 - 10 am பிரிவு III 01 - 03 pm
பிரிவு II 10 - 12 am பிரிவு IV 03 - 05 pm

03 மாத பயிற்சிநெறிக் கட்டணம்
ரூபா 3000.00

பயிற்சி நெறி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படுவதோடு, மூன்று மாத பயிற்சி நிறைவில் உங்களால் ஆங்கிலத்தில் சரளமாக பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பித் தருவதற்கான உத்தரவாதம்.

SAAMSON ENGLISH 279, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம், (ஆஸ்பத்திரி பின்புறம்)
தொ.பே. 077 621 4567

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் சம்பளத்துடனான வேலைவாய்ப்புகள்

O/L A/L ? Pass / Fail
CIMA-UK 50% off Course fee
Software Engineering
BIT University of Colombo Sem 1,2,4,5 & Project
Multimedia Adobe



SMS your name & course to 772 395 895 & Get Scholarship
USA, UK, பல்கலைக்கழகங்களில் Master Degree
Closing Date 24.03.2012
Government Scholarship.
MCS Supported By UNDP/JRRP
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் நேரில்,
324, Palaly Road,Campus Junction,Jaffna.
Free : BCS-UK , IELTS / TOEFL, CISCO-CCNA , Diploma courses..

**BIT Semester 2**
**ஆரம்பம்**
திகதி:-24-03-2012
நேரம்:-09.00am
BIT CORNER Professional ICT Education
# 14, Palaly Rd,Thirunelvely Junction, Jaffna.
0212219282 / 0776621745

அனைத்து கற்கை நெறிகளுக்குமான
புதிய பிரிவுகள் ஆரம்பம்
**24.03.2012**
**26.03.2012** காலை 10.00 மணி
IIS INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி , யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831

**MA, Mcom, Msc, MBA, PG DIP**
காமராசர் பல்கலைக்கழகம் - மதுரை (வெளிவாரி)

மேற்படி பல்கலைக்கழகத்தினால் 2012ஆம் ஆண்டு மார்கழி மாதம் பரீட்சை எடுப்பதற்கான புதிய பதிவுகள் கோரப்பட்டுள்ளன.

**MA**ல் பொருளியல், வரலாறு, அரச அறிவியல், தமிழ், ஆங்கிலம், பொது நிர்வாகம், சமூகவியல், சமயமும் தத்துவமும், Journalism & Mass Communication ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவு செய்ய முடியும்

**Mcom**ல் Commerce, Banking ஆகியவற்றில் ஒன்றினை தெரிவு செய்யமுடியும்.

**PG DIP**ல் ஒரு வருடக் கற்கைநெறியாக Journalism & Mass Communication Management, Management, Marketing Management, Hospital Computer Application ஆகியவற்றிலும் ஒன்றினை தெரிவு செய்யமுடியும்.

குறிப்பு: 2012ஆம் ஆண்டு வைகாசி மாதப் பதிவினை மேற்கொண்டவர்களுக்கான பரீட்சை விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன. பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 25.03.2012 முன்னர் எமது காரியாலயத்தில் விண்ணப்பிக்க முடியும்.

* இப்பட்ட நெறிகளானது இலங்கைப் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.

பரீட்சைகள் யாவும் புதிய உயர்கல்லூரி பரீட்சை மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். இணைப்பாளர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், தொ.பே. 021 222 8148.
புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**மணல் விற்பனைக்குண்டு**

நாற்பது வருடங்களாக கட்டிட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.

4 டிரக்டர் - 24000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 -38/-)

தொடர்புகளுக்கு
கண்ணா
0776766499

**ஆள் தேவை**

வன்னியில் A9 வீதியில் கட்டப்படவுள்ள கட்ட வேலையை மேற்பார்வை செய்யக்கூடிய அனுபவமுள்ள சிங்களம், தமிழ் நன்கு பேச/எழுதத் தெரிந்த 45 வயதுக்கு மேற்பட்ட நற்குணமுள்ள ஆண் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 0773348972, 0750394708

**Diploma in Singalam**
MCS முழு தேர்ச்சி+சான்றிதழ்
Supported By UNDP/JRRP
324,Palaly road, Parameswara junction,Jaffna
SMS your name & course to 772 395 895 & Get Scholarship

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.